(104)
RR 1977

திருக்கோயில்

தொகுதி 1976 பகுதி 1

ARCHIVES AND HISTORICAL RESEARCH
2 மார்ச் 1977
EGMORE, MADRAS-8.



திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயிலில், தமிழக ஆளுநர் மேதகு மோகன்லால் சுகாதியா அவர்களும், முன்னாள் முதல்வர் மாண்புமிகு திரு. எம். பக்தவத்சலம் அவர்களும், விழா நிகழ்ச்சிகளிற் கலந்து கொள்ளுதல். தவத்திரு சுவாமி இராமதாசர் அவர்களும், உதவியாணையர்—நிர்வாக அதிகாரி திரு. என். எஸ். இராமச் சந்திரன், B.A., B.L., அவர்களும் உடனுள்ளனர்.

மதுரை மாவட்டம், நிலக்கோட்டை வட்டம், சோழவந்தான் அருள்மிகு ஜனகநாராயணப் பெருமாள் கோயில் சார்பில், கட்டப்பெறும் கல்யாண மண்டபத்திற்கு, நமது அறநிலைய ஆணையர் திரு. எம். கே. பாலசுப்பிரமணியம், I. A. S., அவர்கள் அடிக்கல் நாட்டுதலும், முன்னாள் நீதிபதி திரு. என். கிருஷ்ணசுவாமி ரெட்டியார், அவர்கள் தலைமையில் அவ்விழாவில் உரை நிகழ்த்துதலும். [24—10—76]

(104) 85

COMMISSIONER OF TAMIL NADU
ARCHIVES AND HISTORICAL RESEARCH
2 மார் 1977
EGMORE, MADRAS-8.

திருக்கோயில்

மலர்: 20 நள ஆண்டு—மார்கழித் திங்கள் டிசம்பர்—1976 மணி: 3

சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்!

800 009
15861

''திருக்கோயில்'' திங்கள் இதழின் 'சந்தா தாரர்'களாகச் சேர விருப்பமுள்ளவர்கள்,

திரு. ஆணையர்,
அறநிலைய ஆட்சித் துறை,
சென்னை—600 034

என்னும் முகவரிக்கு ரூபாய் பன்னிரண்டு (12) அனுப்பி, எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

அந்தந்த வட்டார அறநிலைய உதவி ஆணையர்களின் அலுவலகங்களிலும் சந்தா வைச் செலுத்திச் சந்தாதாரராகப் பதிவு செய்து கொள்ளலாம்.

இதழ்கள் தவறுது கிடைத்திடச் சந்தா தாரர்கள் முழு முகவரியைத் தெரிவிக்க வேண்டுமம். முகவரி மாற்றத்தை உடனுக் குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

எல்லா ஊர்களுக்கும் முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.

ஆண்டுச் சந்தா ரூ. 12/- தனி இதழ் ரூ. 1/-

பொருளடக்கம்

திருமயிலைப் புராணம் —ஆசிரியர்.

தலவரலாற்றுக் குறிப்புகள் —ஆசிரியர்.

ஆறுபடைவீடுகள்
—திரு. கி. வா. ஜகந்நாதன், M.A.,

சிறப்புடைய புராணங்கள்
—திரு. ந. ரா. முருகவேள், M.A.,M.O.L.

திருச்சிற்றம்பலக் கோவையார் —ஆசிரியர்.

வீடணன் விரும்பிய அரசு
—திரு. கி. வா. ஜகந்நாதன், M.A.

கம்பர் கவிநயம்
—புலவர் திரு. கு. பாலசுந்தர முதலியார்.

திருக்குறளின் திட்பநுட்பம்
—திரு. ந. ரா. முருகவேள், M.A.,M.O.L.

சிந்தனையும் தத்துவமும்
—டாக்டர் திரு. T.M.P. மகாதேவன், M.A.,Phd.

வாலி வழக்கு
—திரு. புரிசை சு. முருகேச முதலியார்.

ஆசிரியர்: ந. ரா. முருகவேள், M.A., M.O.L.,

"என் கடன் பணி செய்து கிடப்பதே"

திருமயிலைப் புராணம்

பாயிரச் சுருக்கம்
(காப்பு)

கஞ்சர் ஆன நத்தவர், கதிர்பொங்கு ஆழிகால்
நஞ்சர் ஆன நத்தவர், நாளும் வாழ்த்திடும்
குஞ்சர் ஆன னப்பெருங் கோவின் பொற்சரண்
வஞ்ச ரால்தம் நற்கவி வழாது வாழ்த்துவாம்

கஞ்சர்—பிரமதேவனும்; ஆன—அவர்க்கு மேலாகிய ; நத்தவர்-பாஞ்சசன்னியம் என்னுஞ் சங்கினை ஏந்திய விஷ்ணுவும்; கதிர்பொங்கு—பிரகாசம் மிக்க; ஆழி—பாற்கடலானது ; கால்—கக்கிய; நஞ்சர்—விஷத்தையுண்ட பரம சிவத்திற்கு; ஆனநத்தவர்—மேலான தவத்தை யுடைய அகத்திய முனிவர் முதலாகிய மகரிஷி களும்; நாளும்—நாள்தோறும்; வாழ்த்திடும்—தோத்திரம் செய்யும்; குஞ்சர் ஆனனம்—யானை முகத்தினையுடைய; பெருங்கோவின்—பெரிய கடவுளாகிய விநாயகரது ; பொன்—பொலிவாகிய; சரண்—திருவடிகளை; வஞ்சரால்—அழுக்காறுள்ளவர்களால் ; நம் —எம்முடைய; நற்கவி—நல்ல பாடல்கள்; வழாது—குற்றங்களைப் பொருந்தாத வண்ணம் கிருபை பாலித்தருள வேண்டுமென்று; வாழ்த்துவாம்—வாழ்த்துதல் செய்வாம்.

கபாலீசர் துதி

பொன்பூத்த கமல மலர்ப் புத்தேளும்
பூவைவண்ணப் புனித னுதித்
தென்பூத்த கடவுளருஞ் சதுர்மறையும்
பரவஅருள் திமிலேற் றண்ணல்
கொன்பூத்த மயிலைநகர்ப் பூம்பாவை
யீசனெனும் குழகன் ஞான
மின்பூத்த திருவடித்தா மரையை யன்பின்
வணங்கியென்றும் வியந்து வாழ்வாம்.

பொன்னிற முள்ளதாகிய செந்தாமரை மலரின்கண் வீற்றிருக்கும் பிரமதேவனும், காயாம் பூவின் நிறமுள்ள மாயவன் முதலாகிய அழகு பொருந்திய பல தேவர்களும், நான்கு வேதங்களும் துதி செய்ய, அருள் மயமாகிய முசுப்புள்ள இடப வாகனத்தை யுடைய பெருமை பொருந்திய, திருமயிலையில் வீற்றிருந் தருளும் பூம்பாவையீசன் என்கிற கபாலி நாத ருடைய அருளொளி தயங்கிய திருவடித் தாமரை மலர்களை, அன்புடனே நாள்தோறும் பணிந்து, துதி செய்து, வீட்டுலகப் பேரரசை அடைந்து வாழ்ந்து கொண்டிருப்பாம்.

கற்பகவல்லித்தாயார் துதி

கொங்குலாம் மலர்க்குழலும் பிறைநுதலுங்
கயல்விழியும் குமுத வாயுஞ்
சங்கமா மணிமிடறுங் கழைப்புயலும்
மலர்க்கரமுந் தரள மாலைத்
துங்கமா கிரிமுலையுங் கொடியிடையும்
பதுமஅடித் துணையு முள்ள
எங்கள்நா யகியையெழின் மயிலையிற்கற்
பகக்கொடியை யிறைஞ்சி வாழ்வாம்.

இயல்பான வாசனை தங்கிய அளகபாரமும், இளந்திங்களை யொத்த திருநுதலும், சேல் மீனையொத்த அருள் நோக்கமும், செவ்வல்லி மலரை யொத்த திருவாயும், வலம்புரிச் சங்கினை யொத்ததாகி அழகு பொருந்திய கழுத்தும், பசுமையாகிய இளமூங்கிலையொத்த புயமும், செந்தாமரை மலர்களையொத்த கரங்களும், மலர்களையுடைய மாலையணிந்த பரிசுத்தமுள்ள பொன்மலையாகிய மகமேருவையொத்த தனங் களும், பூங்கொடி போன்ற இடையும், செந் தாமரை மலரையொத்த இரண்டு திருவடிகளு முள்ள, எங்கள் நாயகியாகிய அழகு பொருந்திய திருமயிலையில் வீற்றிராநின்ற கற்பகவல்லித் தாயாரை வணங்கி வாழ்வோம்.

ஈண்டுக் 'கொங்குலாமலர்க்குழல்' என்பதற்கு, இயல்பான வாசனை தங்கிய அளகபார மென்றதனால், தேவருலகில் வாழும் தேவமாதர் களுடைய அளகபாரங்கள் செயற்கை வாசனை யுள்ளதென்பது கருத்தாம். பார்வதி தேவி யார் நோக்கத்தைச் சேற்கெண்டைக்கு ஒப்பிடு வதற்குக் காரணம் யாதெனில், சேல் மீன் நீரி னிடத்து முட்டையிட்டுக் கொண்டுபோய்க் கடைகியில் திரும்பிப் பார்க்கும் அளவில் அப் பார்வை தங்கின மாத்திரத்தில் அந்த முட்டை களெல்லாம் உயிர் பெற்றுத் தாயினுருவம் அடைதல் போலப் பார்வதி தேவியாருடைய கிருபா நோக்கம் அடியார்களிடத்தில் பதியு மாகில் ஞானசொரூபம் பெற்றுச் சிவமாவார் கள் என்பதாம். மீனாட்சி என்பதற்கும் இதுவே பொருளாகுமாறு காண்க.

கூத்தாடும் விநாயகர் துதி

நல்வளஞ்சே ரருட்புலவ ரிருசெவிகட்
கமிர்தென வெந்நாளு மோங்கச்
சொல்வளமும் பொருள்வளமும் அளித்திந்நூற்
கிடையூறு தொலைத்தா ளென்றே
பல்வளமும் பெரும்புகழும் படைத்திலகும்
மயிலைநகர் பதியாய் வாழும்
வெல்வளஞ்சேர் கூத்தாடும் ஐங்கரக்குஞ்
சரத்திருதாள் வியந்து வாழ்வாம்.

நன்மை பொருந்திய கல்விச் செல்வ வள முடையவர்களாய்க் கடவுளருள் பெற்று விளங் கும் புலவர்களுடைய இரண்டு செவிகளுக்கும் அருமையாகிய அமுதம்போல் எந்நாளும் இப் புராணம் விருத்தியாகும்படி, சொல்வளமும் பொருள்வளமும் அருளிச் செய்து இந்நூலுக்கு இடையூறு வராமல் நீக்கி ஆட்கொண்டருள் வாயாக என்று, பல வளங்களும் அளவிடப் படாத புகழும் பெற்று விளங்கா நின்ற திரு மயிலே யென்னும் தலமே தமக்கு வாசத்தலமாக வாழ்ந்து கொண்டிருப்பவரும், கஜமுகாசுரனை வென்ற வெற்றியாகிய வளப்பமும், ஐந்து கரங் களும் யானை முகமும் உடையவரும் ஆகிய கூத்தாடும் விநாயகரின்இரண்டு திருவடிகளையும் தரிசித்து ஆனந்தமடைந்து வாழ்வாம்.

முதலில் விநாயகர் துதி சொல்லி, மறுபடி யும் விநாயகர் துதி சொல்லியதற்குக் காரணம் என்னவெனில், விநாயகர் திருவவதாரம் செய்த போது பரமசிவம் மகிழ்ந்தருளி அவருக்குக் கணங்களுக்கெல்லாம் பதியாயிருக்கும் முதன் மைத் தன்மை கற்பித்தருளி, இனி தேவர் முத லானவர்கள் யாதொரு காரியஞ் செய்யத் தொடங்கினாலும் உன்னைப் பிரார்த்திக்காவிடில் அந்தக் காரியம் இடையூறுபட்டுப்போவதென்று கட்டளையிட்டு இருக்கும் முறைமைப்படி, முத லில் இந்நூலாசிரியர், கணபதி துதி கூறினர். அதன் பின்னர்த் தந்தைதாய்மைந்தர் என்னும் நிலைபற்றி முறையே பரமசிவம்பார்வதி தேவி யார் விநாயகர் சுப்பிரமணியர் ஆகியோர்க்கு வணக்கம் கூறினர். நூல் முட்டின்றி இனிது முடிதல் வேண்டி, முதற்கண் பொது வகையான விநாயக வணக்கம் கூறினர். அதன்பின் எடுத்துக் கொண்ட நூற் பொருளுக்கு இயை யும் ஏற்புடைமையும் பற்றித் தல விநாயகர் ஆகிய கூத்தாடும் விநாயகருக்கு வணக்கம் கூறினர் என்க.

சிங்காரவேலர் துதி

நீர்பூத்த சடாமகுடத் தெம்மானீன்று
அளித்தவொரு நேயன் தன்னைச்,
சீர்பூத்த குருமணிமா மகுடமணிந்து
இதண்மணிப்பாற் சென்ற தேவை,
வார்பூத்த முலையுமையாள் திருமுலைப்பால்
பருகியவாய் மணியை, ஞான
நீர்பூத்த சிங்கார வேலன்எனுங்
கண்மணியை, இறைஞ்சி வாழ்வாம்

கங்கா நதி பொருந்திய சடாமகுடத்தை உடைய பரமசிவம் ஈன்றருளிய ஒப்பற்ற நேச முள்ளவரும், சிறப்புப் பொருந்திய நிறந் தங்கிய பெரிய இரத்தினங்கள் பதித்துள்ள கிரீடம் அணிந்து தினைப் புனத்துப் பரண்மேற் கிளிகள் முதலிய பறவைகளை ஓட்டிக் கொண் டிருந்த மணிபோன்ற வள்ளி நாச்சியாரைத் திருமணம் செய்துகொள்ள விருப்பமடைந்து சென்றவரும், கச்சணிந்த தனங்களையுடைய பார்வதி தேவியாருடைய திருமுலைப்பால் அமிர் தமுண்ட வாயினையுடைய மணி போன்றவரும், ஞான சொரூபியும் ஆகிய அழகு பொருந்திய சிங்காரவேலன் என்று சொல்லப்பட்ட எங்கள் கண்மணி போன்ற சுப்பிரமணிய சுவாமியை வணங்கி வாழ்வாம்.

திருஞான சம்பந்த சுவாமிகள் துதி

வீழியிதழ் மடந்தைதன்மெய் யத்தியைப்பெண்
அரசாக்கும் வேந்தை, வாவும்
ஆழிபுடை சூழ்மதுரை யமணிருள்கீண்
டெழுந்தசுட ரவனை, யவ்வூர்
வாழிறைவன் வெப்பகல அருளமுதம்
பொழிந்தவியன் மழையை, ஞானக்
காழிநகர் மறையோனைக், கவுணியர்தங்
குலக்கொழுந்தைக், கருதி வாழ்வாம்

வீழிக்கனி போன்று சிவந்த இதழ்களை யுடைய ஒரு பெண்ணின் சரீரத்து எலும்பை முன்போலப் பெண்ணுருவமாகச் செய்த இறை வரும், அலைகள் தாவி வரும்படியான சமுத்திரம் சூழ்ந்த மதுரையிலிருந்த சமணர்களாகிய இருளைக் கிழித்து உதயமாகிய ஞானசூரியரும், அந்த மதுரைப் பட்டணத்தில் அரசு செய்து கொண்டிருந்த கூன்பாண்டிய அரசனுக்குத் தோன்றிய சுரநோய் ஆகிய கொடிய வெப்பம் தீரும்படி அருள் அமிர்தமாகிய மழையைப் பொழிந்த பெரிய மேகம் போன்றவரும், மெய்ஞ்ஞானிகள் நிறைந்துள்ள சீர்காழி என் னும் தலத்தில் திருவவதாரம் செய்த அந்தணச் செல்வரும், கவுணியர் குலக் கொழுந்தாயிருப்ப வருமாகிய திருஞான சம்பந்த சுவாமிகளைத் தியானித்து வாழ்வாம்.

திருநாவுக்கரச சுவாமிகள் துதி

இற்றூணின் மரகதத்தி னெளிபகலும்
இருள்காட்ட எழுந்து காமன்
விற்றூணி மலரெடுத்து விளையாடுந்
திருவாமூர் விளங்க வந்தோன்
கற்றூணைப் பிடித்துவளை கடல்கடந்தோன்
இருபாத கமலம் என்னும்
பொற்றூணைப் பிடித்துநமக் கிடராழி
கடந்துமுத்தி புகுத லாமே.

வீடுகளிற் பொருந்திய தூண்களிற் பதிக்கப் பட்டிருக்கும் மரகத ரத்தினங்களின் பிரகாச மானது, பகற் காலத்திலும் இருளைக் காட்டுத லால், மன்மதன் எழுந்து கரும்பு வில்லும் அம்ப ருத்தூணியும் புட்ப பாணங்களும் எடுத்துக் கொண்டு, அங்கிருக்கும் வீடுகள்தோறும் இரதி தேவி உல்லாசமாய் விளையாடும்படியானத் திரு வாமூர் என்னும் திவ்வியத் தலமானது உலக மெங்கும் பிரகாசிக்கும்படி, அதில் திருவவ தாரஞ் செய்தவரும், கற்றூண் தெப்பமாய் மிதப்பஅதைப்பற்றிக்கொண்டுசமுத்திரத்தைக் கடந்தவருமாகிய, திருநாவுக்கரசு சுவாமிகளு டைய அழகிய பொன்னிறம் வாய்ந்த இரண்டு திருவடித் தாமரை மலர்களாகிய அழகுள்ள தூண்களைப் பற்றிக் கொண்டு, நம்முடைய பிறவித் துன்பமாகிய சமுத்திரத்தைக் கடந்து வீடுபேறு என்னும் கரையைச் சேர்வாம். தூணை —துணை என்பதன் நீட்டல் விகாரம்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் துதி

அறைகழலா ரூரர்தனை மணிமறுகில்
தூதுவிடுத் தருளி னனை
நிறைவழுவாப் பரவைபடிந் துயர்ந்தமுலைக்
கிரிசார்ந்து நிலமே லோங்க
முறைதவருத் திருப்பதிக மாரிபொழிந்
திடும்புயலை முதிய ஞான
மறையவனை எமையாளும் செந்தமிழ்ச்சுந்
தரனையாம் வணக்கம் செய்வாம்

ஒலிக்கா நின்ற வீரக்கழலே அணிந்த திரு வடிகளையுடைய திருவாரூர் வீதி விடங்கப் பெரு மானே, இரத்தினங்கள் நிறைந்துள்ள திருவீதி யில் நடந்தருளும்படி பரவை நாச்சியாரிடத் துக்குத் தூதுபோக அனுப்பினவரும், நிறைகுறை யாத பரவையிடத்துப் படிந்து உயர்ந்த தன மாகிய மலையில் சார்ந்து, பூமியில் உள்ளார் உயர்வடையும்படி முறைமை தவறுத தேவாரப் பதிகமாகிய மழை பொழிந்தருளும் மேகம் போன்றவரும், மெய்ஞ்ஞானம் நிறைந்த ஆதி சைவப் பிராமணரும், எம்மை அடிமையாகக் கொண்டருளுபவரும், செந்தமிழுணர்ந்தவரும் ஆகிய சுந்தரமூர்த்தி சுவாமிகளை வணக்கம் செய்வாம்.

மாணிக்கவாசக சுவாமிகள் துதி

மாதுபா கனுக்குமெய் வாச கத்தமிழ்
ஓதியே மூகையை யோது வித்தருள்
சீதவார் பொழில்திகழ் சேண்தொ டும்திரு
வாதவூர் அடிகளை வணக்கஞ் செய்குவாம்.

பார்வதி தேவியாரை இடப் பாகத்தில் உடைய பரமசிவத்துக்குத் தோத்திரமான உண்மைப் பொருள் நிறைந்த திருவாசகமென்னுந் தமிழ் வேதத்தைப் பாடித் துதித்து, ஊமைப் பெண்ணைப் பேசும்படி செய்தருளியவரும், குளிர்ச்சி பொருந்தியதாய் உயர்ந்து விளங்கா நின்ற ஆகாயத்தை யளாவும்படியான சோலைகள் சூழ்ந்த திருவாதவூர் என்னும் தலத்தில் திருவவதாரஞ் செய்தருளியவரும், ஆகிய மாணிக்க வாசக சுவாமிகளை வணங்குவோம்.

திருநந்திதேவர் துதி

வடகயிலைத் திருவாயிற் காவலனைச்
சிலாதரன்றன் மகவைத் துத்திப்
படவரவை யரைக்கசைத்த பரமனைச்செஞ்
சடையின்மதி பதித்த கோவைத்
தடவரைக்கைச் சிலையெம்மான் திருமுன்னர்
நெருங்குமலர்த் தவிசோன் ஆதிக்
கடவுளர்மேற் படும்பிரம்பொன் றுடையதிரு
நந்திதனைக் கருத்துள் வைப்பாம்.

கயிலாச கிரியில் பரமசிவம் திருவோலக்க மாக எழுந்தருளியிருக்கும் திருக்கோயிலின் சிறப்புள்ள முதற் கோபுர வாயிற் காவலா யிருப்பவரும், சிலாதர முனிவருடைய திருமைந் தரும், புள்ளிகள் பொருந்திய சர்ப்பத்தைஅரை யினிடத்துக் கச்சமாக அணிந்திருப்பவரும், செம்மை நிறமுள்ள சடாமகுடத்தில் இளந் திங்களை அணிந்த இறைவரும், பெரிய மகா மேருவை வில்லாக வளைத்தேந்தியதிருக்கரத்தை உடைய எமது பெருமானுருமாகிய, கயிலாச பதியின் அழியாச் செல்வமுள்ள சந்நிதானத்தில் தரிசனஞ் செய்ய வந்து நிறைந்திருக்கும் தாமரை மலராகிய ஆசனத்தையுடைய பிரம தேவன் முதலான தேவர்கள் முடியின் மேற் படத் தக்க, ஒரு வெள்ளிப் பிரம்பைக் கையில் ஏந்தியவருமான திருநந்தி தேவரை நமது கருத்துள் வைத்துத் தியானஞ் செய்வாம்.

தென்கயிலை யென்றுஒரு தலமிருப்பதனால், வடகயிலை என்றூர். நந்திதேவர் திருவையாறு என்னுந் தலத்திலிருந்த சிலாதர முனிவ ருடைய தவத்தினால் அவருக்குப் புத்திரராகத் திருவவதாரஞ் செய்து பரமசிவத்தை நோக்கித் தவஞ் செய்து முதற் கோபுரவாயிற் காவற் றொழிலும் வெள்ளிப் பிரம்பும் சுரிகையும் பரம சிவம் பிரசாதித்தருளப் பெற்றுக் கொண்டது மன்றிச் சாரூப்பியமும் பெற்றுக் கொண்டார்.

பைரவமூர்த்தி துதி
(வேறு)

செயிரவச் சூழ்ச்சிசெய் சீயச் சோரியை
அயிலென்றத் தன் இன்வரம் அருளும்ஐயனைச்
கயிரவப் பழனஞ்சூழ் காழி மாநகர்
வயிரவக் கடவுளை வணக்கஞ் செய்குவாம்

குற்றம் பொருந்திய பயனில்லாத தாகிய உபாயத்தைச் செய்த நரசிம்மத்தினுடைய உதிரத்தைஉண்ணும்படி,பரமசிவம் இனிதாகிய வரம் அருளப் பெற்றுக் கொண்ட கடவுளாகிய, செவ்வல்லிகள் மலர்ந்திரா நின்ற கழனிகள் சூழ்ந்த பெருமை தங்கிய சீகாழி என்னுந் தலத்தில் வீற்றிருந்தருளும் பைரவ மூர்த்தியை யாம் வணங்குதல் செய்வாம்.

இரணியனைக் கொல்ல நேராக நின்று போர் செய்து கொல்லாமல் சடுதியில் ஒரு தூணினின்றும் புறப்பட்டுக் கொன்றமையால், ''செயிர் அவம் சூழ்ச்சி செய்சீயம்'' எனவும், பரமசிவம் பைரவனை உண்டாக்கி நரசிங்கத்தை அடக்கும்படி வரம் அருளப் பெற்றுக் கொண்டு அந்தநரசிங்கத்தைக்கொன்றமையால்''அத்தன் இன்வரம் அருளும் ஐயனை'' எனவுங் கூறினர். அந்தப் பைரவ மூர்த்தி சீகாழி என்னும் தலத்தில் திருக்கோயில் கொண்டு வீற்றிருந்தருளுகின்றார். அவர் அந்த நரசிம்மத்தை மர்த்தனஞ் செய்து அதன் தோலினைச் சட்டையாகப் போர்த்துக் கொண்டமையால் அவருக்குச் சட்டைநாதர் என்னும் ஒரு பெயர் வழங்குகின்றது.

சரசுவதி துதி

நிலமுதற் படைத்தவன் நேய நாவினின்று
இலகுதன் றுணையாமெழில் கொள்பாரதி
யுலவும் வெண்கமல மேலுறையும் வாணியன்
மலரடி முடிமிசை வணக்கஞ் செய்குவாம்

ஆதியில் பூலோகத்தைப் படைத்தருளிய பிரமதேவனுடைய மனைவியும், அவன் நாவில் இருப்பவளும், அழகுள்ள பாரதி என்னும் நீரினிடத்து அசைந்து கொண்டிருக்கத் தக்க வெண் தாமரைப் பூவினிடத்து வாசமாயிருக்கும் வாணி என்னும் பேருள்ளவளுமாகிய சரசுவதியினுடைய திருவடிகளை வணங்குதல் செய்வோம்.

காரைக்காலம்மையார், கண்ணப்பநாயனார், மங்கையர்க்கரசியார், மற்றுமுள்ள திருத்தொண்டர்கள் துதி

சங்கரற் கன்பாய்ப் பாடல்
சமைத்தபே யம்மை தானும்
அங்கரற் கம்பாற் கண்ணை
யகழ்ந்தப்பி னேன்பொற் றூணும்

மங்கையர்க் கரசி பாத
வனசமும் மற்று முள்ள
துங்கமெய்த் தொண்டர் பாதத்
துகளும்நந் தலைமேற் கொள்வாம்.

பரமசிவனிடத்தில் அன்புடையவராய் அற்புதத் திருவந்தாதி, திருவிரட்டை மணி மாலை என்னும் பிரபந்தமோதித் துதித்துப் பேயுருவம் பெற்ற காரைக்காலம்மையாருடைய திருவடித் தாமரை மலர்களையும், திருக்காளத்தி நாதருக்கு அம்பினாலே தங்கண்ணைப் பெயர்த்து அப்பிய கண்ணப்ப சுவாமிகளுடைய பொலிவுற்ற திருவடிகளையும், மங்கையர்க்கரசியார் என்னும் பாண்டிமாதேவியினுடைய திருவடித் தாமரை மலர்களையும், மற்றுமுள்ள நாயன்மார்களாகிய திருத்தொண்டர்களுடைய பாத தூளிகளையும் எம்முடைய சிரசில் தரித்துக் கொள்வாம்.

சண்டேசர் துதி

மண்ணியெனும் நதிநடுவில் மணல்குவித்துச்
சிவலிங்க வடிவம் ஆக்கித்
தண்ணியஆன் பால்முடிமேல் ஆட்டுதலுந்
தாதைசினந் தலைமேற் கொள்ளத்
துண்ணெனவே யெழுந்துசுடர் மழுவாலே
அவன்முனைத் துணித்த வீரத்
திண்ணியனைச் சண்டேசன் றனைப்பாதம்
பணிந்தன்பாற் சிந்தை செய்வாம்.

மண்ணியென்கிற நதி நடுவில் மணலைக் குவித்துச் சிவலிங்க வடிவமாகச் செய்து, குளிர்ச்சி பொருந்திய பசுவின் பாலைச் சிவலிங்கப் பெருமான் திருமுடியின் மேல் திருமஞ்சனம் செய்யுமளவில், முன்னமே வந்து மறைந்திருந்த தம்முடைய தந்தை கண்டு மிகுந்த சினமுள்ளவராய்த் திருமஞ்சனத் திரவியங்களைத் தன் காலால் தள்ளிவிட, அங்கிருந்த தாற்றுக்கோல் கோடரிபோல் ஆக, அதைக் கொண்டு அவர் காலை அறும்படி வெட்டிய ஞான வீரமுள்ள சிவபக்தி உறுதிப்பாடுள்ளவராகிய சண்டேச நாயனாருடைய திருவடிகளை அன்புடனே பணிந்து தியானஞ் செய்வாம்.

இவர் திருவவதாரஞ் செய்த தலம், திருச்சேய்ஞ்ஞலூர். இவர் காசிப கோத்திரத்து வைதிகப் பிராமணர். பூசை செய்த தலம் ஆப்பாடி. திருமண்ணியாற்றின் கரையோரத்தில் உள்ளது. இந்த இரண்டு தலமும் கும்பகோணத்துக்குச் சமீபத்தில் இருக்கின்றன.

ஆதிசைவர் துதி

புத்தமுதம் அனையதமிழ் பொலியும்இசை
வளர்மயிலா புரியென் றோதும்
முத்திநக ரைத்தினமும் நான்மறையா
கமம்தெரிந்த மூதூர் வைகுஞ்
சுத்தசிவ வேதியரைப் பரசிவகா
ரியபரராய்த் துகளற் றோங்கும்
உத்தமசை வத்தவரைத் தொழுதவர்தாட்
கமலம்எம துளத்தில் வைப்பாம்.

புதிய அமுதம் போன்ற தமிழ்ப் பாடல்களால் விளங்கும் புகழ் வளருகின்ற மயிலாபுரி என்று சொல்லப்பட்ட முத்தித் தலத்தையும், நான்கு வேதங்களையும் இருபத்தெட்டு ஆகமங்களையும் உணர்ந்து வாசஞ் செய்யும் பரிசுத்தமுள்ள சிவப் பிராமணர்களையும், பரசிவத்தை ஆராதிக்கும் காரிய பரராய்க் குற்றம் அற்று மேலாகிய உத்தம சைவ சமய முனிவர்கள் ஆகிய ஆதி சைவப்பிராமணர்களையும் பணிந்து, அவர்களுடைய திருவடித் தாமரை மலர்களை எமது உள்ளத்தில் வைத்துக்கொண்டு தியானஞ் செய்வாம்.

ஆதி சைவர்களுக்கு நிருவாண தீக்கை செய்யும்போது தத்துவ சோதனை முதலானவை நிகழ்தலே சந்நியாசத்துவம் என்கிற சம்பிரதாயத்தைப் பற்றி அவர்களைச் 'சைவத்தவர்' என்றார். தமிழ்ப் பாடலென்றது தேவாரப் பதிகங்களைக் குறிப்பிடும்.

அவையடக்கம்

செப்பும்இயற் றமிழ்களெலாம் அரியயனே
முதலாய தேவர்க் கோதி
ஒப்புவிக்க அறியாமல் அரனிடத்தே
வாதுவாதத் துரையா நின்றேன்;
மைப்பரவை தரும்விடமும் நீடும்என்பும்
ஆடரவும் வனப்பாய்க் கொண்டார்,
அப்பொறுமை யுடையவர்என் புன்கவியும்
பொறுப்பரென அறிந்து தானே.

என்னால் சொல்லப்படுகின்ற இலக்கணக் குற்றமில்லாத தமிழ்ப் பாடல்களை எல்லாம் திருமால் பிரமதேவன் முதலாகிய தேவர்களுக்குச் சொல்லி, ஒப்புவிப்பதற்கு உணர்ச்சியில்லாமல், பரமசிவத்தைக் குறித்தே மீட்டும் மீட்டும் சொல்லித் துதி செய்து கொண்டிருக்கிறேன். அதேனென்றால் பாற்கடல் கொடுத்த விஷத்தையும், தேவர்களுடைய பெரிய எலும்புகளையும், படம் விரித்தாடா நின்ற சர்ப்பங்களையும், விருப்பத்துடன் அணிந்து கொண்டவராகிய அந்தப் பொறுமையை யுடைய பரமசிவம், கல்வியுணர்ச்சி சிறிதுமில்லாத அடியேன் கூறுகின்ற புன் கவிகளையும் ஏற்றுக் கொள்வார் என்கிற துணிவினையறிந்து.

மெய்வ ளர்ந்திட வேந்தரும் வாழ்ந்திடத்
தெய்வ மாமறை நீதி சிறந்திட
மைவ ழாது மலியப் பொழிந்திடச்
சைவம் ஓங்குக தாரணி யெங்குமே

இவ்வுலகமெங்கும் சத்தியம் என்பது வளர்ச்சியடையக் கடவது. அரசர் வாழக் கடவர். தெய்வத் தன்மையுடையனவாய்ப் பெருமை பொருந்திய வேதங்களாற் சொல்லப் படுகின்ற நீதியானது, சிறப்புடையக் கடவது. மேகங்கள் காலந் தப்பாமல் வளங்கள் நிறையும் படி மழையைப் பொழியக் கடவது. சைவ சமயமானது மேன்மையை அடையக் கடவது.

நற்ப ரஞ்சுடர் ஆகிய குமரவேள் நளினப்
பொற்ப தங்கள்தன் னுளங்கொண்டு அன்னவன்
புகன்ற
சிற்ப ரன்தரு நூல்வகை யாவையும், கொண்ட
கற்ப கம்திகழ் பொதியமா முனிவனைக் கலந்தே

எல்லா நன்மையும் நிறைந்த மேலான சோதி சொரூபமாகிய சுப்பிரமணிய சுவாமியினுடைய செந்தாமரை மலர் போன்ற பொலிவுள்ள திருவடிகளைத் தனது உள்ளத்திற் கொண்டு தொழுது அந்தச் சுப்பிரமணியக் கடவுள் உபதேசித்தருளிய சைவ புராணங்களை எல்லாம் உணர்ந்து தம்முள்ளத்தில் நிறைந்து உள்ள பொதிய மலைவாசராகிய அகத்திய முனிவரிடத்தில் சனற்குமார முனிவர் முதலாகிய சிவ முனிவர்கள் சேர்ந்து.

முனிவர் அன்பொடு தொழுதவன் புகழெலாம்
மொழிந்தே
இனிய தோர்தலம் இயம்பென இரசித கிரிமேல்
புனிதன் வீற்றிருந் துமைக்கவன் புகன்றஅப் படியே
நனியு ரைத்தது மயிலை மாநகர்த் தனிநலனே

அந்த முனிவர்கள் அன்புடன் வணங்கி அகத்தியருடைய புகழையெல்லாம் எடுத்துச் சொல்லி ஆயிரத்தெட்டுச் சிவத் தலங்களுக்குள் மூர்த்திவிசேடமும் தலவிசேடமும் தீர்த்த விசேடமும் உள்ளதாகிய ஒரு தலம் எதுவோ, அதனை எங்களுக்குச் சொல்லியருள வேண்டுமென்று விண்ணப்பஞ் செய்ய, வெள்ளி மலையினிடத்தில் பரமசிவம் வீற்றிருந்து பார்வதி தேவியாருக்கு அருளிச் செய்த முறைமைப்படி, திருமயிலை என்னுந் தலத்தின் மான்மியம் அகத்தியராற் சொல்லப்பட்டது.

இத்தல விசிட்டம் முன்னே
பொழிப்பதாய் இசைத்த வாறும்
இத்தலத் துண்மை தன்னை
யிரசித கிரியின் பாங்கோர்
சித்திர மணியின் றெற்றிச்
சிகரமீ திருந்து நாதன்
உத்தமி பணிந்து கேட்ப
உரைத்திடத் துணிந்த வாறும்

ஆதிகாலத்தில் இந்தத் தலத்தினுடைய மேன்மை முழுவதையும் சொல்லிய முறைமையும், அன்னவாகனமுள்ள பிரமதேவனும், பர்வதராசன் புத்திரியாகிய பார்வதி தேவியாரும், சுப்பிரமணிய சுவாமிகளும், வேதங்களும் சுக்கிரனும் யாவராலும் சொல்லப்படுகின்ற கீர்த்தியுடைய அயோத்திமா நகரத்தில் அரசாட்சி செய்த இராமரும், நிலைபெற்றிரா நின்ற முனிவர்களும் முதலாகிய சிலபேருந் தொழுது அருச்சித்த முறைமையும்.

வரந்தரும் கபாலி தீர்த்தம்
வனப்புடன் பரிசித் தாலும்
பரந்தனை யளிக்குந் தீர்த்தப்
பான்மைக ளிசைத்த வாறும்
துரந்தவல் வினையை நீக்குந்
தொன்மையோர் தலத்தைச் சூழத்
திரம்பெறச் சிவால யங்கள்
செய்து பேறுற்ற வாறும்.

இஷ்டகாமியம் முதலாகிய வரங்களைத் தருகின்ற கபாலி தீர்த்தத்தினுடையவும், பரிசுத்தமுடன் பரிசித்தாலும் முத்தி நிலையைக் கொடுக்கும்படியான மற்றுமுள்ள தீர்த்தங்களினுடையவும், பெருமையைச் சொல்லிய முறைமையையும், உறுதியாகிய வினைகளைத் துரத்தி மீட்டுஞ் சேராதவண்ணம் நீக்குகின்ற பெரியோர்கள் அந்தத் தலத்தைச் சூழ அழியாமலிருக்கும்படிச் சிவாலயங்களைக் கட்டுவித்துப் பேறுபெற்ற முறைமையும்.

வாமனம் இலிங்கங் கூர்மம்
வராகமே மச்சம் காந்தம்
ஏமமில் பவுடி கம்பிர
மாண்டம் மார்க்கண்டம் சைவம்
ஆமிவைசிவ புராணம்ஐ
யிரண்டு; அரிக்கு நான்கு;
நாமம் பாகவதம் விண்டு
நார தீயங் காருடம்

வாமனம் இலிங்கம் கூர்மம் வராகம் மச்சம் காந்தம் மறைப்பில்லாத பவுடிகம் பிரமாண்டம் மார்க்கண்டம் சைவம் ஆகிய இப் பத்தும் சிவ புராணங்களாம். விட்டுணுவுக்கு நான்கு புராணங்கள்தாம். அவைகளின் பெயர் பாகவதம் வைணவம் நாரதீயம் காருடம்.

பாரதி கொழுநன் காதை
பதுமமே பிரமம் என்றுங்
கோரிரு வகைய; அங்கிக்
கொன்றென்ப ஆக்கி னேயம்;
பேரெழி லிரவிக் கொன்று
பிரமகை வர்த்த மென்றே
ஏருறு புராணம் மூவா
றென்பவை யிவை; யிவற்றுள்

சரசுவதியினுடைய கணவனுகிய பிரம தேவன் புராணம், பத்மம் பிரமம் என்று சொல்லப்படுகின்ற இரண்டு வகையினையுடையது. அக்கினி தேவனுக்கு ஒருபுராணமென்று பெரியோர்கள் சொல்லுவார்கள். அதன் பேர் ஆக்கினேயம். மிகுந்த பிரகாசத்தை உடைய சூரியனுக்கு ஒரு புராணமாம். அதன் பேர் பிரமகைவர்த்தம் என்று சொல்லுவார்கள். இவ்வாறு அழகு பொருந்திய புராணம்பதினெட்டாம். இப்பதினெட்டனுள் :

பொய்வைத்த உளத்திற் கெட்டாப்
புனிதனுர் புராணம் பத்திற்
சைவத்திற் காந்தந் தன்னிற்
றனித்தனி புகலுஞ் சீர்த்தி
மைவைத்த கண்டன் பாத
வலிமையால் மொழிபெ யர்த்தே
மெய்வைத்த வுளத்தர் காண
விளம்புவன் தமிழி னுலே

பொய்யன்புள்ளவர்கள் மனதுக்குளட்டாத பரமசிவனுடைய புராணம் பத்துக்குள், சைவ புராணத்திலும், காந்தபுராணத்திலும் தனித்தனியே சொல்லப்படுகின்ற திருமயிலை என்னும் தல மான்மியத்தை, கருமை தங்கிய கண்டத்தையுடைய பரமசிவனது திருவருட் பிரசாத உறுதியால் வடமொழியினின்றும் மொழி பெயர்த்து மெய்யன்புள்ளவர்கள் கண்டு மகிழும்படி தமிழினுலே சொல்லுகிறேன்.

—(தொடரும்)

தலவரலாற்றுக் குறிப்புகள்

(காவிரித் தென்கரைத் தலங்கள்)

1. திருவாட்போக்கி (சிவாயமலை) :

தேவாரம் பெற்ற 274 சிவத்தலங்களுள் சோழநாட்டில் மட்டும் 190 தலங்கள் உள்ளன. அவற்றுள் காவிரியின் வட கரையில் 63 தலங்களும், தென்கரையில் 127 தலங்களும் உள்ளன. சோழநாட்டுத் தலங்களுள் 64-வது தலமாகவும், காவிரித் தென்கரைத் தலங்களுள் முதல் தலமாகவும் திகழ்வது திருவாட்போக்கி என வழங்கும் சிவாயமலை. இது திருச்சிமாவட்டம் குழித்தலை தாலுகாவில் குழித்தலையிலிருந்து மணப்பாறை செல்லும் சாலையில் 5 கல் தொலைவில் உள்ளது. குழித்தலை இரயில் நிலையத்திலிருந்து பஸ் வசதியும் முண்டு. ஆதிசேஷனுக்கும், வாயு தேவனுக்கும் ஏற்பட்ட போரில் வாயுதேவன் மேரு மலையிலிருந்து வெளிப்படுத்திய சிகரங்களில் ஒன்றே இங்கு மலையாக உள்ளது என்பது ஐதிகம். கோயில் 1178 அடி உயரமுள்ள மலைமேல் உள்ளது. 952 படிகளைக் கடந்து கோயிலை அடைய வேண்டும். இந்திரன், சூரியன், ஆதிசேடன், வாயு, அகத்தியர், சப்தகன்னியர் முதலியோர் பூசித்துப் பேறு பெற்ற தலம். ஆரிய தேசத்து அரசன் மாணிக்கம் பெறவேண்டித் தலங்கள் தோறும் சென்றும் கிடைக்காமல் இங்கு வந்தான். சிவபெருமான் ஒரு நீர்த் தொட்டியைக் காட்டி அதைக் காவிரி நீரினால் நிரப்பும்படி சொல்ல, அரசன் நீர் ஊற்றியும் நிரம்பாது போகவே கோபங்கொண்டு உடைவாளை ஓங்கினான். சிவபெருமான் அவ்வாளைப் போக்கி விட்டு இரத்தினத்தைக் (மாணிக்கம்) காண்பித்தார். அது கண்ட மன்னன் இரத்தினத்தை விரும்பாது சிவப்பணி செய்து வீடு பெற்றான். இதனால் இரத்தினகிரி என்று மலைக்கும், இரத்தினகிரீசர் என்று இறைவனுக்கும் பெயர். வாளைப் போக்கியதால், ஊர் வாட்போக்கி என்று அமைந்தது.

மலைப்படிகளின் அமைப்பும், பிராகாரங்களின் அமைப்பும், ஓம் எனும் பிரணவம் போன்றிருத்தலாலும், சிவாயமலை என்று பெயர் பெற்றது. ஐயர்-தலைவர். ஐயனுகிய சிவபிரான் எழுந்தருளிய மலையாதலின் ஐயர்மலை எனவும் வழங்கும். சுவாமி, இரத்தினகிரீசுவரர். அம்மை சுரும்பார் குழலம்மை. சுவாமி மேற்குப் பார்த்த சந்நிதி. அம்மை கிழக்கு நோக்கிய சந்நிதி. சித்திரைப் பௌர்ணமியன்று மாலை சூரிய பூசை நடைபெறுகிறது. அகத்தியர் இங்கு மத்தியான தரிசனம் பெற்ற படியால், மத்தியான தரிசனம் இத்தலத்தில் சிறப்புடையது. சுவாமிக்கு மத்தியானசுந்தரர் என்றும் பெயர். இந்திரனால் உண்டாக்கப் பட்ட வேப்ப மரத்தையும் (தலவிருட்சம்), இரத்தினகிரீஸ்வரரைத் தரிசித்துத் திரும்பும் பொழுது வயிர வீரப்பெருமாள் என்னும் வீர வாகுவையும், தரிசித்தல் வேண்டும் என்பர். ஆரிய ராஜனால் வெட்டுப்பட்ட வாட்குறி இலிங்கத்தின் முடியில் இன்றும் காணப்படுகிறது. அதனால் முடித்தழும்பர் என்ற பெயரும் சுவாமிக்கு உண்டு. 12 ஆண்டிற்கு ஒரு முறை இடி பூசை உண்டு என்பர். ஒரு இடையன் வழிபாட்டிற்குக் கொண்டு வந்தபாலைக்கவிழ்த்த காகம் எரிபட்டது. இதனால் ''காகம் அணுக முடியாத மலை'' என்பர். ''காகம்மேவுறிற் கடுந்தழல் வீசிடு பறம்பு'' என்பது நாகைக் காரோணப் புராணம். தலமான்மியமும், கலம் பகமும் இத்தலத்தைப் பற்றி உள்ளன. அப்பர் சுவாமிகளால் பாடல் பெற்ற சிறப்புடையது. சிவாய தீர்த்தம், இந்திரதீர்த்தம் முதலிய ஒன்பது தீர்த்தங்கள் உள்ளன. மூலஸ்தானம் சுயம்புலிங்கம். ''காலைக் கடம்பர், மத்தியானச் சொக்கர், அந்தி ஈங்கோய்நாதர்'' என்பது இங்கு வழங்கும் பழமொழி. ஒரே நாளில் காலைச் சந்தியில் கடம்பர் கோயிலிலும், உச்சிக் காலத்தில் சிவாய மலையிலும், மாலைச் சந்தியில் ஈங்கோய் மலையிலும் வழிபடுதல் சிறந்தது. 1923-இல் திருப்பணி நடைபெற்றது. ரூபாய் 35,000 வருமானம் உள்ள கோயில். 20,000 ரூபாய் மதிப்புள்ள திருவாபரணங்கள் உள்ளன. இத்தலத்தைப் பற்றி மலைக்கோயிலில் 50 கல் வெட்டுக்களும், சிவாயம் கோயிலில் 7 கல் வெட்டுக்களும் உள்ளன.

கால பாசம் பிடித்தெழு தூதுவர்
பால கர்விருத் தர்பழை யாரெனார்
ஆல நிழல் அமர்ந்தவாட் போக்கியார்
சீல மார்ந்தவர் செம்மையுள் நிற்பரே.

விடுத்த தூதுவர் வந்து வினைக்குழிப்
படுத்த போது பயனிலை பாவிகாள்
அடுத்த கின்னரங் கேட்கும்வாட் போக்கியை
எடுத்தும் ஏத்தியும் இன்புறு மின்களே.

கூற்றம் வந்து குமைத்திடும் போதினில்
தேற்றம் வந்து தெளிவுற லாகுமே
ஆற்ற வம்மருள் செய்யும்வாட் போக்கிபால்
ஏற்று மின்விளக் கையிருள் நீங்கவே.

—அப்பர்.

2. கடம்பந்துறை – கடம்பர் கோயில் :

சோழநாட்டுத் தலங்களுள் 65-வது தலம். காவிரித் தென்கரைத் தலங்களுள் 2-வது தலம். திருச்சிமாவட்டம், குளித்தலை தாலுகாவில் திருச்சி-ஈரோடு புகைவண்டிப் பாதையில், குளித்தலை இரயில் நிலையத்திலிருந்து வடக்கே ஒரு கல் தொலைவில் உள்ளது கடம்பந்துறை. திருச்சி-கரூர் நெடுஞ்சாலையில் திருச்சியிலிருந்து

22 கல்தொலைவில் உள்ளது. துறை என்னும் முடிபைப் பெற்ற தலங்கள் 12-ல் இக் கடம்பந் துறையும் ஒன்று. இப்பொழுது இது கடம்பர் கோயில் என்றே வழங்குகிறது. சுவாமி — கடம்பவன நாதேசுவரர். அம்பாள்—முற்றிலா முலையம்மை. தீர்த்தம்—காவிரி. தலவிருட்சம் —கடம்பமரம். சுவாமி சந்நிதி வடக்கு நோக்கியது. அம்பாள் சந்நிதி கிழக்குநோக் கியது. கண்ணுவ முனிவருக்கும், தேவர்கட்கும் சிவபெருமான் கடம்பமரத்தில் காட்சிகொடுத்த தலம். அப்பர் சுவாமிகளால் பாடல் பெற்ற சிறப்புடையது. தல வரலாறு ஆலயத்தில் அச்சிடப் பட்டுள்ளது. பிரமன், விஷ்ணு, சப்தமாதர்கள், அகத்தியர், தேவசர்மா, முருகன் முதலியோர் பூசித்துப் பேறு பெற்ற தலம். இக்கோயிலுக்கு 50 ஏக்கர் நஞ்சை நிலங்களும், 54 ஏக்கர் புஞ்சை நிலங்களும் உள்ளன. வருஷ வருமானம் ரூ. 20,000. ரூ. 30,000 மதிப்புள்ள திருவாபரணங்களும் உள்ளன.

ஆரி யந்தமி ழோடிசை யானவன்
கூரி யகுணத் தார்குறி நின்றவன்
காரி கையுடை யான்கடம் பந்துறைச்
சீரி யல்பத்தர் சென்றடை மின்களே

பூமென் கோதை உமையொரு பாகனே
ஓமஞ் செய்தும் உணர்மின்கள் உள்ளத்தால்
காமற் காய்ந்தபி ரான்கடம் பந்துறை
நாமம் ஏத்தநம் தீவினை நாசமே.

—அப்பர்.

3. திருப்பராய்த்துறை :

சோழநாட்டுத் தலங்களுள் 66-வது தலம் ஆகவும், காவிரித் தென்கரைத் தலங்களுள் 3-வது ஆகவும் விளங்குவது திருப்பராய்த் துறை. திருச்சி-ஈரோடு இரயில் பாதையில் திருச்சியிலிருந்து ஏழாவது நிலையமான எலம னூரை அடுத்து, திருப்பராய்த்துறை நிலையமான உள்ளது. திருச்சி-கரூர் நெடுஞ்சாலையில், திருச்சி யிலிருந்து 10 கல் தொலைவில் உள்ளது இத் தலம். சம்பந்தரும் அப்பரும் பாடிப் பரவி யுள்ளனர். இந்திரன், குபேரன், சப்தரிஷிகள் முதலியோர் பூசித்துப் பேறு பெற்ற தலம். அகண்டகாவிரித் துறையில் இருப்பது. ''பரக்கும் நீர்ப் பொன்னிமன்னுபராய்த்துறை'' என்பது அப்பர் திருவாக்கு. பராய்மரம் தல விருட்சம். தீர்த்தம் அகன்ற காவிரி. சுவாமி —பராய்த் துறை நாதர். அம்பாள்—பசும்பொன் மயில் அம்மை. கடவுள் உண்மையை மறுத்துப் பராய் மரக்காட்டில் தவம் புரிந்து தாமே தெய்வம் எனத் தருக்கியிருந்த தாருகாவனத்து முனிவர்களைச் சிவபெருமான் ஒறுத்து அஞ்ஞா னத்தை அகற்றி மெய்ஞ்ஞானத்தைக்கொடுத்து ஆனந்தத் தாண்டவ அருட் காட்சி வழங்கிய தலம். இங்கு நான்கு கால பூசைகள் நடை பெறுகின்றன. காஞ்சிகாத்தான், இளையாத்தங் குடி மரபினரான திரு வெ. வீர. நாகப்பச் செட்டியார் 1910-ல் பத்து லட்ச ரூபாய் வரை திருப்பணி செய்து கும்பாபிஷேகமும் செய்து வைத்தார்கள். அவர்களது பெயரரே இப்போ தைய அறங்காவலராக உள்ளார்கள். இரண்டு திருப்பதிகங்கள் உள்ளன.

நீறு சேர்வதொர் மேனியர் நேரிழை
கூறு சேர்வதொர் கோல மாய்ப்
பாறு சேர்தலைக் கையர் பராய்த்துறை
ஆறு சேர்சடை அண்ணலே.

கந்த மாமலர்க் கொன்றை கமழ்சடை
வந்த பூம்பு னல்வைத் தவர்
பைந்தண் மாதவி சூழ்ந்த பராய்த்துறை
அந்த மில்ல அடிகளே.

—அப்பர்.

4. திருக்கற்குடி - உய்யக்கொண்டான் திரு மலை :

சோழநாட்டுக் காவிரித் தென் கரைத் தலங்கள் 127-ல், 4-வது தலமாக விளங்குவது திருக்கற்குடி. திருச்சிராப்பள்ளிக்குத் தென் மேற்கில் இரண்டரை கல் தொலைவில் உள்ளது. கோயில் சுமார் 75 அடி உயரமுள்ள சிறு மலை மேல் இருக்கிறது. சம்பந்தர், அப்பர், சுந்தரர் மூவராலும் பாடப்பெற்ற சிறப்புடையது. சுவாமி—உஜ்ஜீவநாதர், உய்யக்கொண்ட நாதர், அம்பாள்—அஞ்சனாக்ஷியம்மை. அம்பா ளின் விரல்களில் பின்னம் ஏற்பட்டதை ஒட்டி வேறு ஒரு அம்பாள் உருவம் தயாரித்துப் பிர திட்டை செய்யும்போது, அம்பாள் குருக்கள் கனவில் தோன்றி உன் மனைவியின் விரல்கள் பின்னமானால் அவளை ஒதுக்கி விடுவாயோ என்று கேட்டதாகவும், உடனே அந்த அம்பாளையும் பிரதிட்டை செய்ததாகவும் ஐதிகம். ஆதலால் அம்பாள் சந்நிதி இரண்டு உள்ளன. சுவாமியும், அம்பாளும் மேற்குப் பார்த்த சந்நிதி. ஈழ நாட்டு அரசன் ஒருவன் இங்கு உச்சிக் கால தரிசனம் செய்து முத்தி பெற்றனன். கரன் பூசித்துப் பேறு பெற்ற தலம். கல்வெட்டுக்கள் பல உள்ளன. மார்க்கண்டேயர் வழிபட்டுப் பேறு பெற்றுள்ளார். இங்கிருந்து மூன்றரை கல் தொலைவில் வயலூர் என்ற முருகன் தலம் உள்ளது. கற்குடி ஆலயம் தருமையாதீன அரு ளாட்சியில் விளங்குவது.

அங்கமொ ராறுடை வேள்வி
யான அருமறை நான்கும்
பங்கமில் பாடலோ டாடல்
பாணி பயின்ற படிறர்
சங்கம தார்குற மாதர்
தங்கையில் மைந்தர்கள் தாவிக்
கங்குலின் மாமதி பற்றுங்
கற்குடி மாமலை யாரே.

—திருஞானசம்பந்தர்.

மூத்தவனே வானவர்க்கும் மூவா மேனி
முதலவனைத் திருவரையின்மூக்கப்பாம்பொன்று,
ஆர்த்தவனே அக்கரவம் ஆரமாக
அணிந்தவனைப்பணிந்தடியா ரடைந்தவன்போடு
ஏத்தவனே இறுவரையில் தேனே ஏனோர்க்
கின்னமுதம் அளித்தவனே யிடரை யெல்லாங்
காத்தவனைக் கற்குடியில் விழுமி யானைக்
கற்பகத்தைக் கண்ணுரக் கண்டேன் நானே.

—திருநாவுக்கரசர்.

முருகப் பெருமான் திருவவதாரம் செய்த போது, முதலில் வெளிப்பட்டது சரவணப் பொய்கையில். பிறகு அவன் கந்தகிரியில் எழுந்தருளியிருக்கின்றான் என்று கந்த புராணம் கூறும். அவன் கோயில் கொண்ட தலங்களில் சிறந்தவை ஆறு படை வீடுகள். முருகன் ஆறுமுகம் உடையவனுதலின் அவனோடு தொடர்புடையவற்றை ஆறு ஆறுகக் கண்டும் கொண்டும் மகிழ்வது முருகன் அடியார் இயல்பு.

படைவீடு என்பது அரசன் ஒருவன் தன் பகைவரோடு போர் செய்யும் பொருட்டுப் படைகளுடன் பாளையம் இறங்கியிருக்கும் இடத்துக்குப் பெயர். படை தங்கியிருக்கும் இடம் என்பது அதன் பொருள்.

முருகன் சூரபன்மனோடு போர் புரியச் செல்லுமுன் திருச்செந்தூரில் தங்கி, வீரவாகு தேவரை அங்கிருந்து சூரனிடம் தூதாக அனுப்பி, அப்பால் போருக்குப் புறப்பட்டான். அப்போது திருச்செந்தூர் அப்பெருமானுக்குப் படை வீடாக உதவியது. இவ்வாறே தன்னுடைய கணங்களோடு ஒவ்வொரு தலத்திலும் அவன் தங்கியிருத்தலின் அவற்றைப் படைவீடு என்று சொல்லும் வழக்கு உண்டாயிற்று. வானோர் தானைத் தலைவனுதலின் அவன் இருக்கும் இடங்களைப் படைவீடு என்று சொல்லுவது பொருந்தும்.

நக்கீரர் தாம் பாடிய திருமுருகாற்றுப் படையில் முருகன் உறையும் இடங்கள் இவை என்று சுட்டும்போது ஆறு இடங்களைக் கூறுகிறார். அவர் அப்படிக் கூறியது முதலே ஆறு படை வீடுகள் என்ற வரையறை வழக்கில் வந்தது.

''ஆறு திருப்பதிகண் டாறெழுத்தும் அன்பினுடன்
கூறுமவர் சிந்தைகுடி கொண்டோனே''

என்று குமரகுருபர முனிவர், ஆறு படை வீடுகளை ஆறு திருப்பதி என்று கூறுகிறார்.

''சகலமுத லாகிய அறுபதி நிலைமேவிய
தடமயில் தனிலேறிய பெருமாளே''

''ஆறுதிருப் பதியில்வளர் பெருமாளே''

என்று அருணகிரிநாதர் திருப்புகழில் ஆறு திருப்பதி என்றே படை வீடுகளைக் குறிக்கின்றார். கந்த புராணத்தில் ஆறு படை வீடுகளில் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு துதியைக் கச்சியப்ப சிவாசாரியார் அமைத்திருக்கிறார்.

திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர்சோலை என்னும் ஆறும், ஆறு படைவீடுகளாகும். அந்த ஆறில் ஐந்தாவதாகிய குன்று தோறாடல் என்பது எல்லா மலைகளையும் குறிக்கும்.

திருப்பரங்குன்றம் :

முதல் படை வீடாகிய திருப்பரங்குன்றம் மதுரைக்கு அருகில் உள்ளது. பரன்குன்றம் என்பது பரங்குன்றம் என்று ஆயிற்று. சிவபெருமான் திருக்கோயிலும் அங்கே உண்டு. தேவாரம் பெற்ற தலம் அது. திருப்பரங்குன்றத்தில் முருகவேள் தேவயானையைத் திருமணம் செய்து கொண்டருளினான். அக்குன்றம் பாண்டியர்களின் தலைநகராகிய மதுரையை அடுத்து விளங்குவதால் பழங்கால முதற் கொண்டே சிறப்பை உடையதாக இருந்து வருகிறது. நக்கீரர் அதனைக் குன்று என்றே குறிக்கிறார்.

''மாடமலி மறுகில் கூடற் குடவயின்
இருஞ்சேற்று அகல்வயல் விரிந்துவாய் அவிழ்ந்த
முள்தாள் தாமரைத் துஞ்சி வைகறைக்
கள்கமழ் நெய்தல் ஊதி எற்படக்
கண்போல் மலர்ந்த காமர் சுனைமலர்
அஞ்சிறை வண்டின் அரிக்கணம் ஒலிக்கும்
குன்று அமர்ந்து உறைதலும் உரியன்''

என்பது திருமுருகாற்றுப்படை.

மதுரை மா நகரிலிருந்து திருவிழாக்காலங்களில் கூட்டம் கூட்டமாக மக்கள் திருப்பரங்குன்றத்துக்குச் சென்றனர். வழி நெடுகச் சோலைகள் இருந்தன. மலையில் மரங்கள் அடர்ந்து வளர்ந்திருந்தன. பரிபாடல் என்ற சங்க நூலில் திருப்பரங்குன்றத்தைப் பற்றிய பாடல்கள் உள்ளன. அக்காலத்தில் திருப்பரங்குன்றத்தில் அருவி கூட இருந்ததென்று தெரிய வருகிறது. அதில் ஆடவரும் மகளிரும் நீராடினர். முருகவேள் திருக்கோயிலுக்கு வருகிறவர்கள், அறம், பொருள், இன்பம் வீடு என்ற நால்வகை ஊதியங்களையும் தனித் தனியே பெற எண்ணி வந்தார்கள். முருகனுடைய சந்நிதியில் பொன்னாலும் வெள்ளியினாலும் செய்த பல வகைப் பொருள்களைக் கொணர்ந்து சமர்ப்பித்தனர். முருகனுடைய ஆயுதங்களையும் மணிகளையும் அவனுடைய வாகனங்களையும்கொண்டு வந்து கொடுத்தனர். பாண்டிய மன்னன் தன் பரிவாரங்களுடன் விழாக் காலங்களில் அங்கே வந்து தரிசனம் செய்தான்.

திருப்பரங்குன்றத்தில் ஒரு சித்திரசாலை இருந்தது. எழுத்து நிலை மண்டபம் என்றும், எழுதெழிலம்பலம் என்றும் அதைச் சொல்வார்

கள். நல்ல வண்ணங்களைக் கொண்டு எழுதிய ஓவியங்கள் அங்கே இருந்தன. துருவ சக்கரமும் அதனைச் சார்ந்த சூரியன் முதலிய கிரகங்களும் ஒரு சித்திரத்தில் அமைந்திருந்தன. புராணக் கதைகளை விளக்கும் ஓவியங்களும் இருந்தன. மதுரையிலிருந்து மக்கள் திரள் திரளாக வந்து வழிபடும் முறைகளைத் திருப்பரங்குன்றத்தைப் பற்றிய பரிபாடல்களில் காணலாம். இதற்கு ஒரு தல புராணம் உண்டு.

திருச்சீரலைவாய் :

இரண்டாவது படை வீடாகிய திருச்சீரலை வாயே திருச்செந்தூர். அதுவும் மிகப் பழைய தலம். அலைவாய், செந்தூர் என்ற இரண்டு திருநாமங்களும் சங்க காலத்து நூல்களில் வரு கின்றன. எப்போதும் அலை மோதுகின்ற இடத் தில் திருக்கோயில் அமைந்திருப்பதால் அலை வாய் என்ற பெயர் வந்தது. அப்பெயர் அடைமொழியுடன் திருச்சீரலைவாய் என்று வழங்குகிறது. செந்தி என்னும் பழம் பெயர் பிறகு செந்திலாகிச் செந்தூராயிற்று. குருகப் பெருமான் சூரபன்மனோடு போராடி வெற்றி பெற்ற விஜயாபிஷேகம் செய்து கொண்ட இட மாதலின் அதற்கு ஜயந்தி என்ற பெயர்வந்தது. அதுவே செந்தி என்று தமிழில் வழங்கியது.

வென்றி மாலைக் கவிராயர் என்ற புலவர் பெருமான் அதற்கு ஒரு புராணம் பாடியிருக் கிறார். பகழிக் கூத்தர் என்ற வைணவர் அங்கே சென்று தம் வயிற்றுவலி தீரப்பெற்று ஒரு பிள்ளைத் தமிழ் பாடினார். குமரகுருபரர் ஐந்து பிராயம்வரை ஊமையாக இருந்தார். பிறகு திருச்செந்திற் பெருமான் அருளால் அவர் ஊமைத் தன்மை நீங்கினார்; நீங்கினவுடன் கந்தர் கலிவெண்பாவைப் பாடினார். ஸ்ரீ சங்க ராசாரிய சுவாமிகள் வயிற்று வலியால் துன் புற்று இந்தத் தலத்துக்கு வந்து புஜங்க ஸ்தோத் திரம் பாடி அந்த நோயினின்றும் நீங்கினார்.

பழைய சங்க நூல்களில் திருச்சீரலை வாயைப் பற்றிய செய்திகள் வருகின்றன.

''திருமணி விளக்கின் அலைவாய்ச்
செருமிகு சேஎய்''

என்பது அகநானூறு.

''வெண்டலைப் புணரி அலைக்கும் செந்தில்
நெடுவேள் நிலைஇய காமர் வியன்துறை''

என்பது புறநானூற்றுப் பாட்டின் பகுதி.

''வரைவயிறு கிழித்த நிழல்திகழ் நெடுவேல்
திகழ்பூண் முருகன் தீம்புனல் அலைவாய்''

என்பது ஒரு பழம் பாட்டு. சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள்,

''சீர்கெழு செந்திலும் செங்கோடும் வெண்குன்றும்
ஏரகமும் நீங்கா இறைவன்''

என்று பாராட்டுகின்றார். தேவாரத்தில் அப்பர் சுவாமிகள்,

''நம் செந்தில் மேய
வள்ளி மணாளற்குத் தாதை கண்டாய்''

என்று குறிப்பிடுகிறார்.

திருச்செந்தூரில் ஒரு முகமுடைய திருக் கோலத்துடன் மூலமூர்த்தியாக முருகன் எழுந் தருளியிருக்கிறான். உற்சவ மூர்த்தியின் கோலத்தில் ஆறுமுகப் பெருமான் விளங்கு கிறான். நக்கீரர் திருமுருகாற்றுப்படையில் முருகனுடைய ஆறு திருமுகங்களையும் பன்னி ரண்டு திருக்கரங்களையும் பற்றிப் பாடுகிறார். வெளியே எழுந்தருளும் உற்சவ மூர்த்தியை நினைந்தே இப்பகுதியைப் பாடியிருக்க வேண்டும்.

''உலகம் புகழ்ந்த ஒங்குயர் விழுச்சீர்
அலைவாய்''

என்று நக்கீரர் திருச்சீரலைவாயைச் சிறப்பிக் கிறார்.

திருவாவினன்குடி :

மூன்றாவது படைவீடு திருவாவினன்குடி. இப்போது பழனியென்று வழங்கும் தலம் இது. மலையைப் பழனி யென்றும் அடிவாரத்திலுள்ள திருக்கோயிலைத் திருவாவினன்குடி யென்றும் இப்போது வழங்குகிறார்கள்.

பழனியென்பது பழம் நீ என்பதன் திரிபு என்று பழனித் தலபுராணம் கூறுகிறது. நாரதர் அளித்த பழத்தைத் தனக்குச் சிவ பெருமான் வழங்காமையால் சினங்கொண்ட செவ்வேள் இம்மலையில் வந்து நின்றான். சிவ பிரானும் அம்மையும் இங்கே வந்து, ''பழம் நீ ஆக இருக்கையில் உனக்கு வேறு பழம் எதற்கு?'' என்று கூறி அன்பு பாராட்டினர். அவர்கள் கூறிய ''பழம் நீ என்ற தொடரே இதற்குப் பெயராகிப் பின்பு நீ என்பது குறுகிப் பழநி என்று ஆயிற்று.'' இது பழனித் தல புராணக் கதை.

திருவாகிய இலக்குமியும் ஆவாகிய காம தேனுவும் இனன் ஆகிய சூரியனும் பூசித்தமை யால் திருவாவினன்குடி என்ற பெயர் வந்த தாகப் புராணம் கூறுகிறது.

பழங்காலத்தில் வாழ்ந்த ஏழு வள்ளல் களில் ஒருவன் பேகன். மயிலுக்குப் போர்வை அருளிய அவன் வள்ளன்மையைச் சங்க நூல்கள் பாராட்டுகின்றன. அவனுடைய முழுப் பெயர் வையாவிக்கோப்பெரும்பேகன் என்பது. ஆவியர் குலத்தில் பிறந்தவன் அவன். அக் குலத்தினர் தமக்குத் தலைநகராகக் கொண்ட ஊரே ஆவினன்குடி. ஆவிக்கு நல்ல ஊராக இருப்பது என்பது அதன் பொருள். ஆவினன் குடி என்பதே ஆவினன்குடி ஆகிவிட்டது. ஆய் என்ற வள்ளல் இருந்த ஊருக்கு ஆய்குடி என்ற பெயர் வந்ததைப் போன்றது இது.

ஆவி வைகும் இடமாதலின் வைகாவியூர் என்ற பெயரும் இதற்கு அமைந்தது. அதுவே நாளடைவில் வைகாவூர் என்றும், வைகாவிபுரி என்றும், வையாபுரி என்றும், வையாவி என்றும் மாறி வழங்கியது. வையாவிக்குத் தலைவன் பேகன். ஆகவே அவனை வையாவிக்கோ எனப் புலவர் கூறினர். ஆவியர் குலத்தில் வந்தவனுதலின் ஆவியர் கோமான் என்றும் பாராட்டினர்.

ஆவினர் குடிக்கெல்லாம் குலதெய்வமாக முருகன் விளங்கினன். பேகன் முருகனிடம் ஆராத காதல் உடையவன். மயில் தன் தோகையை விரித்து நிற்கும்போது சலார் சலார் என்ற ஒலி தோன்றச் சிலிர்க்கும். ஒரு நாள் ஒரு மயில் ஆடும்போது இவ்வாறு ஒலி உண்டாவதை அறிந்து குளிரினால் நடுங்குவதாக எண்ணினான். ஆண்டவனது வாகனமாகிய மயில் நடுங்குவது தகுமோ என்று அவன்உள்ளம் இரங்கியது. உடனே தன் மேல் போர்த்திருந்த விலையுயர்ந்த போர்வையை எடுத்து மயிலுக்குப் போர்த்து விட்டான். இந்தச் செயலைப் புலவர்கள் பாராட்டியிருக்கிறார்கள்.

''உடாஅ போரா ஆகுதல் அறிந்தும்
படாஅம் மஞ்ஞைக்கு ஈத்த எம்கோ
கடாஅ யானைக் கலிமான் பேகன்''

என்று பரணர் பாராட்டுகிறார்.

பழனி மலையின் பழம் பெயர் பொதினி. அந்த மலை ஆவினர் குலத்துக்கு உரியது.

''நெடுவேள் ஆவி
அறுகோட்டி யானைப் பொதினி''

என்றும்,

''முழவுறழ் திணிதோள் நெடுவேள் ஆவி
பொன்னுடை நெடுநகர்ப் பொதினி''

என்றும் மாமூலனார் என்னும் புலவர் பாடுகிறார். பேகனை, ''பெருங்கல் நாடன் பேகன்'' என்பர். அங்கே குறித்த பெருங்கல் பொதினியையே குறிக்கும்.

ஆவினன்குடியாகிய ஊரும், பொதினியாகிய மலையும் பேகனுக்கும் அவன் குலத்தினருக்கும் உரியன. பழனி மலையில்மேல் உள்ள கோயில் பிற்காலத்ததென்று சிலர் கூறுவர். பழைய நூல்களில் பண்டைக்காலந்தொட்டே பொதினியின்மேல் முருகன் எழுந்தருளிய செய்தி காணப்படுகிறது.

பெருஞ்சித்திரனார் பாடிய பாட்டில் பேகனை,

''ஈர்ந்தண் சிலம்பின் இருள்தூங்கும் நளிமுழை
அருந்திறற் கடவுள் காக்கும் உயர்சிமைப்
பெருங்கல் நாடன் பேகனும்''

என்று சொல்கிறார். பேகனுடைய மலை தனி மலை; அது மலைத்தொடர் அன்று ; சின்னஞ் சிறிய குன்றும் அன்று. ஆகவே அதைப் பெருங்கல் என்றார். அதன் உச்சியிலே தெய்வம் நின்று காப்பதாகச் சொல்கிறார். அவர் கூறும் ''அருந்திறற் கடவுள், முருகனே. சிறுபாணாற்றுப்படையில், ''அருந்திறல் அணங்கின் ஆவியர் பெருமகன், பெருங்கல் நாடன் பேகனும்'' என்று வருகிறது. 'அரிய திறல் பெற்ற தெய்வத்தை உடைய ஆவினர் பெருமகன்' என்று அவனுடைய குலதெய்வத்தைப் பற்றியும், புலவர் கூறுகிறார். அக்கடவுள் முருகனே.

பொதினி ஆண்டவனுக்குக் கோயிலும் அக்காலத்தில் இருந்தது. ''ஆவி, பொன்னுடை நெடுநகர்ப் பொதினி'' என்பது அகநானூறு. நகர் என்பது கோயில். ஆகவே பழநியாண்டவன் பழங்கால முதலே இத்தலத்தில்எழுந்தருளியிருக்கிறான் என்பதை அறியலாம். திருவாவினன்குடியில் முருகனைத் தரிசித்து நன்மைபெறத் தேவர்களும் முனிவர்களும் வருவதாகத் திருமுருகாற்றுப்படை கூறுகிறது.

திருவேரகம் :

நான்காவது படை வீடாகிய திருவேரகம் என்பது சோழ நாட்டில் இன்று சுவாமிமலை என்று வழங்கும் தலம். நச்சினார்க்கினியர் திருவேரகம். 'மலைநாட்டகத்து ஒரு திருப்பதி' என்று எழுதுகிறார். ஆனால் அருணகிரிநாத சுவாமிகள், சுவாமி மலையையே திருவேரகம் என்று கருதுகிறார்.

''ஏரக வெற்பெனும் அற்புத மிக்கசு
வாமிமலைப்பதி மெச்சிய சித்த''

''ஏரக வெற்பெனும் அற்புத மிக்கசு
வாமிமலைப்பதி நிற்கும் இலட்சண

என்பதில் திருவேரகமே சுவாமிமலை என்கிறார். திருவேரகம் காவிரிக் கரையில் அமைந்ததென் பதையும் அவர் கூறியுள்ளார்.

''தனி ஏரகத்தின் முருகோனே
தருகா விரிக்கு வடபாரிசத்தில்
சமர்வேல் எடுத்த பெருமாளே''

''குளிர்கா மிகுத்த வளர்பூசம் மெத்து
குடகா விரிக்கு வடபாலார்
திருவே ரகத்தில் உறைவாய்''

''யாவும்அலை கொண்டு தைத்தகாவிரிபுறம்புசுற்றும்
ஏரகம் அமர்ந்தபச்சை மயிர் வீரா''

என்பவற்றைக் காண்க.

ஏரகம் என்ற பெயர் வந்ததற்குரிய காரணத்தைச் சிறிது பார்க்கலாம். அப்பர் சுவாமிகள் திருவாக்கில் ஏர் என்ற தலத்தின் பெயர் வருகிறது. அது வைப்புத் தலங்களில் ஒன்று.

''இன்னம்பர் ஏர் இடவை ஏமப்பேரூர்''

''இரும்புதலார் இரும்பூளை யுள்ளார்
ஏரார் இன்னம்பரார்''

என்னும் இடங்களில் அத்தலப் பெயர் வருகிறது.

கும்பகோணத்துக்கு வடக்கே இரண்டு கல் தூரத்தில் ஏரகரம் என்றுள்ள ஊரே இந்த வைப்புத்தலம். இப்போது பேச்சு வழக்கில் ஏராரம், ஏராவரம் என வழங்குகிறது. அங்கே இரண்டு சிவாலயங்கள் உண்டு. ஒன்று சிதைந்திருக்கிறது. அதில் உள்ள கல்வெட்டி லிருந்து அந்த ஊர், ''இன்னம்பர் நாட்டு ஏராகிய மும்முடிச் சோழமங்கலம்'' என்று வழங்கியதாகத் தெரியவருகிறது. ஆகவே அந்த ஊரே ஏர் என்ற வைப்புத் தலம். தஞ்சைக் கோயிலில் உள்ள கல்வெட்டு ஒன்றி லும் இப்பெயர் வருகிறது.

இந்த ஊர் சுவாமிமலைக்கு ஈசானிய திக்கில் இருக்கிறது. ஏர் என்னும் தலத்திற்குள் இருந்த மையால், ஏரகம் என்ற பெயர் வந்திருக்கலாம். அல்லது அந்தணர்கள் வாழும் அகரம் மிகப் பெரியதாக இருந்து அதனிடையே முருகன் கோயில் இருந்திருக்கலாம். திருமுருகாற்றுப் படையில் உள்ள திருவேரகத்தைப் பற்றிய பகுதி, அந்தணர்கள் முருகனை வழிபடும் காட்சி யைக் காட்டுகின்றது. ஏரைச் சார்ந்த அகர மாதலின் ஏரகரம் என்று வழங்கிப் பின்பு அதுவே ஏரகரமாக மாறியிருக்கலாம்.

அது சுவாமிமலை என்று இப்போது வழங்கி னாலும் அங்கே இயற்கையான மலை இல்லை. கட்டு மலையாக இருக்கிறது கோயில். முருகனைச் சுவாமிநாதன் என்று வழிபடுகிறார்கள். சிவ பிரானுக்குப் பிரணவ உபதேசம் செய்த வர லாற்றை இத்தல புராணம் குறிக்கிறது. இந்தத் தலத்தைப் பற்றிப் பல துதிகள் உள்ளன.

குன்றுதோறுடல் :

திருமுருகாற்றுப்படையில் வரும் ஐந்தாம் பகுதியின் இறுதியில், ''குன்றுதோறுடலும் நின்றதன் பண்பே'' என்று நக்கீரர் கூறுகிறார். 'ஒவ்வொரு குன்றிலும் திருவிளையாடல் புரிவ தும் நிலைபெற்ற முருகனுடைய இயல்பு' என்பது இதன் பொருள். பல மலைகளிலும் முருகன் ஆடும் இயல்பைப் புலப்படுத்திய நக்கீரர் திரு வாக்கை அடிப்படையாகக் கொண்டு, எல்லா மலைகளையும் ஒரு தொகுதியாக்கி, குன்றுதோறு டல் என்ற படைவீடாக அன்பர்கள் போற்றி வருகிறார்கள்.

குன்றுதோறுடல் என்பதற்கு ஒவ்வொரு குன்றிலும் விளையாடுதல் என்றே பொருள் கொள்ள வேண்டும். ஆடல் என்பது தொழிற் பெயர். அருணகிரிநாதர், ''குன்றுதொ றுடல் மேவு பெருமாளே'', ''குன்று தொ றுடல் மேவிய பெருமாளே'' என்று பாடிய இடங் களிலும் ஆடலை மேவியவன் என்றே பொருள் கொள்ளும்படி வைத்தனர். ஆறுபடை வீடு களையும் பாடிய கச்சியப்ப சிவாசாரியார்,

''குன்றுதொ றுடிய குமரற் போற்றுவாம்''

என்று பாடினர்.

தனியே பெயராகச் சொல்லும்போது இந்தப் படைவீட்டைப் 'பல குன்று' என்று சொல்வதே பொருத்தம். அருணகிரியார் ''பல குன் றிலும் அமர்ந்த பெருமாளே'', ''பலமலை யுடைய பெருமாளே'' என்று பாடியிருப்பதும் இங்கே நினைப்பதற்குரியது.

முருகன் குறிஞ்சி நிலத் தலைவன். அவன் எல்லாக் குன்றுகளுக்கும் உரியவன். அவனுக்குக் கோயில் இருந்தாலும்; இராவிட்டாலும், வேறு தெய்வத்தின் கோயில் இருந்தாலும் எல்லாக் குன்றுகளிலும் அவன் இருந்து விளையாடுகிறான்.

பழமுதிர்சோலை :

ஆறுவது படை வீடு பழமுதிர்சோலை. திருமாலிருஞ் சோலைமலை என்றும், அழகர் மலை என்றும் வழங்கும் இடமே முருகனும் உறையும் திருத்தல மென்று தெரிய வருகிறது. பழங் காலத்தில் இங்கே முருகனுக்கும் கோயில் இருந் திருக்க வேண்டும். அழகர்மலை என்று வழங்குவ தலால் இங்கே உறையும் தெய்வத்துக்கு அழகன் என்னும் பெயர் இருப்பதை அறியலாம். சௌந்தரராஜப் பெருமாள் என்ற திருநாமத் தோடு திருமால் இங்கே எழுந்தருளியிருக்கிறார். முருகன் என்ற பெயரும், அழகன் என்ற பொரு ளுடையது. ஆதலின் அவனையும் அழகன் என்ற பெயரால் அழைக்கலாம். அவன் எழுந்தருளி யிருந்தமையாலும் அழகர்மலை என்று வழங்குவ தாகவும் கொள்ளலாம். இங்கே சரவணப் பொய்கை என்ற பெயரோடு ஒரு குளம் இருந்த தாகவும் அதைப் புண்ணிய சரவணம் என்று வழங்கினர் என்றும் தெரிய வருகிறது.

திருமுருகாற்றுப் படை, இங்கே விழும் அருவியின் அழகை வருணிக்கிறது. இப்போது அழகர் மலைமேல் ஓரிடத்தில் முருகனுடைய திருக்கோயிலை எழுப்பியிருக்கின்றனர். ஆறு ஆதாரங்களிலும் வெவ்வேறு கோலத்தில் எழுந் தருளியிருப்பவன் முருகன்; ஆறு திசைகளிலும் தன் அருள் முகப் பார்வையைச் செல்லவிடு பவன்; ஆறுகோண சக்கரத்தில் அருட்சக்தி பொலிய வீற்றிருப்பவன்; ஆறு சமயங்களிலும் அவ்வச் சமய மூர்த்தியாக விளங்குபவன்; ஆறு எழுத்துக்களை மந்திரமாக உடையவன். அத்தகைய ஆறுமுகன் தமிழ் நாட்டில் ஆறு படை வீடுகளில் எழுந்தருளியிருந்து அன்பர் களுக்குத் திருவருள் பாவித்து வருகிறான்.

சிறப்புடைய புராணங்கள்

ந.ரா.முருகவேள், M.A., M.O.L.

முன்னுரை:

சமயச் சார்பான பலவகை இலக்கியங்களுள், புராணங்கள் என்பனவும் ஒரு வகையாகும். சமயத் துறையிற் புராணங்களுக்குச் சிறப்பிடம் உண்டு. ஒரு சிலர் 'புராணம்' என்னும் சொற்கேட்ட மாத்திரத்திலேயே, அவற்றை மிக எளியவாக எண்ணி இகழ்ந்துரைத்து ஒதுக்கி விடுவதுண்டு. இறையனர் களவியல் என்னும் நூலில், ஆசிரியர் நக்கீரனர் ''களவு என்னும் சொற்கேட்ட துணையானே, களவு தீயது என்று இகழ்ந்து விடுதல் கூடாது. களவும் நன்றுமாறு உண்டு'' எனக் கூறுமாறு போல, புராணங்கள் என்னும் சொல்லைக் கேட்ட அளவிலேயே, அவற்றையெல்லாம் இழிந்தனவாகவே துணிந்து கொண்டு, இகழ்ந்து ஒதுக்குதல் முறையன்று எனலாம்.

'அழகென்பது பொருளில் இல்லை. அதனைக் காணும் கண்ணைப் பொறுத்தேயுள்ளது' (Beauty lies in the eyes of the beholder) என்று அறிஞர்கள் கூறுவதுபோல, புராணங்களின் சிறப்பும் பிறவும் அவற்றை ஆராய்ந்து உணர்ந்து பயன்கொள்ளும் நம் அறிவின் திறனுக்கும் நலனுக்கும் ஏற்பவே அமைவன ஆகின்றன.

பதினெண் புராணங்கள்:

'புராணம்' என்பது புராதனம் (பழைமை) என்னும் சொல்லின் அடியாக அமைந்தது என்பர் அறிஞர். எனவே, பழைய காலந் தொட்டு வழங்கி வரும் வரலாறு (தொல்கதை) களே புராணங்கள் எனப் பெயர் பெற்றன எனக் கொள்ளுதல் பொருந்தும். புராணங்கள் பதினெட்டு என அறிஞர்கள் புகலுவர்.

அவற்றுள், சைவம் பவிடியம் மார்க்கண்டேயம் இலிங்கம் காந்தம் வராகம் வாமனம் மச்சம் கூர்மம் பிரமாண்டம் என்னும் பத்தும் சிவபிரானுக்குரிய புராணங்கள் ஆகும்; பிரமம் பதுமம் என்னும் இரண்டும் பிரமதேவனுக்குரிய புராணங்கள்; காருடம் நாரதம் பாகவதம் விஷ்ணு என்னும் புராணங்கள் நான்கும் திருமாலுக்கு உரியவை; ஆக்கினேயம் என்பது அக்கினி தேவனுக்கு உரியது: பிரமகைவர்த்தம் என்பதோ சூரியனுக்கு உரிய புராணம் எனப் படும்.

''எதிரில் சைவமே பவிடியம்
மார்க்கண்டம் இலிங்கம்
மதிகொள் காந்தம்நல் வராகமே
வாமனம் மற்சம்
புதிய கூர்மமே பிரமாண்டம்
இவை சிவ புராணம்;
பதும மேலவன் புராணமாம்
பிரமமே பதுமம்;'' (1)

''கருது காருடம் நாரதம்
விண்டு பாகவதம்
அரிக தைப்பெயர்; ஆக்கி
னேயம் அழற்காதையாம்;
இரவி தன்கதை பிரம
வைவர்த்தமாம்; இவைதாம்
தெரியும் ஒன்பதிற் றிருவகைப்
புராணமாம் திறனே'' (2)

—கச்சியப்ப சிவாசாரியர்.

சூதன் ஒலி மாலை:

இறைவன் தான் அருளிச் செய்த வேதாகமங்களை ஓதியுணரும் அறிவாற்றல் பெருத எளிய மக்கள் ஈடேறுதல் கருதி, அவற்றின் சாரத்தினை யுட்கொண்ட சரிதம் ஆகிய புராணங்களை நந்தி தேவர் வாயிலாக அகத்தியர் முதலிய முனிவர் பெருமக்களுக்கு உபதேசித்து அருளினன். அம்முனிவர்களுள் ஒருவராகிய சனற்குமாரர் என்பவர், பின்னர் அவற்றை வேதவியாசர்க்கு உபதேசித்தார். வியாசர் அவற்றைத் தம் மாணவர் ஆகிய சூதமுனிவர்க்கு உபதேசித்தருள, சூதமுனிவர் நைமிசாரண்யத்தில் வதிந்த முனிவர்களுக்கு எடுத்துக் கூறி, அறிவுறுத்தியருளினர்.

''நாதனர் அருள்பெறு நந்தி தந்திடக்
கோதிலா துணர்சனற் குமரன் கூறிட
வாதரா யணமுனி வகுப்ப ஓர்ந்துணர்
சூதன்ஓ தியதுமூ வாறு தொல்கதை''

—கச்சியப்ப சிவாசாரியர்

இங்ஙனம் சூத முனிவரால் அருளிச் செய்யப்பெற்றமை பற்றிப் புராணங்கள் ''சூதன் ஒலி மாலை'' எனவும் வழங்கப்பெறும். அவைகள் இறைவனது பெருமையினையும், இறையருளின் திறனையும் விளக்குவதோடு, மக்கள் ஒழுக்க நெறி தவறுதல் ஆகிய குற்றம் எய்தாத படி, உயரிய பல நீதிகளையும் செய்திகளையும், சுவை ஒளிர உரிய முறையில் நம் உளங்கொளப் புகட்டுகின்றன. புராணங்களின் இவ்வியல்பினை இற்றைக்குச் சற்றேறக் குறைய 1,300 ஆண்டு

கட்கு முன்பே, திருஞான சம்பந்தப் பெருமான், சிறந்தெடுத்து மொழிந்துள்ளார்.

''வேத முதல்வன் முதலாக
விளங்கி வையம்
ஏதப் படாமை உலகத்
தவர் ஏத்தல் செய்யப்
பூத முதல்வன் முதலே
முதலாப் பொலிந்த
சூதன் ஒலிமாலே என்றே
கலிக்கோவை சொல்லே''

—சம்பந்தர்.

'திருப்பாசுரம்' எனச் சிறப்பித்து ஓதப் பெறும் திருப்பதிகத்தின்கண் வரும் இப்பாடலில்,'சூதன் ஒலிமாலே' என்றும் 'கலிக்கோவை' என்றும் புராணங்களைத் திருஞான சம்பந்தர் சிறப்பித் தருளியிருத்தல் காணலாம்.

சேக்கிழார் விளக்கம்:

பதினெண் புராணங்களும் இறைவனின் எல்லையில்லாப் பெருமைகளை இனிது விளக்குவன; திருவருளின் சிறப்பைச் செவ்விதின் விரித்துத் தெளிவிப்பன ; நமக்கு ஏற்படும் இடர்கள் பலவற்றையும் நீக்கி நலம் விளைவிப்பன ; ஆதலின் சிவபிரானுல் அருளிச் செய்யப் பெற்ற புராணங்களை ஏற்ற பெற்றி ஓதி யுணர்ந்து பயன்கொண்டு போற்றுதல் உலக மக்களின் கடமை! மேற்குறித்த திருஞான சம்பந்தர் தேவாரப் பாடலின் பொருள் இதுவே என்று, சேக்கிழார் பெருமான் பின்வருமாறு அதனை விளக்கியருள்கின்றார்.

'' 'வேத முதல்வன்' எனும்பெயர்
திருப்பாட் டினில்நேர்;
ஆதி உலகோர் இடர்
நீங்கிட, ஏத்த, ஆடும்
பாதம் முதலாம் பதினெண்
புராணங்கள் என்றே;
ஓது என்று உரைசெய்தனர்;
யாவும் ஓதாது உணர்ந்தார்!''

எனவே, சமயச் சான்றோர்களின் செந்நெறியையே பின்பற்றி ஒழுகி, இறையருளைத் தலைப்பட்டுய்ய விரும்பி நின்று, இன்னோரனைய, திருமொழிகளை யெல்லாம் ஓரளவேனும்ஆராய்ந்துணர வல்லார், புராணங்களை மிக எளிதில் இகழ்ந்துரைக்க முற்பட்டு விடார். கொள்வோன் கொள்வகைக் கேற்பவே, ஒவ்வொரு பொருளும் அமைந்து தத்தம் பயனை ஒருவனுக்கு அளிக்கும்!

சைவத்தின் படிநிலைகள்:

சிறந்த சமய தத்துவ உணர்வும், நிறைந்த அருளனுபவமும் பெறுதற்குப் புறச் சமய நெறி நிற்றல்—அகச்சமயம் புகுதல்—மிருதிவழி யுழலுதல்—ஆச்சிரம அறத் துறைகள் அடைதல்—அருந்தவங்கள் புரிதல்—அருங்கலைகள் பல தெரிதல்—ஆரணங்கள் படித்தல்—வேத சிரப் பொருளை மிகத் தெளிதல்—எனப் படிப்படியே செல்லும் பலவகை நிலைகளுள், சிறப்புடைய புராணங்களை யுணர்தலும் ஒன்றாகச் சைவ சித்தாந்த சாத்திரங்கள், பதினான்களுள் தலை சிறந்ததாகத் திகழும் சிவஞான சித்தியார் (சுபக்கம் : செய்யுள் 263) கூறுதல் காணலாம்.

''சிறப்புடைய புராணங்கள் உணர்ந்தும்,
வேத சிரப் பொருளை
மிகத் தெளிந்தும் சென்றால்
சைவத்திறத்து அடைவர்....''

எனவரும் இச்செய்யுட் பகுதியில், புராணங்களைச் ''சிறப்புடைய புராணங்கள்'' என அடைமொழி கொடுத்துப் புகழ்ந்துரைத்திருப்பது, ஈண்டு நாம் எண்ணியுணர்தற்குரியது.

அடைமொழித் தொடர்:

ஒரு கவிஞனின் அறிவு அனுபவ நலங்களை உணர்தற்கு, அவன் வழங்கும் அடைமொழிகள் பெரிதும் துணை செய்யும் (The choice of adjectives is a fine test of a poet's originality); நீ பயன்படுத்தும் அடைமொழிகளைப் பொறுத்தே உன்னைக் குறித்து உலகம் ஒரு முடிவு கொள்ளும் (By your adjectives shall you be judged) என, மேலை நாட்டு அறிஞர்கள் கூறுவது உண்டு. ''திறனறிந்து சொல்லுக சொல்லை; அறனும் பொருளும் அதனின் ஊங்கு இல்'' என ஆசிரியர் திருவள்ளுவர் அருளிச் செய்திருத்தலும் காணலாம்.

அடைமொழிகள் பொதுவாக இரு திறப்படும். ஒரு சில அடைமொழிகள், ஒருபொருளை அதன் இனமாகிய பிற பொருள்களினின்றும் பிரித்துக் காட்டும்; செந்தாமரை என்பது போல. வேறு சில அடைமொழிகளோ, அங்ஙனம் ஒரு பொருளைப் பிறவற்றினின்றுபிரித்துக் காட்டாமல், தாம் அடுத்து வரும் பொருளின் இயல்பு இத் தன்மைத்து என்பதை மட்டுமே விளக்கி நிற்கும்; வெண்திங்கள் என்பது போல.

இவ்விருவகை அடைமொழிகளையும் முறையே பிறிதின் இயைபு நீக்குதல் (அந்நிய யோக வியவச் சேதம்) எனவும், இயைபின்மை நீக்குதல் (அயோக வியவச் சேதம்) எனவும் பெயரிட்டுச் செந்தமிழ்ச் சான்றோர்களாகிய சேஞவரையர், சிவஞான சுவாமிகள், 'பிரயோக விவேகம்'' இயற்றிய சுப்பிரமணிய தீட்சிதர் என்னும் சான்றோர்கள் விளக்கியுள்ளனர்.

''சிறப்புடைய புராணங்கள்'' என்னும் அடைமொழித் தொடர், பிறிதின் இயைபு நீக்குதலாகவேனும், அன்றி இயைபின்மை நீக்குதலாகவேனும், ஏற்றவாறு நாம் பொருள் கொள்ளும் வகையில் அமைந்துள்ளது. இஃது அருள்நந்தி சிவாசாரிய சுவாமிகள் அவர்களின் அருமை பெருமைகளை யுணர்த்த வல்ல சான்றுகளுள் ஒன்றாகும். அருள்நந்தி சிவாசாரியர் ஒப்புயர்வற்ற சமய நெறிச் சான்றோர்

(Spiritualist) மட்டும் அல்லர்; ஒரு சிறந்த பகுத் தறிவு நெறிப் பண்பாளரும் (Rationalist) ஆவர் என்னும் அரும்பெறல் உண்மையினை, இச்சிறந்த அடைமொழித் தொடர், நமக்குத் தெற்றெனப் புலப்படுத்தி நிற்கின்றது.

புராணங்களின் சிறப்பு:

புராணங்களுக்குச் சிறப்பாவது, மிக நுண்மைத் தன்மை (சூக்குமம்) வாய்ந்த கருத் துக்களை யாவரும் உணரும்படி, பருமை மிக்க (ஸ்தூல) வடிவில் வைத்து விளக்குதலும் ; அருவமும் கடினமுமான செய்திகளை விளக்க அவற்றிற்கு ஓர் உருவம் கொடுத்து எளிய இனிய கதைகளாக்கிக் கூறுதலும்; மனித வாழ்வியல் உண்மைகளையும் அனுபவங்களையும் சுவை மிக்க அழகிய கவிதைகளில் அரிய முறையில் அறிவுறுத் துதலும் ஆகும். (1)

இச்சிறப்பியல்பில் இந்தியப் புராணங்கள் மிகவும் தலைசிறந்து விளங்குகின்றன. அவைகள் செழித்தோங்கிப் பரந்து விரிந்து, சிறந்த அழ குடனும், நிறைந்த பொருள் வளத்துடனும் மிளிர்கின்றன. அவைகளை நாம் உணர உணர அவற்றின் ஒளிமிக்க கனவுகளும், உயரிய இனிய கற்பனைகளும், நம்மனோர்க்கு வியப்பும் விம்மித மும் விளைவித்து, அவற்றிற்கு அழகிய உருவம் கொடுத்த நம் முன்னோர்களின் நுண்மாண்நுழை புலத்தினை வெளிப்படுத்துகின்றன. (2)

காந்தா சம்மிதை:

வேதம் எஜமானன் கட்டளை இடுவது போல்வது. ''சத்தியம்வதா தர்மம்சரா'' (உண்மையே பேசுக; அறநெறியிலே நடக்க!) என வேதம் கட்டளையிடும். மனிதர்கள் செய்யத் தக்கனவற்றை விதித்தும், செய்யத் தகாதனவற்றை விலக்கியும் ''விதி—நிஷேத—ரூபம்'' ஆகக், கட்டளை இடும் முறையில் வேதங் கள் அமைந்துள்ளன. ஆதலின் அவற்றை அலங்கார நூலார் ''பிரபு சம்மிதை'' (தலைவ னின் சால்புரை) என்பர். அன்பிற் சிறந்த நண்பர்கள் தமக்குள் அகங்கலந்து நின்று அளவ ளாவி மகிழ்ந்து உரையாடுவது போல்வன, இதி காசங்கள். ஆதலின் அவற்றைச் ''சஹ்ருத் சம்மிதை'' (நண்பனின் நயவுரை) என வழங் குவர். காதலி காதலன்பால் இனிமை பெருகக் களித்துரையாடி அவனைத் தன் கருத்திற்கு இணங்கச் செய்யும் கனிவுரை போல, வேதங் கூறும் விதி நிஷேதங்களைச் சுவை பெருகச் சொல்லி இன்பம் பயந்து, அவற்றை யாவரும் அகமகிழ்ந்து கடைப்பிடிக்கச் செய்யும் தன்மை வாய்ந்தவை, புராணங்களேயாகும். ஆதலினால் புராணங்களைக் ''காந்தா சம்மிதை'' (காதலியின் கனிவுரை) என அறிஞர்கள் புகலுவர். கசப்பு மருந்தை உண்ண மறுப்பவனுக்கு, அவன் விரும்பி உண்ணும்படி அதன்மீது தேனும் சருக் கரையும் தோய்த்துத் தருதல்(குளஜிஹ்வா நியாயம்) போல, இனிமை பயவாத பொருள்களையும் இன்பம் பெருக நன்கினிது இயம்ப வல்லன, புராணங்களே எனலாம்.

வேதப் பொருளை உள்ளபடி அறிவது மிகவும் கடினம். மழைத்துளி சிப்பியின் வயிற் றில் விழுந்தால் முத்தாகின்றது; நெருப்பில் விழுந்தால் சுவறிப் போகின்றது ; பிற இடங் களில் விழுந்தால் அவ்வவற்றிற்கேற்ப அமை கின்றது. அது போல, வன் சொற்களினால் புணர்க்கப்பட்ட வேதங்கள் கன்மானுசாரமாக பலர்க்கும் பலவகைப் பொருள் கொள்ளக் கிடக்கும். எனவே, வேதங்களின் பொருள் களை எளிதில் உணர்வதற்குப் புராணங்கள் பெரிதும் துணை புரிகின்றன. இவ்வாற்றாலும், புராணங்களின் சிறப்புடைமையை நாம் இனிது அறிந்து கொள்ளலாம். எனவே, நாம் புராணங் களை ஏற்ற பெற்றியிற் படிக்கவும், கேட்டு இன்புறவும் வேண்டும். ''எனைத்தானும் நல்லவை கேட்க. அனைத்தானும் ஆன்ற பெருமை தரும்'' என வரும் திருக்குறள் மொழிகள் ஈண்டைக்கும் மிக மிகப் பொருந்தும்.

கதையும் கருத்தும் :

புராணங்களைப் பயிலுங்காலும் கேட்குங் காலும், அவற்றின் நுட்பங்களை நாம் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். வெறும் கதையை (Exoteric) மட்டுமே நோக்காது, அவற்றின் உட்கருத்தையே (Esoteric) நாம் பெரிதும் ஊன்றி நோக்கி யுணர்தல் வேண்டும். கருத்தை விளக்குவதற்கே கதை போந்தது. சிலர் கதையை மட்டுமே பிடித்துக் கொண்டு, கருத்தை விடுவர். அவர் தம் செய்கை ''நெய்யரி'' போல்வதே எனலாம். நுட்பமான அரும்பெருந் தத்துவக் கருத்துக்களை (Abstract ideas) யாவரும் இனிது உணர்ந்து கொள்ளும் பொருட்டுப் பண்டைப் பெரியோர்கள் பருவடி வில் (Concreate form) அழகுற அமைத்து விளக்கியுதவி இருப்பனவே, புராணக் கதைகள் ஆகும். சிவபிரான் திரிபுர தகனம் செய்தருளி னன் எனக் கூறும் புராணக் கதையின் நுண் பொருள், ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலங்களையும் அவன் அழித்தொழித்தான் என்பதேயாம். இதனை ஆசிரியர் திருமூலர் தமது திருமந்திர நூலில்,

''அப்பணி செஞ்சடை ஆதி புராதனன்
முப்புரம் செற்றனன் என்பர்கள் மூடர்கள்
முப்புரம் ஆவது மும்மல காரியம்
அப்புரம் எய்தமை யார்அறி வாரே''

---

(1) "The puranas contain the truth dressed up in myths and stories, to suit the weak understanding of the majority. The hard task of interesting the multitues in metaphysics is achieved in India."

—*Dr. S. Radhakrishnan.*

(2) "Indian mythology is richer, vaster, very beautiful, and full of meaning. I have often wondered what manner of men and women they were who gave shape to these brightest dreams and lovely fancies, and out of what gold mine of thought and imagination they dug them."

—*Sri Jawaharlal Nehru,*
The Discovery of India, p. 66

என அருளிச் செய்திருத்தல் கொண்டு உணர லாம். இதனுல், கலைத்திறம் மிக்குக் கவிதைநலம் பெற்றுத் திகழும் புராண கதைகளின் கருத்து நுட்பங்களை ஆய்ந்துணர்ந்து கொள்ளுதல் நம்ம னோர்க்கு இன்றியமையாத கடமை என்பது பெறப்படும்.

''ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு
ளார்கோமான்
இந்திரனே சாலும் கரி'' (1)

''கூற்றம் குதித்தலும் கைகூடும், நோற்றலின்
ஆற்றல் தலைப்பட் டவர்க்கு'' (2

''மடியிலா மன்னவன் எய்தும், அடியளந்தான்
தாஅய தெல்லாம் ஒருங்கு'' (3)

என்பன போன்ற திருக்குறள்களில், ஆசிரியர் திருவள்ளுவர் தாமும், புராண கதைகளைப் போற்றி எடுத்துக் கையாண்டிருத்தல் காண லாம்.

வழிகாட்டும் வான் பொருள்கள்:

தாளாண்மை இல்லாதவர்கள் வேளாண்மை செய்வதும், வாளாண்மை இல்லாதவர்கள் போரில் வெற்றி பெறுதலை விரும்பிப் போர்க் களத்திற்குச் செல்லுவதும்; புராணங்களைப் படித்தும் கேட்டும் அறியாதவர்கள், அறம் பொருள் இன்பங்களின் முடிந்த பயனுகிய வீடுபேற்றை அடைய விழைவதும்; கண்ணில் லாத குருடர்கள் வழியறிந்து நடந்து செல்ல இயலாது இடர்ப்படுதல் போல, இடர்வினைக்கும் பயனில் செயல்களேயாகும்.

''தாளாண்மை இல்லாதார் வேளாண்மை
செய்குவதும், தரைமேல் என்றும்
வேளாண்மை இல்லாதார் மனைவாழ்க்கை
செலுத்துவதும், விசயம் வேட்டு
வாளாண்மை இல்லாதார் மண்டுசமர்க்கு
ஏறுவதும், வளர்பு ராணம்
கேளாதார் கதிவிழைவும், விழியில்லார்
வழிநடக்கும் கிரமம் ஆமால்!''

—திருக்குற்றாலத் தலபுராணம்.

இதனுல், மக்கள் தம் வாழ்க்கையில் சமய உணர்வு எய்தி இறையருள் நெறியில் நின்று, வாழ்வாங்கு வாழ்ந்து மகிழ்வதற்கு வழிகாட்டும் வான் பொருள்களாக வயங்குவன, நம்முடைய பெரியவர்கள் வகுத்தளித்துப் போந்த சிறந்த புராணங்களே எனத் தெளியலாம்.

அரிச்சந்திர புராணம்:

புராணங்கள் தம்மைப் போற்றிப் பயிலும் மனிதர்களுக்கு, எத்துணைப்புனிதமானஉணர்ச்சி களை இக்காலத்திலும் விளைவிக்கின்றன என்ப தற்கு, வேறொரு சான்று ஏதும் விளம்புதல் வேண்டா. உலகப் பெருஞ் சான்றோர் எனப் பெரிதும் உடன்பட்டுப் போற்றி அனைத்துலகும் புகழாநிற்கும் அண்ணல் காந்தியடிகள் அவர் களின் வாழ்க்கை யொன்றே, நமக்குப் போதிய சான்றாகும்.

தாம் தம் இளஞ் சிறு பருவத்தில் பார்க்க நேர்ந்த அரிச்சந்திர புராண நாடகம், தம் உள்ளத்தை எங்ஙனமெல்லாம் கொள்ளை கொண்டு விட்டதென்றும், அளப்பரும்தொல்லை கள் அடைய நேரிடினும் சத்தியத்தையேகடைப் பிடித்தல் வேண்டும் என்னும் உணர்வைத் தம் வாழ்க்கையின் அடிப்படையாக வகுத்துக் கொடுத்தது அரிச்சந்திர புராணக் கதையே என்றும், தமது ''சத்திய சோதனை'' என்னும் நூலில், அண்ணல் காந்தியடிகள் நமக்கு அறி வுறுத்தி யருளி யிருக்கின்றார். (3)

முடிவுரை:

காந்தியடிகளைப் போலவே, அவ்வக் காலந் தோறும் பற்பல சான்றோர்கள் புராண நூல்களை ஓதிப் புனித உணர்ச்சிகளைப் பெற்றுச் சிறந்து விளங்கியிருப்பர் என்பது, சொல்லாமலே எளிதிற் தெளிவாம். வேறு பிறகாரணங்கள் ஒருபுறம் இருப்ப, லார்ட் மெக்காலே என்னும் ஆங்கில நாட்டுப் பேரறிஞர், தம் நாட்டுக் கதை கள் சிலவற்றைப் பற்றிக் குறிப்பிடுதல் போல (4), வழிவழியே வாழையடி வாழையாகவந்த நம் முன்னோர்கள் பலரும், தொன்றுதொட்டு எத் துணையோ பல நூற்றாண்டுகளாகப் படித்தும் கேட்டும் பயன்கொண்டு மகிழ்ந்த மானதக் கலைப் பெருஞ் செல்வங்களே (Cultural heritage) புராணங்கள் என உணர்ந்து, நாம் அனைவரும் அக்கலைச் செல்வங்களைத் திறனறிந்து ஏற்ற பெற்றி பயன்கொண்டு போற்றிச் சிறப்புறுவோ மாக!

—ஆசிரியர்.

---

(3) "This play—Harishchandra—captured my heart. I could never be tired of seeing it. It haunted me and I must have acted Harishchandra to myself times without number. 'Why should not all be truthful like Harishchandra ?' was the question I asked myself day and night. To follow truth and to go through all the ordeals Harishchandra went through was the one ideal it inspired in me. I literally believed in the story of Harishchandra. The thought of it all often made me weep. My commonsense tells me today that Harishchandra could not have been a historical character. Still both Harishchandra and Shravana are living realities for me, and I am sure I should be moved as before if I were to read those plays again today.

—*Mahatma Gandhiji*,
My Experiments with Truth, p. 6.

(4) "In these anecdotes there is doubtless a large mixture of fable; but they are not on that account unworthy of being recorded; for it is both an authentic and an important fact that such tales, whether false or true, were heard by our ancestors with eagerness and faith."

—*Lord Macauley*,
in The History of England.

திருச்சிற்றம் பலக் கோவையார் (முற் றொடர்ச்சி)

2. பாங்கற் கூட்டம் :

(1) இயற்கைப் புணர்ச்சியின் இறுதிக் கண் தலைமகளைப் பிரிந்த தலைமகன், பின் அவளைச் சென்று எய்துதற்கு அருமை நினைந்து வருந்துகின்றான். தலைவிக்கு இனியளாகத் தான் முன்பு உணர்ந்த காதற்றோழியின் வாயிலாக அவளை அடையக் கருதுகின்றான். ஆயினும், அத்தோழி தனக்கு அத்துணை நெருக்கமுடைய வள் அல்லள் ஆதலின், தனக்கு நெருங்கிய சிறந்த தன் காதற் பாங்கனைக் கண்டு, நிகழ்ந்த செய்தியனைத்தும் கூற விரும்புகின்றான். கூறி விடில், பின்னர் யான் விரும்பும் அத் தலைவியை யான் எய்துதலைத் தடுப்பார் ஒருவரும் இவ்வுலகத்தில் இரார் எனத் துணிந்து, தலைவன்பாங்கனை நினைந்து சென்றான். ''தென்புலியூர் என்னும் தில்லையில், சிற்றம்பலத்தின்கண் திருநடனம் செய்கின்ற, அம்பலவாணரின் திருவடிகளுக்கே உரிமைப்பட்டவனும், யானே அனையவனுய் என்னின் வேறு அல்லாத நண்பனும், ஆகிய பாங்கனைச் சென்று கண்டு, இச் செய்திகளை யெல்லாம் நிகழ்ந்தவாறு கூறுவேன்'' என்று தலைவன் தனக்குள் முடிவுசெய்து கொண்டான்.

(2) தன்னை நினைந்து வரும் தலைவனைப் பாங்கன் வழியிடை எதிர்ப்பட்டான். எதிர்ப்பட்டுத் தலைவனை அடிமுதல் முடிகாறும் நோக்கினான். ''தில்லைச் சிற்றம்பலத்தும் என் சிந்தையுள்ளும் உறையும் சிவபிரான், முன்னொரு கால் கூடல்மா நகரின்கண் சங்கம் இருந்து ஆராய்ந்த ஒள்ளிய இனிய தமிழின் அகமும் புறமும் ஆகிய பொருட் கூறுகளில் நுழைந்தனையோ? குரல் துத்தம் கைக்கிளை உழை இளி விளரி தாரம் என்னும் ஏழிசைகளான் இயன்ற பண்ணும் பாடலும் முதலாயினவற்றிடைப் புகுந்தனையோ? நீ செய்யத் தலைப்பட்ட ஆராய்ச்சி யாது? தலைவனே! பெரிய மலை போலும் நினது வலிய தோள்கள் மெலிவுற்றுத் தோன்றுவதற்குக் காரணம் என்னை?'' எனப் பாங்கன் வினவினான்.

(3) ''மயிலானது ஒரு சிறிய ஓணனுக்கு அஞ்சி ஒதுங்கி, வெளியே போந்து இரை கவராது. ஆயினும், அத்தகைய எளிய மயில், ஒரு பெரிய யானையையே கொல்லவல்ல பாம்பினைப் பிடித்து, அதன் படத்தைக் கிழித்து எறிந்துவிடும். அதுபோல, தில்லைச் சிவபிரானின் திருவடிப் பொற்றடமலர் சூடுகின்ற என் ஆற்றலை, மான்மட நோக்கி ஒருத்தியின் சிற்றிடை அகற்றிவிட்டது. எளிய மயிலால் வலிய பாம்பின் படம் கிழித்தெறியப்படுவது போல, ஓர் எளிய பெண்ணின் சிற்றிடை என் ஆற்றலை அகற்றிவிட்டதே! என் செய்வேன்?'' எனத் தலைவன் பாங்கனுக்கு உற்றது உரைத்தான்.

(4) ''எமது தலைவனே! தில்லைத் தொல்லோன் கயிலை மலையில், ஒரு மாஞ்சோலையின்கண், வஞ்சிக் கொடி போலும் இடையை யுடைய ஓர் இளமான், தனது கண்களால் மருண்டு நோக்கிற்று என்பது குறித்தோ, நீ இங்ஙனம் இரங்குவது? இது நின் பெருமைக்குத் தகாது!'' எனப் பாங்கன் கழறியுரைத்தான்.

(5) ''செம்பொன் மாளிகைத் தில்லைச் சிற்றம்பலத்து, மாணிக்கக் கூத்தனின், வடவான் கயிலை மலையில் வாழும் மயில் போன்றவளை, பூண்களாற் பொலிகின்ற கொங்கையையுடைய என் உயிர் அனையவளை, பொன்னை வண்ணமாகக் கொண்டு எழுதிய ஓவியக் கொழுந்தினை, மெல்லிய தோளையுடைய கரும்பினை, நீ காணவில்லை. கண்டிருப்பாயாயின், என்னை இவ்வாறு நீ கடிந்து கூறியிருக்க மாட்டாய்!' எனத் தலைவன் பாங்கனைக் கழற்றெதிர் மறுத்தான்.

(6) ''வள்ளலே! மலைகளைக் காற்றுனது பிளந்து மேலும் மேலும் இடுதலால், வானுலகும் மண்ணுலகும் கடலாற் கடல்கோள் பட்டுக் கலக்கமுறும் பேரூழிக் காலத்தும்கூட, கலங்காத மனத் திண்மையை உடையவன் நீ. அத்தகைய நீ, சிற்றம்பலத்தான் அருள் பெறுதவரைப் போலக் கலக்கமுற்று வருந்துகின்றாய். இஃதென்னை?'' எனப் பாங்கன் கவன்றுரைத்தான்.

(7) ''முன்பெல்லாம் யான், எல்லாப் பொருளும் இறைவனைத் தலைப்பட்டுச் சென்று ஒடுங்கும் பேரூழிக் காலத்தும், சால்பு அழிந்து உள்ளம் தளரேன். என்னைச் 'சித்தம் பித்தன்' என்று, மாறுபடக் கூறுவாரும் இலர். சித்தங் கலங்கிப் பித்தேறினர் தம்மையும், மிகவும் தெளிய வைப்பேன். அத்தகைய யான், இப் பொழுது சிற்றம்பலவனின் கயிலை மலையின்கண், ஒரு சிறு மானினது விழியால் அழிந்து மயங்கினேன்!'' எனத் தலைவன் பாங்கனுக்குத் தன் வலியழிவுரைத்தான்.

(8) "எனக்குப் பற்றுக்கோடாக யான் நினைத்திருந்த பாங்கன்தானே, அசைகின்ற மின் (இடை) மேல் முகிழ்த்த கோங்கின் அரும்பு (முலை)களோ, நின்னை வருத்துந் திறம் வல்லன வாயின? என இகழ்ந்து கூறுகின்றான். யான் முற்பிறப்பிற் செய்த நல்வினையும் வந்து பயன் தரவில்லை. அதனால், நாணமுற்று வெள்கி எனது ஆருயிர் மிகவும் துயருறுகின்றது. இஃ தென் தொல்வினை போலும்!" என்று, தலைவன் விதியொடு வெறுத்தான்.

(9) "அழியா இயல்பைத் தரும் அமிர்த மானது தன் பண்பினின்று மாறுபட்டாலும், பெய்யுங் காலத்துப் பெய்யாது மழை வறங் கூர்ந்தாலும், மாறுத வள்ளன்மையுடையவன் நீ! நின்பால் யான் இரப்பதொன்று உண்டு. தில்லையம்பலம்போல் அழகையுடையாள்ஒருத்தி காரணமாக நீ, பொன் போலும் பெறுதற்கு அரிய நினது ஒழுக்கச் சிறப்பினை நினையாது கைவிடுகின்றாய். இஃது என் தீவினைப் பயனே யாகும். நீ நின் சீலத்தினை நினைத்துணர்ந்து போற்றிக் கொள்ளல் வேண்டும்!"எனத் தலைவ னுக்குப் பாங்கன் நொந்துரைத்தான்.

(10) "சிலம்பனே! நினது மிக மேலான இயற்கைப் பெருங்குணமும் இங்ஙனம் மாறு படுவதாயிற்று. ஒரு காலத்தும் கலங்காத நீயும் இவ்வாறு பெரிதும் கலக்கமுற்றாய். யாவ ருக்கும் மேலாம் சீருடைய நின்னை, யான் அறிவுரை கூறித் தெளிவிக்கத் தக்கவனே? நின்னைத் தெளிவிக்கலுறும் என்னுடைய இயல்பை யாதென்று சொல்லுவது? நின்னை இத்தன்மையுறச் செய்த இனிய கொடிபோல் வாளுக்கு இடம் யாது? கயிலை மலையோ, தாமரைப் பூவோ, வானமோ? அன்றியும் அவளின் இயல்பு எத்தகையது? கூறுவாயாக!" எனத் தலைவனைப் பாங்கன் தலைவியின் இயலிடங் கேட்டான்.

(11) "எம்முடைய நல்ல தெய்வமாகிய அப்பெண்ணினல்லாளின் இடம், கயிலை மலை யினிடத்து யானைக்கோட்டினும், மூங்கிலினும் பிறந்த முத்துக்களைத், தேன் பெருக்கெடுத்துக் கொழித்து வைக்கும் பொழில் ஆகும். அப் பொழிலுக்கு எழிலைத் தரும் அவள், தன் விழி களால் பிணைமானுகவும், இயலால் மயிலாகவும், மிழற்றும் மொழியாற் கிளியாகவும் விளங்குகிற் பாள்!" எனத் தலைவன் பாங்கனுக்குத் தலைவி யின் இயலும் இடமும் கூறினன்.

(12) "வெற்பனே! தில்லைக் கூத்தப்பிரா னின் கயிலை மலையில், தினைப் புனங் காக்கின்ற கருங்கண்ணையும் செவ்வாயையும் உடைய மயில் இயலாளை, குயில் மொழியாளை, சிலம்பினை அடியிற் கொண்ட கொடியிடையாளை, பூங் கொடிகள் போலும் தோழியர்கள் நெருங்க, மலை முழைஞ்சுகளில் எதிர்கூவி அவள் விளை யாடும் பளிக்கறைக்கண் சென்று, யான் கண்டு வருவேன். அதுகாறும் நீ ஆற்றியிருப்பாயாக!" எனப் பாங்கன் தலைவனை வற்புறுத்திச் சென் றான்.

(13) "கொடிய சூறாவளிக் காற்றால் குல மலைகள் எட்டும், உலகங்கள் ஏழும் நிலைகுலையும் பேரூழிக் காலத்தும், நடுங்காத தலைவனைத் தன் பேரழகால் கவர்ந்து நடுங்குமாறு செய்த இடையினையும், நஞ்சைக் காலும் வேல்போலும் கண்களையும் உடைய அத்தலைவி, தில்லை ஈசன் வெற்பிடத்துள்ள சோலையின் நிழலையுடைய புனத்தின்கண், இன்று வரப்பெறுவளோ? அன்றி வாராதிருந்து விடுவாளோ?" என எண்ணிக் கொண்டு பாங்கன் தலைவன் கூறிய குறிவழிச் சென்றான்.

(14) குறிவழிச் சென்ற பாங்கன் தன்னைத் தலைவி காணுதவகையில், அணிமையிற் சென்று நின்று, தான் அவளைக் காண்கின்றான். "தலைவன் கூறிய வடுவகிர் போலும் கண்களும் இவையே. வஞ்சிக் கொம்பும் அஞ்சும் இடை இதுவே. வாயிதழ் பவளம் துடித்தாற்போலத் துடிக்கின்ற மாட்சி என்னே! தலைவன் சிறிதும் தப்பாமல் கூறியவாறு, அம்பலம்போலும் ஒப்பும் இதுவே. ஆதலின், அவன் கூறிய பணி மொழித் தலைவியும் இவளேயாதல் வேண்டும்!" எனக் குறிவழிச் சென்று கண்ட பாங்கன் துணிந்தான்.

(15) "தில்லையம்பலவனின் திருவடி போலும் தாமரைப் பூவில்இருக்கும்திருமகளைத், தமது பேரழகால் அச்சுறுத்தி அடிமை கொண்ட உறுப்புகளையுடைய, இத்தலைவியின் பெருங் காதற் பொலிவழிவுகண்டும், காதல் வயப் பட்ட தன் உள்ளத்தினை மீட்டுக் கொண்டு, இவளைப் பிரிந்து இங்கிருந்து அங்குப் போந்து, யான் கழறியுரைக்கவும் பொறுத்தருளி, நிகழ்ந் தன அத்துணையும் செவ்விதிற் கூறிய கவளக் களிற்று அண்ணலே, இவ்வுலகில் மிகவும் மனத் திண்மை யுடையவன்!" எனப் பாங்கன் தலைவனை வியந்துரைத்தான்.

(16) "வேலினை ஏந்திய தலைவ! சிற்றம் பலவர் பைம்பொற் கயிலையின்கண், தன்னைக் கூடி அகன்ற, போரில் வல்ல ஆண் யானையினை நினைந்து, தன் தோழியர் கூட்டத்தை விட்டு நீங்கிப் புனத்தின் அயலே தனித்திருந்து, அவ் ஆண் யானை மீட்டும் இன்ன திசையால் வரும் என்று அறியாது, சுற்றெங்கும் நோக்கி வடுவகிர் போலும் தன் கண்களைப் பரப்பி, அழகிய இளம் பெண் யானை ஒன்று நின்றதனைக் கண்டேன்!" எனத் தலைவன் கூறிய குறியிடஞ் சென்று பாங்கன் தலைவியைக் கண்டமை கூறினன்.

(17) "வெற்பனே! நீ ஓர் அழகிய பெண் கொடியைக் கண்டதாகக் கூறினையே! அக் கொடியின் மேல் ஒரு தாமரைப் பூ (முகம்) மலர்ந்துள்ளதா? அத்தாமரையின்கண் இரண்டு கயல்மீன்(கண்)கள் இடம் பெற்றுள்ளனவா? அன்றியும், அத்தாமரை மலரின்கண் உள்ள இரண்டு பவளத் துண்டு (இதழ்)களுக்கு அயலில் இனமொத்த வரிசையாகிய முத்து(பற்)கள் உள்ளனவா? அக்கொடியின்கண் அரன் அம்ப லத்தின் இயல்பை யுடையனவாய் இணையாகிய இரு பெருஞ் செப்பு(கொங்கை)கள் உள்ளனவா? மேலும், அக் கொடியின் உச்சியில் மலர் மாலை கள் சூழ்ந்து, இருள் செறிந்து திரண்டாற் போலப் புரளுகின்ற புயல்கள் (கூந்தல்) உள்ள னவா? உள்ளனவாயின், யான் கண்ட உருவம் நீ கூறிய உருவமேயாகும்!" எனத் தலைவ னுக்குத் தலைவியின் அவயவத்து இயல்பும் அடையாளமும் பாங்கன் கூறினன்.

(18) "திரிபுரங்களை எரித்த சிவபிரானின் தில்லையை ஒத்து, குயிலாகிய இனத்தைக் கொண்டு, தொண்டைக் கனியிடத்துக் குளிர்ந்த முத்துக்களை நிரைத்து, கூரிய சிறந்த இரு வேல்களைத் தாமரையின்கண் கிடக்கச் செய்து, அன்னம் போல நடக்கும் இயல்பிற்றாகிய ஓர் அரிய மயில் நின்னுற் காணப்பட்டது உண்டெனின், அதுவே என்னுடைய மன்னுயிராகும்!'' என்று தலைவன் தலைவியினிடத்திற்குச் சென்றான்.

(19) "நெருநலை நாளில் தலையளி செய்து, 'உயிரை ஒப்பாய்! கவலைப்படாதொழி. யான் நின்னிற் பிரியேன்; பிரியினும் ஆற்றேன்' என்று கூறி மறைந்த என் உயிர் போலும் தலைவர், மிக விருப்பத்தை யுடையவராய் என்னைச் சேர்தல் குறித்து நெஞ்சம் தளர்தலான் இடம் அறியாமல், இத் தாழ்வரைக்கண் நம் தோழியர்கள் காணும்படி வந்து விடுவாரோ? என்னும் பெரு நாணத்தினாலும், காதல் கைம்மிகுந்து ஆற்றுமையால் இறந்துபட்டாரோ? என்னும் பேரச்சத்தினாலும், அப்பொழில்வயின் யாரும் இல்லாத ஒரு சிறைத் தனியே நின்று, தலைமகனை நினைந்து தலைமகள் மெலியலுற்றாள்.

(20) "தலைமகளைக் கருதிச் சென்ற தலைமகன், முன்னை ஞான்று அவளைத் தான் கண்ணுற்ற பொழிலைச் சென்றுசேர்ந்தான். "மூங்கில்களின் இணையாலும், களிப்பையுடைய கரிய மயில்களாலும், ஒளியையுடைய பெரிய நீல மணிகளாலும், தாவிக் குதிக்கும் பெண் மான்களாலும், அசையும் கொடிகளாலும், முறையே தலைவியின் தோள்-சாயல்-கூந்தல்-கண்-இடை என்பனவற்றை நினைவூட்டப் பெற்று, இக் கயிலைப் புனமும் கூட, தேம்பிணை வார்குழலாளாகிய தலைவி என்றே என் சிந்தனைக்குத் தோன்றுகின்றது!''எனத் தலைவன் அப்பொழில் கண்டு மகிழ்ந்தான்.

(21) பொழிலையே தலைவியாகக் கருதிக் கண்டு மகிழ்ந்த தலைவன், அப்பொழிலிடைச் சென்று புகுந்தான். அதன்கண் தலைவியைக் கண்டான். "நேற்று என்பால் நேயம் உடைய தாய் என்னைக் கூடி, நேயம் இல்லாதது போல என் நெஞ்சு உடைந்து போகும் வண்ணம் பின்னர்ப் பிரிந்து சென்று, தோழியர் கூட்டத்தின்கண் உள்ளதாய், புணர்ச்சியின்பத்தை அளித்தலின் அமிழ்தமாய், பிரிவுத் துன்பத்தை விளைவித்தலின் அணங்காய், அரன் அம்பலம் போலும் ஒளியை யுடையதாய், பிரிந்து மறைந்து செல்லினும் என் மனத்தின்கண் நிலை பெற்று நிற்பதாய், இங்ஙனம் தான் ஒரு பொருளே நேயமுடைமையும் நேயமின்மையும் இன்பஞ் செய்தலும் துன்பஞ் செய்தலும் புலப்படுதலும் மறைதலும் ஆகிய பலவேறு பண்புடையதாய்க் காட்டலிற் பெரிதும் மாயத்தை யுடையதாய், இதோ வந்து நின்றுளது என் மன்னுயிர்!'' எனக் கூறித் தலைவியைத் தன் உயிர் என வியந்தான் தலைவன்.

(22) "இப் பொழிலின்கண் இம் மாதரார் தாது பரந்த போதுகளைக் கொய்யவும் இல்லை. தோழியர்கள் வணங்கிப் பணிய நின்று, ஒளியையும் வரியையும் உடைய பந்தையடித்து விளையாடவும் இல்லை. சுனைப் புனலில் மூழ்கி நீர் விளையாட்டுக்களை அயரவும் இல்லை. இங்ஙனமாகவும், கற்பகச் சோலையை யுடைய தேவர் உலகம் பொலிவழியும்படி, நிலந்தோயாத தமது பொன்போலும் கால்களை நிலத்திற் பதியவைத்து அம்பலத்தானது கயிலை மலையை அடைதற்கு, இத் தேவியார் செய்யக் கருதுகின்ற பெரிய தவந்தான் யாதோ?'' எனத் தலைவன் தலைவியைக் காணுத தளர்வகன்று உரைத்தான்.

(23) "மான்போலும் மெல்லிய நோக்கை யுடையாய்! நீலமிடற்றையுடைய சிவபிரானின் தில்லைப் பதியில் உள்ள அழகிய தாமரை மலரின் கண் வாழும் திருமகளோ என, நின்னை நோக்கியக்கால் ஐயம் நிகழ்ந்தது. அமிழ்தமே! அணங்கே! அவ் ஐயம் நீங்கித் தெளிந்தறிய, சிறிதாயினும் நீ நின் திருவாய் மலர்தல் வேண்டும். நின் திருவாய் திறவாதாயின், இப்பொழுதே என் உயிர் அழிவது உறுதி!'' எனக் கூறித் தலைவன் தலைவியின் மொழி பெற வருந்தினான்.

(24) தலைமகன் தன்முன் நின்று தன்னைத் திருமகளோ என ஐயுற்றதாகக் கூறக் கேட்ட தலைமகள், தில்லை "ஈசனைத் தொழாதாரைப் போலத் துன்பத்திற்கிடமாய், அழிவெய்தும் நிலையையடைந்து எனது உயிர் வருந்தாத வண்ணம், இப் பொழில்வாய் எழில்வாய்த் தொளிரும் பூங்கொடியே! யான் மறைந்து ஒதுங்கி நிற்க எனக்குப் புகலிடந் தருவாயாக!'' என ஒரு பூங்கொடியினைச் சார்ந்து ஒதுங்கி, தலைவி நாணிக் கண்புதைத்து நின்றாள்.

(25) "பொன்போல்வாய்! தில்லை அம்பலத்தைக் கண்டு கைதொழாதாரைப் போல என் உள்ளமானது துளங்கி வருந்தும்படிப் பிளவாமல், கூரிய வேல்போலும் நின் கண்களைக் கைகளாற் பொத்தி மறைத்துக் கொண்டு, அவ்வாற்றால் யான் இறந்து படாமல் உயிருடன் இருக்கச் செய்தாய். வாள்நுதலே! யான் மேலும் வருந்தாதிருக்க வேண்டுவையாயின், நின்மேனி எழில் முழுவதையும் சுற்றிலும் மறைத்துக் கொள்வாயாக!'' எனத் தலைவி நாணிக் கண்புதைத்தவழித் தன் வருத்த மிகுதியைத் தலைவன் கூறினான்.

(26) தலைவன் தன் வருத்த மிகுதி கூறக் கேட்டுத் தலைவி நாண் அழிந்தாள். "இன்றியமையாமையால் என் கண்மணியை ஒத்து, உயிர்போலச் சிறப்புடையதாகப் பழகி, ஒரு பொழுதும் என்னைப் பிரியாது என்னுடனே வளர்ந்த, பெறுதற்கரிய இரங்கத் தக்க நாணமானது, அழலைச் சேர்ந்த மெழுகையொத்து என்பால் நில்லாமல் அழியா நின்றது. அதனால், தில்லைக் கூத்தனை ஏத்தாதவர்கள் பல பிறவிகளை எய்தி வருந்தி யுழல்வது போல, நாண மிழந்து நலிந்து வருந்தும்படி, யான் மேல்வரக் கடவ நாள்களில் இவ்வாறு பிறவா திருப்பேனாக!'' எனத் தலைவி நாண்விட வருந்தினாள்.

(27) "வண்டுகளே! சிவபிரானின் தில்லையைப் போன்ற இத்தலைவியின் கொங்கைகள், தம்மைத் தாங்கி நிற்கும் இடையானது ஒடிந்து போகும்படி, அதற்கு மிக்க பெருஞ் சுமையினை

விளைவித்தலின், மரத்தின் நுனிக்கொம்பின் மீது ஏறி அதன் அடிப்பகுதியை வெட்டுவோரின் மடமையை உடையனவாய் உள்ளன. இந்நிலையில், நூலை ஒத்த நேரிய இடையின் நொய்ம்மையினை எண்ணிப் பாராமல், சிறிதளவு தேனை விரும்பி, நீவிரும் இவள் கொண்டையைச் சார்ந்து இடையின் சுமையினை மிகுதிப்படுத்துதல் தகாது!'' எனக் கூறிக் கொண்டு சென்று, நாணிழந்து வருந்தி நிற்கும் தலைமகளைத் தன் அன்பால் வருத்தம் தணிவிப்பான் போல, ஒரு கையால் இடையைத் தாங்கியும், பிறிதொரு கையால் வண்டுகளை ஓச்சிக் கூந்தலைத் தொட்டும், தலைவன் மருங்களைந்து புணர்ந்தான்.

(28) ''தேவருலகமும் இம்மண்ணுலகமும் ஒருங்கே பெறக் கிடைப்பினும், தீங்கரும்பும் அமிழ்தும் செழுந்தேனும் பொதிந்து, செப்புச் சிமிழினையும் கோங்கரும்பையும் தோல்வியுறுவித்து, ஆண்மை மிக்க என்னையும் அடிமையாக்கிக் கொண்ட கொங்கைகளை, யான் ஒரு பொழுதும் மறவேன்!'' எனத் தலைமகளைப் புணர்ந்து மகிழ்ந்த தலைமகன், பிரிவுக் குறிப்புத் தோன்ற இன்றியமையாமை கூறினன்.

(29) ''அமிழ்தே! அணங்கே! தோளா மணியே! பிணையே! தில்லையை ஒத்த நினக்கு எனது ஆருயிர் அடிமையாகி விட்டது. ஆதலால், நமது பிரிவின்மை பற்றிப் பல சொல்லிப் பெறுவதென்னை? இனி நீ இப்புதிய பூம் பொழிற்கண் நின் தோழியர் கூட்டத்திடைச் சென்று சேர்ந்து விளையாடுவாயாக!'' எனத் தலைமகன் தலைமகளை ஆயத்து உய்த்தான்.

(30) ''மை தீட்டிய வாள் போலும் கண்களையும், மணிப் பூண் அணிந்த முலைகளையும், ஒளிபொருந்திய நெற்றியையும், அரவினை ஒத்த அல்குலையும் உடைய இவள், காவல் புரிகின்ற இப் பைம்பூம் புனமானது, தன்னை யான் அகன்று சென்றால், பொய்யை யுடையவர்க்குச் சிவபிரான் போலத் துன்பத்தை விளைவித்து நெடுந்தொலைவினதாகின்றது ; அருகில் சென்றால், மெய்யன்பை யுடையவர்களுக்குச் சிவபிரானின் அம்பலம்போல, கழி பேருவகை எய்துவித்து மிகவும் அணிமையுடையதாக விளங்குகின்றது!'' எனத் தலைமகளை ஆயத்து உய்த்த தலைமகன், அவள் பிரிந்த பின்னர் அவள் இருந்த புனத்தினியல்பு கூறிப்பிரிவாற்றுது வருந்தினன்.

—தொடரும்

—ஆசிரியர்.

நூல்கள் அறிமுகம்

சைவமத விளக்கம் :

இந்நூல் அழகிய தூய எளிய செந்தமிழில், சைவ சமயத்தினைப்பற்றி அறிந்து கொள்ளத் தகுந்த பல குறிப்புக்களைச் சுருக்கமாகத் தொகுத்து நன்கு இனிது விளக்குகின்றது. ''செந்தமிழ்ச் செல்வி' இதழில் வெளிவந்த இச்சிறு நூல், இப்பொழுது இரண்டாம் பதிப்பாக வெளியிடப்பட்டுள்ளது. சைவத் தமிழ்ச் சிறுவர்களுக்கும் அன்பர்களுக்கும் பெரிதும் பயன்படும். இதனை எழுதியவர் மறைமலை அடிகள் மகனார் 'திருமறைச் செல்வர்', 'சித்தாந்த தினகரன்', பேராசிரியர், வித்வான் மறை திருநாவுக்கரசு அவர்கள். விலை ரூ. 2.50. கிடைக்குமிடம் : மறை திருநாவுக்கரசு, சி-137, இரண்டாவது தெரு, ஜவஹர் நகர், பெரம்பூர், சென்னை-600 082.

கந்தர் அலங்காரம் :

அருணகிரிநாதர் இயற்றிய இந்நூலுக்குச் சென்னை அரசினர் கலைக் கல்லூரியின் முன்னாள் துணைப் பேராசிரியர், வித்வான் திரு. ச. ரா. கச்சபேசுவரன், எம்.ஏ., அவர்கள் எளிய இனிய தெளிவுரையும் விளக்கவுரையும் வரைந்துள்ளார். திருத்தமான நல்ல சிறந்த பதிப்பு. விலை ரூ. 3-00. இங்ஙனமே இவர் கந்தர் சஷ்டி கவசம், கந்தர் அனுபூதி, திருமுருகாற்றுப்படை, கந்தர் கலிவெண்பா, திருத்தணிகை ஆற்றுப்படை என்னும் துதி நூல்களுக்கும் உரைகள் வரைந்து வெளியிட்டுள்ளார். இந்நூல்கள் பக்தர்களுக்குப் பெரிதும் பயன்படும். கிடைக்கும்மிடம் : தி லிட்டில் ஃப்ளவர் கம்பெனி, 8, ரங்கநாதன் தெரு, சென்னை-600 017.

—ஆசிரியர்



வாகீச கலாநிதி திரு.கி.வா. ஜகந்நாதன், எம்.ஏ.

(முற்றொடர்ச்சி)

அதற்குமேல் இராமன் 'நேர் இலா அறிவ' னுகிய அநுமனை நோக்கி, 'உன் கருத்து யாது?' என்று கேட்கிறான்.

அநுமன் அவையடக்கத்துடன் தொடங்குகிறான். எடுத்தவுடனே தன் கருத்தைக் கூறி அதற்குரிய காரணங்களை ஒன்றன்பின் ஒன்றாக எடுத்துச் சொல்கிறான். ''தீயன் என்று இவனை யான் அயிர்த்தல் செய்கிலேன்; மேயின சில பொருள் விளம்பக் கேட்டியால்'' என்ற முன்னுரையோடு அவன் பேசத் தொடங்குகிறான்.

''வஞ்சகர்களுடைய உள்ளத்தை அவர்களுடைய முகத்தைப் பார்த்தாலே கண்டு கொள்ளலாம். நான் இவன் முகத்திலிருந்து இவன் தூயவன் என்று உணர்ந்தேன். நீ வாலியை வதைத்துச் சுக்ரீவனுக்கு அரசளித்த வலிமையையும் வெற்றியையும் சீலத்தையும் உடையாய் என்பதை உணர்ந்து உன்னைச் சேர வந்திருக்கிறான். தெளிவாக 'மேல் அரசு' எய்துவான் விரும்பி மேயினன். அரக்கருடைய அரசு சீரியோர் நெறியில் அமையாமையால் அது நிலைக்காது என்பதை எண்ணி, நீ இந்த உலகத்தையே பரதனுகிய தம்பிக்கு ஈந்த அரிய கருணையையும் சத்தியத்தையும் உணர்ந்து அவற்றைப் பேணி வந்திருக்கிறான். இவன் வந்த காலம் சரியான காலம் அன்று என்றால், வாலியின் வலிமையையே தொலைத்தனை நீயாதலால் இராவணனுக்கு இறுதி நிச்சயம் என்று அறிந்து நீ ஆதிமூலப் பரம்பொருள் என்று உணர்தலால் தன் அண்ணனைப் பிரிந்து வந்தான். அரக்கர்கள் மாயச் செய்கைகளைச் செய்ய வல்லவர். அவர்கள் மாயத்தை நன்கு உணர்ந்தவர்களே நமக்குக் கிடைத்திருக்கிறார்கள் என்றால் நமக்கு வேண்டிய நன்மை எளிதில் கிடைக்கும். எளியவராகிய இவரை சந்தேகிக்கக் கூடாது. இராவணன் என்னைக் கொல்லும்படி சொன்னபோது இவன் தூதனைக் கொல்லுதல் பழி என்று கூறி விலக்கினான். இவன் வீட்டுக்குப் போனபோது எனக்கு நல்ல சகுனங்கள் உண்டாயின. மற்றவர்கள் வீடுகளில் கண்ட கள்ளும் ஊனும் இவனுடைய வீட்டில் நான் காண வில்லை. தரும தானமும் வந்தனை நீதியும் மாண்புஅமைந்து, அந்தணர் இல்லெனப் பொலிந்தது. இவனுடைய மகளாகிய திரிசடை சீதைக்குத் துணையாக இருந்து, 'ஒரு சாபம் இருக்கிறது; உன்னை இராவணன் தீண்டினால் இறந்துபடுவான்' என்று பிராட்டிக்குச் சொன்னாள். இராவணனுடைய வரமும் வஞ்சனையும் பிறவும் உன்னுடைய அம்பினால் அழிந்து போகும் என்பதை உணர்ந்து விரைவாக வந்திருக்கிறான். இவன் தவத்தின் மிக்கவன் என்று சொல்லிவிட்டு, அபயம் என்று வந்தவனை ஐயுற்று விட்டு விடக்கூடாது என்பதையும் கூறி, ''ஆதலால் இவன் வரவு நல்வரவே என உணர்ந்தேன் அடியனேன்'' என்று முத்தாய்ப்பு வைக்கிறான்.

அவனுடைய பேச்சில் மூன்று கருத்துக்கள் தெளிவாக இருக்கின்றன. ஒன்று வீடணன் நல்ல இயல்புகளை உடையவன் என்பது. அவன் முகத்தின் தோற்றம், அவன் வீட்டின் நிலை, அவன் இராவணனிடம் கூறிய நியாயம் இவற்றைத் தன் அனுபவத்தால் அறிந்தவன் அநுமனதலின் அவற்றை எடுத்துச் சொல்கிறான்.

அடுத்தது, அவன் வந்த காலமும் செயலும் ஏற்புடையன என்பது. அறநெறியில் நில்லாத வாலியைக் கொன்றவன் இராமனுதலின் அறநெறி திறம்பிய இராவணனையும் அவன் விரைவில் அழிப்பான்; இனி அவனுடைய வாழ்வு நில்லாது என்பதை உணர்ந்து வந்தான்; இராமனை ஆதிமூலப் பரம்பொருள் என்று எண்ணி வந்தான்; சொல்ல வேண்டியதைச் சொல்லியும் கேட்காத இராவணன் இனி அழிவான் என்று உறுதி பூண்டு வந்தான்; ஆகவே அவன் தன் இயல்புக்கேற்ற இடத்துக்கு வந்திருக்கிறான்.

மூன்றாவது, அவனை இராமன் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பது. அதற்கு இரண்டு காரணங்களைக் கூறுகிறான். அரக்கர்களின் மாயத்தை வீடணனாலும் அவன் தோழர்களாலும் அறிய வாய்ப்பு உண்டு என்பது ஒன்று. அடைக்கலமென்று வந்தவனைக் காக்க வேண்டும் என்பது மற்றொன்று.

வீடணன் வந்ததற்குரிய காரணத்தைச் சொல்லும்போதுதான் முன்பு சொன்ன பாடல் வருகிறது.

''வாலிவின் பெற அரசு
இலைய வன்பெறக்
கோலிய வரிசிலை
வலியும் கொற்றமும்
சீலமும் உணர்ந்துநிற்
சேர்ந்து தெள்ளிதின்
மேலரசு எய்துவான்
விரும்பி மேயினன்''

என்பது அந்தப் பாட்டு. மற்றவர்கள் கொள்ளும் பொருளை முன்பே சொன்னேன். 'வாலி விண் பெறுதலும் அரசு இளையவன் பெறுதலும் வீடணனுக்குத் தன் திறத்திலும் இராமன் அவ்வாறே நடப்பான் என்றும், தன் தமையன் இறந்து படத் தனக்கு அரசு கிடைக்கும் என்றும் நினைக்கச் செய்தன' என்று அவர்கள் கூறுவார்கள்.

'மேல் அரசு எய்துவான்' என்பதற்கு, 'இனிமேல் அரசை அடையும் பொருட்டு' என்று அவர்கள் பொருள் கூறுவார்கள்.

பின்னல் வரும் மற்றொரு பாட்டையும் நோக்கினால் அநுமனுடைய கருத்துத் தெளிவாகும்.

''காலம் அன்று இவன் வரு
காலம் என்பரேல்
வாலிதன் உறுபகை
வலிதொ லைத்தலால்
ஏலும்இங் கிவற்கினி
இறுதி என்றுணை
மூலம்என்று உணர்தலால்,
பிரிவு முற்றினன்.''

'இவன் வந்தது சரியான காலம் அன்று என்பார்களானால், வாலியினுடைய மிக்க பகை வலிமையினை நீ அழித்ததமையால், உன்னால் இந்த இராவணனுக்கும் இறுதி உண்டாகும் என்றும், உன்னை ஆதிமூலப் பொருள் என்றும் உணர்தலால் அவனைப் பிரிந்து வந்து விட்டான்' என்பது இதன் பொருள். வாலியின் அழிவு தவறுசெய்தவர்களை இராமன் அழிப்பான் என்பதை உணர்த்தியதாக வீடணன் கொண்டான் என்பது இதனால் தெளிவாகிறது. இராமனிடம் வந்தது, அவன் அரசைத் தனக்குத் தருவான் என்ற எண்ணத்தால் அன்று. அவனை மூலம் என்று உணர்தலால் வந்தான். வீடணன் தவம் செய்து ஆதியங் கடவுளுக்கு அன்பைப் பெற்றவன். ஆதலின் அந்த ஆதியங் கடவுளாகிய மூலம் இராமனே என்று உணர்ந்து இங்கே வந்தான். முன்னே காட்டிய பாட்டில், 'கோலிய வரிசிலை வலியும் கொற்றமும்' என்பதனோடு, 'சீலமும்' உணர்ந்ததாகச் சொல்லுகிறான் அநுமன். சீலமாவது எளியனுக நிற்கும் கருணை. அந்தக் கருணையையெண்ணியேவீடணன் வந்திருக்கிறான். இவற்றையெல்லாம்உணர்ந்து, ''நிற்சேர்ந்து, தெள்ளிதின், மேல் அரசு எய்துவான் விரும்பி மேயினன்'' என்கிறான் அநுமன்.

'இவற்றையெல்லாம் தெளிவாக உணர்ந்து உன்னைச் சேர்ந்து மேல் அரசாகிய வீட்டை எய்துவதை விரும்பி இவன் வந்துளான்' என்றே இதற்குப் பொருள் கொள்ளவேண்டும். வாலி சொன்னதை இங்கே நினைத்தால் மேல் அரசு என்பது எதைக் குறிக்கும் என்பது தெளிவாகும்.

'வெற்றரசு எய்தி எம்பி
வீட்டரசு எனக்கு விட்டான்'

என்று அவன் சொல்கிறான். அங்கே இரண்டு வகை அரசை அவன் குறிக்கின்றான். தான் இது வரையில் ஆண்ட அரசை வெற்றரசு என்றும், இனி அடையப் போகிற முத்தியை வீட்டரசு என்றும் சொல்கிறான். அந்த வீட்டரசே மேல் அரசு. அநுமன், வீடணன் தவம் நிறைந்தவன். தருமநெறி ஒழுகுகிறவன். வஞ்சம் இல்லாதவன் என்றெல்லாம் எடுத்துச் சொல்லும் இயல்புகளுக்கு, இந்த உலகத்து அரசை விரும்புகிறான் என்பது பொருந்தாது. ஆகவே மேல் அரசு என்பதற்கு மேலாகிய வீட்டரசு என்று பொருள் கொள்வதே பொருந்தும்.

'இனிமேல் இராவணன் அழிந்து விடுவான். இவனுடன் இருந்தால் நம் தவம் வீணாகி விடும். இராமனை அடைந்தால் பிறவி நோய் தீர்ந்து வீடு பெறலாம்' என்ற எண்ணத்தோடு வீடணன் வந்திருக்கிறான். இனி, இராவணனைத் திருத்த முடியாது என்று அறிந்து வந்தமையால், வந்த காலம் சரியான காலமாயிற்று.

இனி இராமனுடைய கூற்றைப் பார்க்கலாம். அநுமன் கூறியவற்றையெல்லாம் இனிதாகக் கேட்டு மகிழ்கிறான் இராமன். அவன் மேலே பேசுகிறான். அவன் எடுத்தவுடனே சொல்வது இதுதான் :

''கருத்துற நோக்கிப் போந்த
காலமும் நன்று; காதல்
அருத்தியும் அரசின் மேற்றே
அறிவினுக்கு அவதி இல்லை;
பெருந்துயர் தவத்தி னாலும்
பிழைப்பிலன் என்னும் பெற்றி
திருத்திய தாகும் அன்றே
நம்வயிற் சேர்ந்த செய்கை''

இதைச் சொல்லி விட்டு மேலே அடைக்கலம் என்று வந்தவனைக் காத்தல் வேண்டும் என்பதற்குப் பல காரணங்களைக் கூறுகிறான். வீடணனுடைய இயல்பைக் கூறும் பாட்டு இந்த ஒன்றுதான் :

இந்தப் பாட்டில் நான்கு செய்திகள் வருகின்றன. (1) இவன் வந்த காலம் நன்று ; (2) இவனுடைய காதலோடு சேர்ந்த விருப்பமும் அரசின் மேற்று ; (3) அறிவுக்கு எல்லை இல்லை; (4) இவன் செய்த தவத்தினாலும் குற்றமில்லாதவன் என்பதை நம்மிடம் சேர்ந்த செய்கை விளக்கியது.

இவற்றில் வந்த காலம் நன்று என்பதை அநுமன் கூறிய காரணங்களையே இராமன் நினைந்து கூறியிருக்க வேண்டும். மற்றவர்கள் இவன் வந்த காலம் தக்கதன்று என்பதற்கு இது சமாதானம் ஆகிறது. அறிவுக்கு எல்லை இல்லை என்பது இவன் நீதி, அறம் ஆகியவற்றை அறிந்த அறிஞன் என்பதை உணர்த்தியது. தவம் செய்ய வேண்டிய வரங்கள் பலிப்பதற்கு இங்கே வந்தது பொருத்தமானது என்பது கடைசியில் சொன்ன காரணம். இவை மூன்றும் வீடணனுடைய உயர்ந்த பண்புகளையே குறித்து நிற்பன.

இரண்டாவதாக வரும், ''காதல் அருத்தியும் அரசின் மேற்றே'' என்பது தான் ஐயத்

திற்கு இடமான பகுதி. வீடணனுக்கு மிக்க விருப்பம் அரச பதவியின் மேல் இருக்கிறது என்று பொருள் சொன்னால், அவன் தன்னலம் உடையவன் என்று கொள்ள வேண்டி வரும். அப்படியானால் இந்தப் பாட்டில் வரும் ஏனைய மூன்று இயல்புகளுக்கும் அது பொருந்தாது. அநுமன் சொன்ன 'மேலர செய்து வான் விரும்பி மேயினன்' என்பதோடும் ஒட்டாது.

வீடணன் கூற்றில் அவன் பிறவித்துயரைப் போக்குவதற்காகவே இராமனை அணுகினன் என்பதும், அநுமன் கூற்றில் அவன் வீட்டரசை விரும்பி வந்தான் என்பதும் தெளிவாகத் தெரிவதால், அந்த இரண்டுக்கும் ஏற்ப இங்கே பொருள் கொள்ள வேண்டும். இராமன் கூற்றில் முன்னும் பின்னும் கூறும் சிறப்பான இயல்புகளோடு பொருந்தும்படி அப்பொருள் இருக்க வேண்டும்.

''காதல் அருத்தியும் அரசின் மேற்றே'' என்பதில் அருத்தி என்பது எழுவாய். 'அரசின் மேற்று—அரச பதவியின் மேல் இருக்கிறது' என்று பொருள் கொள்வர் சிலர். அவர்கள் கொள்ளும் பொருளில், இன் என்பது சாரியை, மேல் என்பது ஏழாம் வேற்றுமையுருபு ; அதன் மேல் 'து' விகுதி பெற்று குறிப்புவினை முற்றியிற்று.

இப்படிப் பொருள் செய்யாமல் இன் என்பதை ஐந்தாம் வேற்றுமை உருபாக்கி அதற்கு நீங்குதற் பொருளைக் கொண்டு 'அரசை விட மேற்பட்டது' என்று கொள்ள வேண்டும். 'இவனுடைய விருப்பம்' அரச பதவியைப் பெறுவதுஅன்று;அரசினும் மேலாகிய வீட்டைப் பற்றியது' என்று பொருள் கொள்வதே மேலே சொன்ன அத்தனை இயல்புகளுக்கும் ஏற்புடையதாக இருக்கும்.

'இவன் தக்க காலத்தில் வந்திருக்கிறான்; இவனுடைய விருப்பமும் அரசைவிட மேற்பட்டது; இவனுடைய அறிவு எல்லையற்றது; இவன் செய்த தவம் பிழை போகவில்லை என்பது நம்மிடம் வந்து சேர்ந்ததனால் விளக்கமாகின்றது' என்று இராமன் சொல்வது எவ்வளவு பொருத்தமாக இருக்கிறது; முரண்பாடு எழவே இடம் இல்லாமல் இருக்கிறது இது.

'அரசரிற் பெரியர் அந்தணர்... என்று வருவழி இன் உருபு நீங்குதற் பொருளாக வேற்றுமை செய்தது' என்பது நன்னூல் உரையாசிரியர் கூறும் விளக்கம். அவ்வாறே, 'அரசினும் மேற்பட்டது இவனுடைய அருத்தி' என்று இங்கே கொள்ள வேண்டும். இன்னைச் சாரியையாகக் கொண்டு பொருள் செய்வதனால்தான் முன்னே சொன்ன முரண்பாடு தோன்றுகிறது. இன்னை வேற்றுமை உருபாகக் கொள்வதே பொருத்தம்.

அநுமன், 'மேல் அரசு எய்துவான்' என்று சொன்னதும், இராமன் 'அரசைவிட மேற்பட்டது' என்றதும் ஒன்றையே சொல்வனவாக அமைகின்றன. இருவருள்ளமும் ஒத்து நிற்பதைப் பல இடங்களில் கம்பர் காட்டுவார்.

வீடணன் இராமனை அடைந்ததற்குப் பிறவியைப் போக்கி வீட்டை அடைவதுதான் நோக்கம் என்பதைப் பின்வரும் வேறு பாடல்களாலும் தெரிந்து கொள்ளலாம்.

சுக்கிரீவன் வீடணனிடம், இராமன் அபயம் வழங்கினன் என்று சொன்னவுடன் அவன் அப்பெருமானுடைய அருளை நினைந்து உருகுகிறான்.

''அறவினை இறையும் இல்லா
அறிவிலா அரக்கன் என்னும்
பிறவியிற் பெயர்ந்தேன்; பின்னும்
நரகினிற் பிழைப்ப தானேன்''

என்று பேசுகிறான். பிறவியினின்றும் மீண்டேன் என்கிறான்.

இராமனை வந்து வணங்குகிறான். அவன் முகம் மலர்கிறது. அதைக் கம்பர் சொல்கிறார்.

''அழிந்தது பிறவி என்னும்
அகத்தியல் முகத்துக் காட்ட''

இங்கும் பிறவியினின்றும் நீங்கியதாக எண்ணி மகிழ்கிறான். இராமனால் பிறவி நீங்கும்; மேலான வீட்டரசைப் பெறலாம் என்று வீடணன் எண்ணிய எண்ணம் பின்னும் ஓரிடத்தில் புலனாகிறது. போர்க் களத்தில் வீடணன் கும்பகருணனிடம் சென்று இராமனிடம் வந்து விடு என்று சொல்கிறான்.

''இருளுறு சிந்தை யேற்கும்
இன்அருள் சுரந்த வீரன்
அருளும்நீ சேரின்; அன்றி
அபயமும் அளிக்கும்; அன்றி
மருள்உறு பிறவி நோய்க்கு
மருந்தும் ஆம்; மாறிச் செல்லும்
உருளுறு சகட வாழ்க்கை
ஒழித்துவிடு அளிக்கும் அன்றே''

இந்தப் பாட்டில், தெளிவாக, இராமனை அடைந்தால் பிறவி நோய் தீரும் என்பதையும், வீடு பெறலாம் என்பதையும் வீடணன் கூறுகிறான். ஆதலால் அவன் உள்ளக் கிடக்கை நன்கு வெளியாகிறது.

இதுகாறும் சொன்னவற்றால், வீடணன் ஆதியங் கடவுளுக்கு அன்பும், நீதியும் அறமும் போற்றும் இயல்பு உடையவன் என்பதும், தன்னால் இயன்ற அளவு இராவணனைத் திருத்த முற்பட்டும் அவன் திருந்தாமையின் தான் பெற்ற பெரு வரத்துக் கேற்ற சூழ்நிலையை அடையத் தக்க காலம் இதுவே என்று உணர்ந்து இராமனை அடைந்தான் என்பதும், இராமனை அடைவதனால் பிறவித் துயர் நீங்கி வீடு பெறலாம் என்ற விருப்பத்தையே அவன் கொண்டு இருந்தானென்பதும், அவன் இயல்பை அறிந்த அநுமன் அவன் மேலான வீட்டரசை விரும்பி வந்துள்ளான் என்று கூறினனென்பதும், அவனை ஏற்றுக் கொள்ள எண்ணிய இராமன் அவனுடைய அறிவையும் தவத்தையும் உணர்ந்து, அவனுக்கு அரசைவிட மேம்பட்ட ஒன்றில் விருப்பம் இருக்கிறதென்று சொன்னான் என்பதும் தெளிவாகும்.

ஆணையரின் சுற்றறிக்கை

எம். கே. பாலசுப்பிரமணியம், ஐ. ஏ. எஸ்.,
ஆணையாளர்,
இந்து சமய அறநிலைய (ஆட்சி)த்துறை.

சென்னை-600034.

நே.மு.க.எண். 1948/77-எ4.

நாள்: 18—1—1977

அன்பார்ந்த

பொருள்: திருக்கோயில்-திங்கள் இதழ்-புதிய உறுப்பினர்களைச் சேர்த்தல்-குறித்து.

பார்வை: இவ்வலுவலக நே. மு. க. எண். 41234/71/இ5 நாள் 22-2-72.

அறநிலையத்துறையின் நிர்வாகத்தில் உள்ள எல்லாக் கோயில்களிலும் கட்டாயமாகத் திருக்கோயில் திங்கள் இதழை வாங்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும், அறங்காவலர்கள் அனைவருமே தம் சொந்தப் பணத்தில் சந்தா செலுத்தி இதன் உறுப்பினர்களாக ஆக வேண்டும் என்றும், இதற்கான நடவடிக்கைகளை எல்லா உதவி ஆணையர்களும் மேற்கொள்ள வேண்டும் என்றும், பார்வையிற்கண்ட இவ்வலுவலகக் குறிப்பின் மூலம் தெரிவிக்கப்பட்டது.

(2) தங்கள் எல்லைக்கு உட்பட்ட, ரூபா ஆயிரத்திற்கு மேல் வருமானம் வரக்கூடிய கோயில்களில் பெரும்பாலானவை, இன்னும் திருக்கோயில் சந்தாதாரராகச் சேராமல் உள்ளன. எனவே ரூ. 1000-க்கு மேல் வருமானம் உள்ள கோயில்களின் பட்டியல் ஒன்றும், (தாலுகா வாரியாக) இதுவரை உறுப்பினராகாமல் உள்ள கோயில்களின் பட்டியல் ஒன்றும் அனுப்புமாறும், கோயில்கள் இருப்பிட முகவரியுடன் பின்கோட் (Pin Code) எண் குறிப்பிடுமாறும் கேட்டுக் கொள்கிறேன்.

(3) மேலும், எல்லாக்கோயில்களுக்கும் புதிதாக அறங்காவலர்கள் நியமனம் செய்ய வேண்டியுள்ளது. ஏற்கனவே சுற்றறிக்கை அனுப்பியுள்ளபடி, அவர்கள் அனைவரையும் சொந்தப்பணத்தில் மூன்றாண்டுச் சந்தா ரூ. 36/-செலுத்தித் திருக்கோயில் சந்தாதாரர்களாக்குவதற்கு, தங்கள் எல்லைக்குட்பட்ட கோயில்களைப் பொறுத்தமட்டில், தாங்களே பொறுப்பாவீர்கள்.

(4) நியமிக்கப்பட இருக்கும் ஒவ்வொரு புதிய அறங்காவலருக்கும் நியமன உத்திரவை வழங்குமுன், அவர் ஏற்கனவே திருக்கோயிலுக்குச் சந்தாதாரராக உள்ளாரா? என்பதைக் கவனிக்குமாறும், சந்தாதாரராயிருந்து சந்தாப்பாக்கி செலுத்தாதிருந்தால் நிலுவையுடன் நடப்பு ஆண்டிற்கும் சந்தா வசூலிக்குமாறும் கேட்டுக் கொள்கிறேன்.

(5) ஏற்கனவே சந்தாதாரராக இல்லாதிருந்தால், அவரிடம் புதிய சந்தாதாரருக்கான மூன்றாண்டுச் சந்தாத் தொகையை வசூலித்து, இதற்கான விவரங்களைத் தனியே சமர்ப்பிக்குமாறும் கேட்டுக் கொள்கிறேன்.

இந்தக் கடிதம் கிடைக்கப்பெற்றமைக்கு ஒப்புதல் அளிக்குமாறு கோருகிறேன்.

158619

தங்கள் அன்புள்ள,

எம். கே. பாலசுப்பிரமணியம்.

(ஒப்பம்)

பெறுநர்:
எல்லாத் துணையாணையர்களும்,
உதவியாணையர்களும்.

கம்பர் கவிநயம்

புலவர் திரு. கு. பாலசுந்தர முதலியார்.

கம்பர் ஈடும் எடுப்புமில்லாத கவிஞர்; கற்பனையில் உயர்வு, கலையின் பாங்கு, நடையின் தெளிவு, ஓசையின் இன்பம், உணர்ச்சியைத் தூண்டும் ஆற்றல் முதலிய எவ்வகையான அம்சங்களைக் கருதிப் பார்த்தாலும், மற்றைய தமிழ்க் கவிசிரேட்டர்கள் எல்லோரினும் எத்தனையோ மடங்கு சிறந்து, உலக மகா கவிகளின் கூட்டத்தில் மிக்க உன்னத பதவியை வகிப்பவர் என்பது பன்மொழிப் புலவரின் துணிபு.

கம்பர் என்னும் பெயரை நினைத்த மாத்திரத்தில், ஒவ்வொரு காவிய ரசிகர் கண்முன்பும் தமிழ்க் கவிதா மண்டபத்தின் மிக்க உன்னதமான சிகரமும், கற்பனை உலகத்தின் உச்சியும், தமிழ் நாட்டுக் கவி வளப்பமும், ஒருங்கே ஓர் ஓவியத்தில் விளங்குவன போலத் தோன்றும். கல்விக் கடலை நிலைகண்டுணர்ந்து கவிச் சக்கரவர்த்தி யென்னும் அரிய மகுடத்தைத் தரித்த கம்பருடைய கவிகளைத் தலைமுறை தலைமுறையாக நம் தமிழ் நாட்டுப் பெரியார்கள் அநுபவித்துப் போற்றி, நமக்கு உதவியுள்ளனர்.

கம்பர், கவியுலகில் மிகச் சிறந்து விளங்குவதற்குக் காரணம், அவருடைய இராமாயணத்தில் எங்கும் காவிய காம்பீரியம் இனிது நிறைந்து இருத்தலேயன்றிப் பல பல பகுதிகளில் நானவித நாடக நயம் நனி சிறந்திருத்தலேயாகும்.

''கம்பராமயணம், காவியத்துக்குரிய சிறப்புக் குன்றுமல், நாடக ரசம் நனி நிரம்பியிருத்தல் பற்றியே, அதிமதி நுட்பமும், அரும் பெரும் பாண்டித்தியமும், ஒருங்கு நிரம்பிய உத்தம வித்துவான், 'ரசிக சிகாமணி, வியாக்கியானச் சக்கரவர்த்தி, தனிச் 'சுலோகி' என்னும் வான்மீகத் தனிச் சுலோக மாபாடிய நூலாசிரியர், பெரிய வாச்சான் பிள்ளை, கம்பராமாயணத்தைப் பற்றிக் கூற நேர்ந்த அமயங்களில் அதனைக் கம்ப காவியம் என்னுது கம்ப நாடகம் என்பர்'' என்று வெ. ப. சுப்பிரமணிய முதலியார் கூறியுள்ளது ஈண்டு நோக்கற்பாலது.

கம்பராமாயணக் குகப் படலத்தில், அரசகுடும்பம் ஏறிச் சென்ற ஓடத்தில் நிகழ்ந்த செய்தியைக் கம்பர், நாடக ரசம் நனி சிறக்க அமைத்துள்ளனர். இப்பகுதி, கம்பர் கவித்திறத்தைக் காட்டும் சிறந்த பகுதிகளுள்ளே சிறந்தவற்றுள் ஒன்றென்பதைக் கற்றறிந்த ஆன்றோர் ஒரு மனமாக ஒப்புக் கொண்டுள்ளனர். இப்பகுதியே எப்பகுதியிலும் சிறந்ததென்பாருமுளர். பிற மொழியாளரும் இப்பகுதியின் சிறப்பியல்புகளை உணர்ந்து இன்புறுதற்குத் தமிழ் மொழி பயின்று, கம்பராமாயணத்தைக் கற்க வேண்டும் என்பேனுயின், அது மிகையாகாது. இனி முதற் பாட்டை நோக்குவோம்:

'சுற்றத்தார் தேவரொடும் தொழநின்ற
கோசலையைத் தொழுது நோக்கி
வெற்றித்தார்க் குரிசிலிவ ராரென்று
குகன்வினவ வேந்தர் வைகும்
முற்றத்தான் முதல்தேவி மூன்றுலகு
மீன்றளை முன்னீன் றளைப்
பெற்றத்தால் பெறுஞ்செல்வம் யான்பிறத்த
லால்துறந்த பெரியா ளென்றான்'

அரசகுடும்பம் ஏறிய ஓடம் செல்லும் போது, சுற்றத்தாரும் தேவரும் கும்பிடா நிற்க, அவ்வோடத்தில் நின்று கொண்டிருந்த கோசலாதேவியைக் கும்பிட்டுக் கொண்டே, குகன், 'அரசே, இவர் யார்?' என்று கேட்கப் பரதன், ''தரிசனத்திற்காக நாள்தோறும் மன்னர்கள் காத்திருக்கப் பெற்ற முற்றத்தை யுடைய தசரதச் சக்கரவர்த்தியின் முதல் மனைவியார் இவர்; மூன்றுலகங்களையும் பெற்ற பிரமனை முன் பயந்த மூர்த்தியாகிய இராமனைப் பெற்றதனால் அடையக் கிடந்த பெரிய செல்வத்தினைப் பாவியாகிய யான் பிறத்தலால் துறந்த பெருந்தகைமை யுடையாள்'' என்று பதிலளித்தான்.

சுற்றத்தாரே யன்றித் தேவர்களும் தொழுது கொண்டிருக்கும் ஒருவரை, யார் என்று அறிந்து கொள்ள விரும்புவோர், அவரைக் கையினுல் சுட்டிக் காட்டி, 'இவர் யார்' என்று கேட்பது தக்க முறையன்றென்று, கம்பர், கூறுமல் கூறித் தகுதியான முறை இஃதென்று உணர்த்துபவராய், 'கோசலையைத் தொழுது நோக்கி, வெற்றித்தார்க் குரிசிலிவர் ஆர் என்று குகன் வினவ' என்று கூறும் நனி நாகரிகம் வியந்திடற்குரியதாகும்.

இன்னும், 'இவர் ஆர்' என்னும் குகனுடைய கேள்விக்குப் பரதன், தசரதனுக்குத் தேவியென்றும், இராமனுக்குத் தாய் என்றும் பதில் கூறியிருக்கலாம். ஆனல், பரதன் அங்ஙனம் கூறுமல், 'வேந்தர் வைகும் முற்றத்தான்' என்று தசரதனை விசேடித்தும், 'முதல் தேவி' என்று கோசலையைச் சிறப்பித்தும், 'மூன்றுலகையும் ஈன்றனை முன்னீன்றாள்' என்று இராமனை மேம்படுத்தியும் கூறியது ஏன் என்றால், சுற்றத்தாரும் தேவரும் தொழுது கொண்டிருந்தாராகையால், அவளைக் கை நீட்டிச் சுட்டிக் காட்டாமல் தொழுது நோக்கிச் சுட்டிய குகன்,

சுற்றம் தொழுவானேன்? தேவர் தொழுவானேன்? என்பனவற்றை அறிந்திட அவாவியது உய்த்துணரற்பாலது. இங்ஙனம் குகன் கேளாது கேட்ட கேள்வியின் குறிப்புணர்ந்த பரதன், 'அரசர்கள் வணங்கும் சக்கரவர்த்தியாகிய தசரதனுடைய பட்டத்து ராணியாகையால், சுற்றத்தார் தொழுகின்றனர்; திருமாலின் அவதாரமான இராமனைப் பயந்தவளாதலால், தேவர்கள் வணக்கம் செய்கின்றனர்' என்று அறிவிக்கவே அங்ஙனம் விசேடித்துக் கூறினன் என்பதை உணர்ந்திடும்போது, உவகை ஊற்றெனப் பொங்குகின்றது.

இங்ஙனம் கோசலையை விசேடித்துக் கூறிய பிறகு, 'இராமனைப் பெற்றத்தால் பெறும் செல்வம் யான் பிறத்தலால் துறந்த பெரியாள்' என்று பரதன் ஏன் கூறவேண்டுமெனின், அவன், மேல் கூறிய பதில்களைக் கொடுக்கும் போது, கோசலையின் முன்னைய இன்ப நிலையும், இப்போது அவள் அடைந்துள்ள துன்ப நிலையும் அவன் மனத்தின் கண்ணே உண்டாகி, அவனை வருத்த, 'அந்தோ! பாவியாகிய யான் பிறவாதிருந்தால் அன்னையின் ஆனந்த நிலை அழிந்திடாதன்றே' என்னும் எண்ணம் உதிக்க, அதனை வெளிப்படுத்தவே யாகும்.

இனி, பரதன் பிறந்தமையால் கோசலா தேவி செல்வத்தை இழந்தவாறு என்னை? எனின், அவன் பிறக்க வில்லையாயின், அவன்பொருட்டு அவன் தாயாகிய கைகேயி தசரதன் இராமனுக்குக் கொடுத்த அரசினைக் கவர்ந்து கொண்டு, அவ்வுத்தமனைக் காட்டிற்கு ஓட்டியிராள் என்பதையும், அவள் அவ்வாறு செய்யாதிருந்தால், கோசலா தேவி, மாங்கலிய பாக்கியத்தையும், இராமன் கோமுடி சூடியாளும் அரச செல்வத்தையும் இழந்திருக்க மாட்டார் என்பதையும் குறிப்பித்தவாறும். இவ்வளவு பொருள்களைக் கம்பர் எவ்வளவு அழகாக ஒரே ஒரு செய்யுளினால் அறிவித்துள்ளார் என்பது நோக்கி இன்புறற்குரியதாகும்.

''சில்வகை எழுத்தில் பல்வகைப் பொருளைச்
செவ்வன் ஆடியில் செறித்தினிது விளக்கித்
திட்பம் நுட்பம் சிறந்தன சூத்திரம்''

என்னும் நன்னூல் சூத்திரத்திற்கு இச்செய்யுள் சிறந்ததோர் எடுத்துக் காட்டு என்பதை அறிவீராக. இதனாலன்றோ கம்பர் கவிகளைக் கம்ப சூத்திரம் என்று உலகோர் வழங்குவாராயினர்.

'என்றலுமே யடியின்மிசை நெடிதுவீழ்ந்
தழுவானை இவன்யா ரென்று
கன்றுபிரி காராவின் துயருடைய
கொடிவினவக் கழற்கால் மைந்தன்
இன்துணைவன் இராகவனுக் கிலக்குவற்கு
மினையவற்கு மெனக்கும் மூத்தான்
குன்றனைய திருநெடுந்தோள் குகனென்பான்
இந்நின்ற குரிசி லென்றான்'

இதன் பொருள், பரதன்கோசலாதேவியை இன்னாள் என்று குகனுக்குத் தெரிவித்தவுடனே, அவளது அடியில் விழுந்து நெடும்பொழுது அழுதுகொண்டிருந்த குகனைக் கோசலா தேவி, 'இவன் யார்' என்று கேட்க, பரதன், 'இக்குரிசில் இராமனுக்குத் தம்பி; இலக்குமணனுக்கும் சத்துருக்கனுக்கும் எனக்கும் மூத்தான்; குகன் என்னும் பெயருடையான்' என்றான் என்பதாம்.

ஒரு பெரியவரை இன்னாரென்று ஒருவர் மற்றொருவருக்கு அறிவிக்கும்போது, அறிவிக்க அறிந்தார் அப்பெரியாரை வணங்குதல் முறைமை என்பது, 'என்றலுமே அடியின்மிசை நெடிது வீழ்ந்து' என்றதனால் அறிவிக்கப்பட்டது.

துன்புற்ற அன்பரைச் சந்திக்கும் மற்றொரு அன்பர் இயல்பாக அழுதல் துக்கம் விசாரித்தலாகும் என்பது விளங்கிடக் குகன் துக்கம் கொண்டாடுதலை, 'அழுவானை' என்ற ஒருசொல்லினால் சுருக்கமாகவும் விளக்கமாகவும் குறித்திட்ட சொற் சாதுரியம் கொண்டாடத் தக்கதாகும்.

'இவன் யார்?' என்று கோசலை கேட்ட கேள்வியில், ''அன்பிற்குமுண்டோ அடைக்குந் தாழ் ஆர்வலர் புன்கணீர் பூசல் தரும்'' என்ற அப்பொய்யில் புலவர் பொருளுரைக்கோர் எடுத்துக் காட்டாய் விளங்கும் இம்மகன், இங்ஙனம் அழும் அன்புடைமைக்குக் காரணம் யாது என்னும் குறிப்பு அடங்கியுள்ளதாகையால், பரதன், அக்காரணத்தைத் தெரிவிப்பானாய், 'இவன் உன் புத்திரன்' என்று உணர்த்திட, 'இன்துணைவன் இராகவனுக்கு' என்றான். மூத்தான் என்பது பின் வருவதால் 'துணைவன்' என்பது சகோதரன் என்னும் பொருளையும் குறிப்பது அறியத் தக்கது. துணைவன் என்னும் சொல் தோழனையும் சகோதரனையும் ஒருங்கே குறிக்க வல்லதாகையால், இராமன் குகனுக்கு தோழனாகவும் சகோதரனாகவும் பழகினான் என்பதை உணர்த்தியவாறும்.

பரதன், இலக்குமணன் சத்துருக்கன், ஆகிய இருவருக்கும் மூத்தவனாயிருந்தும், தன்னைக் கடையில் வைத்துக் கூறிய பணிவுடைமை போற்றுதற்குரியதாகும்.

மூந்திய செய்யுளில் பரதன், கோசலா தேவியை இன்னாரென்று குகனுக்குக் கூறிய போது, அவளுடைய பெயரைக் கூறாது விடுத்தது, குகன் அரச குடும்பத்தார் எல்லாருடைய பெயர்களையும் முன்பே அறிந்திருந்த காரணத்தால். இக்காரணம் கருதியே போலும் சுமித்திரை, கைகேயி என்பவர்களை அறிவிக்கும் செய்யுள்களிலும் அவர் தம் பெயர்கள் கூறப்படாமல் விடுபட்டுள்ளன என்பது அறிதற்பாலதாகும்.

இப்பாட்டில், 'குகன் என்பான்' எனப் பெயர் கூறியதன் காரணம், கோசலா தேவி குகனைப் பற்றி இதுவரை ஒன்றும் அறியாதிருந்தமையே யாகும்.

இக்கவி, ஓசை அமைதியும் பொருளமைதியும் ஒருங்கே கொண்டு, படிப்பவர் இதயத்தில் என்றும் நீங்காத இன்பம் விளைத்திடும் இயல்பினதாகும் என்பது அறிஞர் எவரும் மறுத்தற்கரியதோர் உண்மையாகும்.

இனி மூன்றும் செய்யுளை நோக்குவோம் :

'நைவீர லீர்மைந்தீர் இனித்துயரால்
நாடிறந்து காடு நோக்கி
மெய்வீரர் பெயர்ந்ததுவும் நலமாயிற்
றுமன்றே விலங்கற் றிண்டோள்
கைவீரக் களிறனைய காளையிவன்
தன்னோடுங் கலந்து நீங்கள்
ஐவீரு மொருவீராய் அகலிடத்தை
நெடுங்காலம் அளித்திர் என்றுள்'

பரதன் வாயிலாகக் கோசலா தேவி, குகன் இன்னுன் என்பதை அறிந்து, பெரிதும் மகிழ்ச்சி கொண்டவளாய், 'மைந்தர்காள், இனி நீங்கள் துன்பத்தால் வருந்துபவரல்லீர், இராம இலக்கு மணர் காடு சென்றது, என் மக்கள் நால்வரில் இருவரை இழக்கும்படியான கேடு என்று எண்ணியிருந்தேன். அது அங்ஙனமின்றி நால் வர் ஐவராகிய நன்மையாய் மாறியது. ஆகை யால் இக்குகனோடு சேர்ந்து நீங்கள் ஐந்து சகோதரரும் மன ஒற்றுமையுடன் ஒருவரே போன்று இப்பரந்த நிலவுலகைப் பாதுகாப்பீ ராக' என்று ஆசீர்வதித்தனள் என்பதே இக் கவியின் திரண்ட பொருளாகும்.

இராமனுக்குக் குகன் இன் துணைவன் என்பதைக் கோசலை அறிந்ததும், அவன் ஒரு வேடன் என்பதையும் பாராமல் அவனைப் பெற்று வளர்த்த தாயின் தன்மையையுடைய வளாகி, அவன் அழுததைக் கொண்டு, 'நைவீர லீர்' என்று அவனை ஆற்றியும், தொழுததைக் கண்டு, 'ஐவீரும் ஒருவீராய் அகலிடத்தை நெடுங்காலம் அளித்திர்' என்று வாழ்த்தியும் நின்ற தன்மை, அவளுடைய உணர்ச்சி ததும் பும் விரிந்த மனப்பான்மையை விளக்குகின்றது. இங்ஙனம் மக்களின் மனவுணர்ச்சி நிலையை விளக்குவதே கவிகளின் மாண்பாகும். உணர்ச்சி யறிவிப்பு என்பது கவித்துவத்துக்குரிய சிறந்த அம்சங்களில் ஒன்றுகும்

இனி நான்காம் செய்யுளைக் காண்போம்.

''அறந்தானே யென்கின்ற அயல்நின்றுள்
தனைநோக்கி ஐய அன்பின்
நிறைந்தாளை யுரையென்ன நெறிதிறம்பாத்
தன்மெய்யை நிற்ப தாக்கி
இறந்தான்தன் இளந்தேவி யாவர்க்கும்
தொழுகுலமாம் இராமன் பின்பு
பிறந்தானு முளனென்னப் பிரியாதான்
தனைப்பயந்த பெரியா ளென்றுன்''

கோசலாதேவி, தன் கணவனுடைய ஆணையை அனுசரித்துத் தன்னுடைய குமாரன் இராமனைக் காட்டுக்குச் செல்ல விடை கொடுத் தாள். ஆனால் சுமித்திரா தேவியோ, அப்படிப் பட்ட ஆணை ஒன்றும் இல்லாதிருக்கவும், 'இராமன் கானகம் போனால் போகட்டும். என் மகன் நகரத்தில் இருக்கட்டும்' என்று சாதார ணமான தாய்மார்கள் கருதுவது போலக் கருதா மல், இலக்குமணனை நோக்கி, ''மகனே, நீ இராமனுடன் காட்டிற்கு ஏகுவாய்; அயோத்தி யையும் எம்மையும் பிரிந்து செல்வது எங்ஙனம் என்று எண்ண வேண்டா; நீ, இராமனுடன் வசித்தால் அவ்வனம் உனக்கு அயோத்திபோல இன்பமுடையதாகும். இராமனும் சீதையுமே உனக்குப் பெற்றோர் என்று கருதுவாயாக ; இனி இவ்விடம் நீ நிற்பதும் குற்றமுடைய தாகும். ஆகையால் உடனே செல்வாய். நீ இராமன் பின்னே செல்லும்போது, உன்னை ஓர் அரச குமாரன் என்றுவது, அவனுடைய தம்பி என்றுவது நினைத்துப் பெருமிதம் கொள்ள வேண்டா; நீ அவனுக்கு அடியவனுயிருப்பவன் போல அவன் ஏவும் குற்றேவல் செய்வாய் ; இராமன் மீண்டு வந்தால், அவனுடன் நீயும் வருவாயாக; அப்படியல்லாமற் போனால் அவ னுக்கு முன்னமே நீ உன் உயிரை விடு'' என்று அறவுரை பகர்ந்த உத்தமியாதலை அறிவிக்கக் கல்விக் கடலாகிய கம்பர், 'அறந்தானேயென் கிற' என்னும் அடைமொழியால் அத்தேவியைச் சிறப்பித்தனர்.

இப்பாட்டினால் தசரதனுடைய மூன்றுந் தேவியாகிய சுமத்திரையைக், கோசலைக்கு அயல் நின்றுள் என்று கூறி, இரண்டாந் தேவியான கைகேயி, கோசலாதேவிக்குப் பக்கத்தில் நிற் காமல், தான் செய்த கொடுமையை நினைந்து தூரத்தில் விலகி நின்றுள் என்பதனைக் கவி உய்த்துணர வைத்துள்ளனர்.

குகன், தான் முன்பு அறியாத சுமித்திரா தேவியை, 'அன்பின் நிறைந்தாள்' என்று அவள் அகத்தின் இயல்பு கண்டது எங்ஙனமெனின்,

''அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டு முகம்''

ஆகையால், கண்டான் என்க.

'நெறி திறம்பா மெய்' என்றது கைகேயி இரண்டு வரங்களையும் தசரதன்பால் கேட்டுப் பெறும் வரை அவனுடைய சத்தியம் மாறது இருந்த தென்பதைக் குறித்து நின்றது. 'தன் மெய்யை நிற்பதாக்கி' என்றது அச்சத்தியத்தை அவன் என்றும் மாறுதவனுகச் செய்ததை விளக்கிக் காட்டியது. உண்மையைத் துறப் பதா, உயிரைத் துறப்பதா என்னும் மிக்க நெருக்கடியான நிலையில்,

''ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்''

''பொய்யாமை யன்ன புகழில்லை யெய்யாமை
யெல்லா வறமுந் தரும்''

என்பனவற்றை உணர்ந்து, உண்மையைக் காக்க உயிரை விட்ட சத்திய சீலன் தசரதன் என்பதை விளக்கம் செய்ய, 'மெய்யை நிற்ப தாக்கி இறந்தான்' என்று கழி பெருஞ்சுவை தோன்றக் கம்பர் உரைத்தமை போற்றுதற் குரியதாகும். இனி, ஐந்தாங் கவியை ஆராய் வோம் :

'சுடுமயா னத்திடைத்தன் துணையேகத்
தோன்றல் துயர்க்கடலி னேகக்
கடுமையார் கானகத்துக் கருணையார்
கலியேகக் கழற்கால் மாயன்
நெடுமையால் அன்றளந்த வுலகெல்லாம்
தன்மனத்தே நினைந்து செய்யும்
கொடுமையால் அளந்தாளே யாரிவரென்
றுரையென்னக் குரிசில் கூறும்'

தன் உயிர்த் துணையாகிய கணவன் சுடு காட்டை யடையவும், தன் மகன் பரதன் துன்பக் கடலில் குளிக்கவும், கருணைக் கடலாகிய இராமன் கடுமையான காட்டிற்குச் செல்லவும், முன்பு திருமால் தனது நெடுமையால் அளந்த உலகங்கள் அனைத்தையும் தான் செய்த கொடுமையால் அளந்த கைகேயியைப் பார்த்து, 'அரசே, இவர் யார் என்று கூறு' எனக் குகன் வேண்டப் பரதன் கூறுவான் என்பது இதன் பொருளாகும்.

கைகேயியின் கொடுமை, முன்பாக நன்கு சூழ்ந்து துணியப்பட்டு, அறிந்து செய்யப்பட்ட தாகும் என்பதை விளக்க, 'தன் மனத்தே நினைந்து செய்யும் கொடுமை' என்று கூறினர்.

திருமால் வாமனவதார மெடுத்து ஈரடி யால் மூன்றுலகங்களையும் அளந்தபோது, அவனடி பரவாத இடம் எங்குமில்லாதது போலக் கைகேயியின் கொடுமை பரவாத இடமும் எங்கும் இல்லை என்னும் கருத்துப் புலனுக, 'மாயன் நெடுமையால் அன்று அளந்த உலகெல்லாம் கொடுமையால் அளந்தாள்' என்று கூறிய கவிச்சக்கரவர்த்தியாகிய கம்ப ரது கவி சாதுரியம் கண்டு களிகூரத் தக்கது.

திருமாலும் கைகேயியும், வரம் கேட்ட காலத்தில் மென்மையாகக் காணப்பட்டனர். அவர்கள் கேட்டு வாங்கிய வரங்களும் மென் மையாகத் தோன்றின. கொடுக்கப்பட்ட வரங்களை நிறைவேற்றும்படி கொடுத்தவரை அவர்கள் வற்புறுத்திய காலத்தில் வன்மையைக் காட்டினர். வரங்களும் வன்மை யுற்றன. திருமாலின் வன்மை, நெடுமையாகவும், கைகே யியின் வன்மை, கொடுமையாகவும் அமைந்தன. இவ்விரு திறத்தார் நெடுமையும் கொடுமையும் வரம் கொடுத்தவரை இம்மண்ணுலக வாழ்க்கை யைத் துறக்கச் செய்தன. இவ்வுபமான உப மேயங்களில் ஒற்றுமை நயம் கவித்துவத்தில் இலயிக்கும் அறிஞர்களுக்கு ரசமாய்த் தோன் றும் என்பது ஒருதலை.

இக்கவிக்கு ஆராய்ச்சியுரை யெழுதிய ராவ் சாஹிப் வெ. ப. சுப்பிரமணிய முதலியார், தமது கம்பராமாயண சாரத்தில், கீழ்வருமாறு கூறியுள்ளது. அறிஞர்கள் எல்லோரும் போற் றுதற்குரியதாம் :

''கைகேயி, நிலையில்லாத பூதவுடம்பழிந்து, அது காரணமாக நிலையான புகழுடம்பைத் தசரதன் அடையச்செய்தாள் எனவும், தன்மகன் தன்னுல் உற்ற துன்பத்தினுல் அவனுடையஉத் தமகுணங்கள் வெளிப்பட்டு விளங்கச் செய்தா ளெனவும், இராமனை வனத்துக்கனுப்பியதனுல், அவன் பிரதாபம் பெருகச் செய்தாள் எனவும், மாவலியின் ஆட்சியிலிருந்து மண்ணையும் விண் ணையும் ஈரடியால் கொண்டு, மூன்றுமடிக்கிட மாக அம்மாவலியை ஆக்கிக் கொண்ட திரு மாலின் நெடுமை, தோற்றத்தில் கொடுமை யாயும், உண்மையில், அவன் திருவடியை அடைந்த எல்லா முத்தர்களையும்போல அம் மாவலி தனக்குரியன யாவற்றையும் தியாகம் செய்தாலன்றி அடையொணாத அத் திருவடிக் கீழ் அவனை அவ்வாறு தியாகம் செய்யச் செய்து இருத்தின அருளாயு மிருப்பதுபோல் திருமாலின் நெடுமையுடன் உவமிக்கப் பெற்ற கைகேயியின் கொடுமையும் தோற்றத்தில் கொடுமையாயும், உண்மையில் அருளாயும் இருப்பதாம் எனவும் கொள்ளலாம்''.

இனி, ஆறுவது செய்யுளின் திறத்தை அறிவாம் :

''படரெலாம் படைத்தாளைப் பழிவளர்க்கும்
செவிலியைத்தன் பாழ்த்த பாவிக்
குடரிலே நெடுங்காலங் கிடந்தேற்கும்
உயிர்ப்பாரம் குறைந்து தேய
உடரெலாம் உயிரிலா எனத்தோன்றும்
உலகத்தே ஒருத்தி யன்றே
இடரிலா முகத்தாளை அறிந்திலையேல்
இந்நின்றுள் என்னை யீன்றுள்''

இராமனைக் காட்டுக்கு அனுப்பித் தசர தனை இறக்கச் செய்தமையால், உலகத்தார் எல்லாருக்கும் உண்டான துன்பங்கள் அனைத் துக்கும் காரணமாய் உள்ளாள் என்பான், 'பட ரெலாம் படைத்தாள்' என்றுன்.

'இராமனைக் காட்டுக்கு ஓட்டிய மாபாவி; கணவனைக் கொன்ற கொடும்பாவி' என்று உல கத்தார் கூறும் வசைச் சொற்களுக்குப் பாத்திர மாய் நிற்றலால் தனது கொடுமையால் உண் டான நெடிய பழியைத் தனது நடத்தையால் தணியச் செய்யாமல், வளர்ப்பவளாய் இருக் கின்றுள் என்பான், 'பழிவளர்க்கும் செவிலி' என்றுன். கைகேயி, பழியை வளர்த்த தாய் என்றமையால், துன்பத்திற்குப் பெற்ற தாயா னமை உய்த்துணரற்பாலதாம்.

உலகத்தாருக்குத் துன்பம், கைகேயியி னுடைய வாயில் பிறந்தது. கைகேயிக்குப் பழி உலகத்தாருடைய வாயில் பிறந்தது. கைகேயி யின் பின்னடக்கை, அப்பழியை வளர்ப்பதா யிற்று. ஆகையால் கைகேயியை உலகத்தாரு டைய துன்பத்திற்குப் பெற்ற தாயாகவும், பழிச்சொல்லுக்கு வளர்ப்புத் தாயாகவும் கூறியது மிக்க பொருத்த முடையதாயிருத்தல் அறியத்தக்கது.

இக்கொடியவளான கைகேயியின் வயிற் றில் நெடுங்காலம் தங்கிக் கிடந்து பழகிய யானே இவளுடைய கொடுமையைச் சகிக்க மாட்டாமல், உடல் மெலிந்து, தேயப் பெற் றேன் என்றுல், ஏனையோர் எவ்வாறு பொறுப் பர் என்பான், 'பாழ்த்த பாவிக் குடலிலே நெடுங்காலம் கிடந்தேற்கும் உயிர்ப்பாரம் குறைந்து தேய' என்றுன்.

எல்லோருக்கும் உயிர் போன்ற இராமன் பிரிந்து போனதால், எல்லோரும் உயிரிழந்து இறந்தார் போன்ரூர் என்பான், 'உடரெலாம் உயிரிலா வெனத் தோன்றும்' என்ரூன். கைகேயி நீங்கலாக உலகத்து மக்கள் ஏல்லோரும் இராமன் பிரிவால் துன்புற்றனர் என்பான், 'உலகத்தே ஒருத்தியன்றே இடரிலா முகத்தாள்' என்ரூன்.

பரதன் கைகேயியைக் குகனுக்கு அறிவித்த முறை பெரிதும் பாராட்டற்குரியதாய் விளங்குகின்றது. நாம் ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொண்ட ஆறு கவிகளும், கவித்துவப் பண்பு நனி சிறக்கப் பெற்றுள்ளன. இக் கவிகள் நுணுகிப் பயில் தொறும் பயில்தொறும் இன்பம் பயக்கும் பான்மையவாகும்.

கம்பர், ஆரணிய காண்டத்தின் சூர்ப்பநகைப் படலத்தின் முதலில்,

புவியினுக் கணியாய் ஆன்ற பொருள்தந்து புலத்திற் ரூகி
அவியகத் துறைகள் தாங்கி ஐந்திணை நெறிய ளாவிச்
சவியுறத் தெளிந்து தண்ணென் ரெழுக்கமுந்தழுவிச் சான்ரூர்
கவியெனக் கிடந்த கோதா வரியினை வீரர் கண்டார்

என்ற கவியின் கண்அறிவித்த கவி இலக்கணத்திற்கு அவருடைய கவிகளே சிறந்த இலக்கிய மாதல் கண்டு களிக்கத் தக்கதாகும்.



நூல்கள் அறிமுகம்

திருமுறைப் பெருமை:

இந்நூல் இற்றைக்கு ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு ஈழநாட்டிலிருந்து தமிழகத்திற்கு வந்து வாழ்ந்திருந்து, சைவம் பரப்பிய சிவத்திரு சுவாமிநாத பண்டிதர் அவர்கள், தாம் பதிப்பித்து வெளியிட்ட தேவார அடங்கல் முறைப் பதிப்பில் முகவுரையாக எழுதியிருந்த குறிப்புகளாகும். அந்நூலும் பதிப்பும் இப்போது கிடைத்தல் அரிதாதலின், பயன்தரதக்க இக்கட்டுரை நூலைத் திருவாலவாய்ச் சைவசித்தாந்த சபையின் சார்பில் நடைபெற்றுவரும் தேவார பாடசாலையின் நிறுவனராகிய ஓக்கூர் திரு. நா. சா. சாத்தப்ப செட்டியார் அவர்களால், மீளவும் தொகுத்து வெளியிடப்பட்டுள்ளது. சைவ அன்பர்களுக்கு மிகவும் பயன்படத் தக்க சிறந்த நல்லநூல். அடக்க விலை ரூ. 1-25. தபால்செலவு தனி.

கிடைக்குமிடம்:— **திரு. நா. சா. சாத்தப்பசெட்டியார்,**
160, பேலஸ் ரோடு.
மதுரை-625 001.

திருக்குறளின் திட்பநுட்பம்



ந.ரா.முருகவேள், M.A., M.O.L.

முன்னுரை :

திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டு கட்கு முன்னர் வாழ்ந்திருந்தவர். ஆயினும் அவர்தம் திருக்குறள் இன்றும் அழியாச் சிறப் பினதாக அமைந்து விளங்குகின்றது. காலத் தாற் பெரிதும் பழமையுடையதெனினும், கருத் துக்களால் மிகவும் புதுமை பெற்றுத் திருக் குறள் பொலிகின்றது. இவ்வாற்றுல், 'முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம் பொருளாய்ப் பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றி யனே' என விளங்கும் இறைவனைப் போன்று, இணையற்றுத் திகழ்கின்றது.

ஏறத்தாழ நானூறு ஐந்நூறு ஆண்டு கட்கு முன்னர்தான், ஷேக்ஸ்பியர், சாசர் போன்ற ஆங்கில நாட்டுப் புலவர்கள் விளங்கி யிருந்தனர். ஒரு சில நூற்றுண்டுகளே முற் பட்ட இப்புலவர்கள் எழுதிய அண்மைக்கால நூல்களின் மொழி நடையே, பலவகைகளில் எவ்வளவோ மாறுபட்டும், வழக்கிழந்தும், சிதைந்தும் இருக்கக் காண்கின்றோம்.

ஆனல், நம் அருமைத் திருக்குறளோ, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இயற்றப்பட்டதாயினும், இன்று இயற்றப் பெற்றது போலவே, யாவருக்கும் தெளிவுறப் புரியும் வண்ணம், மாறுதல் சிறிதும் அடையா மல், எளிய இனிய நடையில் ஓரசை ஈரசைச் சொற்களாலேயே பெரிதும் இயன்று, பளிங் கென விளங்க வல்லதாகச் சுடர்விட்டு ஒளிர் கின்றது. உலகில் வேறு எந்த நாட்டிலும், வேறு எம்மொழியிலும் இங்ஙனம் இரண்டா யிரம் ஆண்டுகளாகியும், எத்தகைய சிறிய மொழி நடை மாறுதலையும் எய்தாமல், மக்க ளிடையே பெருகப் பரவி வழங்கிவரும் நூல் ஒன்றினைக் காண்டல் அரிது. இஃதொன்று தானே, திருவள்ளுவரின் பெருமையினையும், திருக்குறளின் சிறப்பினையும் உணர்த்தப் போதிய தெளிவான சான்று ஆகும்.

திட்பநுட்பம் :

ஓவியப் புலவன் தூரிகை கொண்டு பல் வேறு காட்சிகளைத் தீட்டிக் காட்டுகின்றன் ; அதுபோலவே காவியப் புலவன் தன் கற்பனைத் திறனல் பலவேறு உணர்ச்சி நிலைகளைச் செவ்வி தின் வெளிப்படுத்தி விளக்குகின்றன். ஓவியப் புலவனுக்குப் பல திற வண்ணங்களும் கோடு களும் பயன்படுமாறு போன்று, காவியப்புலவ னுக்குச் சொற்களும் இலக்கண முறைகளும் உதவி புரிகின்றன. உலகப் பெருங் கவிஞர் களின் தலைவர் ஆகிய திருவள்ளுவர், தம்மு டைய திருக்குறளின் ஒவ்வொரு சொல்லும் எழுத்தும் அசையும்கூட, மிகவும் பொருள் பொதிந்து விளங்கும் வண்ணம், அழகுற ஆய்ந்து அமைத்திருக்கின்றார்.

திருக்குறளில் ஒரு சிறு சொல் கூட, வறி தாகப் பொருளின்றி அமைக்கப்படவில்லை. ஒவ்வொரு சிறு அசையும்கூடப் பொருள் சிறந்து பொலிந்து நிற்கின்றது. திருவள்ளுவர் தம் கருத்துக்களையும் அகவுணர்ச்சிகளையும்அறிவுரை களையும், எத்துணையோ பலப்பல நுட்ப முறை களைக் கடைப்பிடித்துத் திட்பமுற உணர்த்து கின்றார். நவில்தொறும் நயம் பயக்கும் நலம் மிக்கதாகத் திருக்குறள் திகழ்கின்றது. தொட் டனைத்தூறும் மணற்கேணி போல; ஆராய ஆராய அதன் கருத்துக்கள் ஆழ்ந்து விரிவு அடைந்து கொண்டு செல்கின்றன. 'அறிதோறு, அறியாமை கண்டற்றுல்' என்றதற்கு ஏற்ப, நாம் திருக்குறளை ஆராய்ந்து அறியுந்தோறும் நம்முடைய அறியாமையே புலப்படுகின்றது.

திருக்குறளின் கருத்து வளம் சிந்தனைக்குப் பெருவிருந்தாகும். திருவள்ளுவர் தம் நுண் மாண் நுழைபுலனல், ஒவ்வொரு சிறுசொல்லும் அசையும்கூடச் சிறந்த பல நுட்பக் குறிப்புகளை உட்கொண்டு ஒளிரும் வண்ணம், தம்முடைய நூலை இயற்றியருளியிருக்கின்றார். அதனை விளக்கும் ஒரு சில உதாரணங்களை மட்டும் ஈண்டுக் காண்போம்.

கற்றதனல் ஆய பயன் :

மெய்யுணர்வினையுடைய இறைவனது நல்ல திருவடிகளை வணங்கமாட்டார்கள் என்றல், எல்லா நூல்களையும் கற்றவர்க்கும், அக்கல்வி அறிவான் ஆகிய பயன் யாதும் இல்லை இக்கருத்து அமைந்த

> ''கற்றதனல் ஆய பயன்என்கொல் வாலறிவன்
> நற்றாள் தொழாஅர் எனின்''

எனவரும் திருக்குறளை அனைவரும் அறிவர். திருக்குறளில் முதற் குறளால், உலகுக்கு முதல் வனுகிய கடவுள் ஒருவன் உண்டு என வற் புறுத்திய திருவள்ளுவர், இவ்விரண்டாம் குறளால் கடவுளைத் தொழுவதன் இன்றியமை யாமையினை வற்புறுத்துகின்றார்.

(1) கல்வியின் பயன் கடவுளைத் தொழு தல் என்பதே, தாம் கூற விழையும் கருத்தா

யினும், திருவள்ளுவர் அதனை அங்ஙனம் நேரே கூறி முடித்து விடாமல், 'கற்றதனால் ஆய பயன் என்கொல்?'' என வினவி, நம்மைச் சிந்திக்க வைக்கின்றார்.

(2) கல்வியின் பயன் என்னுமல், ''கற்றதனால் ஆயபயன்'' என நீட்டி விரித்துப் பெருக்கி முழக்கிக் கூறுவதனால், 'கலை கலைக்காகவே' என்பாரையும், பொருளீட்டால் தொழிலியற்றல் போன்ற செயல்களே, கல்வியின் பயன் என்பாரையும் மறுத்து, இவற்றுக்கெல்லாம் முடிந்த முடிவான மிக மேலான பயன் ஒன்று உண்டு என்று காட்டினர்.

(3) ''அறிவை அறிவது பொருள் என அருளிய பெருமானே'' என்றபடி, அறிவின் பயன் அறிவு உருவினன் ஆகிய இறைவனை அறிதலே என்பார், இறைவனை 'வாலறிவன்' என்றும், அவனது திருவடிகளைப் பிறவிப் பிணிக்கு மருந்தாதலின், 'நற்றாள்' என்றும், பயன்வகைகளைப் பண்புற விளக்கியருளினர்.

(4) இறைவனைத் தொழுதல் இன்றியமையாததாயின், அங்ஙனம் தொழுதல் எப்பொழுதோ ஒரு முறை ஓராண்டிற்கேனும் ஒரு திங்களுக்கேனும் அமையும்போலும் என நம்மனோர் எண்ணுமைப் பொருட்டு இறைவனை நாம் இடையறாது எப்போதும் நீள நினைந்து தொழுதல் வேண்டும் என்னும் குறிப்பினைத் 'தொழாஅர்' என்னும் அளபெடையின் அமைப்பினாற் புலப்படுத்தினர். இங்கே அளபெடை இசை நிறைப்பதற்கு மட்டுமேயன்றி, இடைவிடாமல் தொழுதல் ஆகிய குறிப்புப் பொருளையும் உணர்த்தி வந்தது.

மலர்மிசை ஏகினன் :

அன்பர்களின் உள்ளமாகிய தாமரையிற் சென்று தங்கியிருப்பவனது, மாட்சிமை மிக்க திருவடிகளைச் சேர்ந்து இடையறாது தொழுது தியானிப்பவர்கள், எல்லா உலகிற்கும் மேலான வீட்டுலகின்கண்ணே நிலைபெற்று நெடுங்காலம் வாழ்ந்து இன்புறுவார்கள்.

''மலர்மிசை ஏகினன் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார்''

என்னும் திருக்குறளில், இறைவனை 'மலர்மிசை ஏகினன்' என்று திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார். இதன் நுண்பொருட்டிறம் எண்ணியுணர்ந்து மகிழ்தற்கு உரியது.

(1) அன்பினால் எழில்நலம் பெற்று விரிதலும், இறைவன் எழுந்தருளிப் போந்து வீற்றிருத்தலும் ஆகிய சிறப்புடைமை கருதி அன்பர்களின் உள்ளங்களை 'மலர்' என்று புகழ்ந்தார். இதனாற் கருங்கல் போன்று திண்ணியதாகிய நம்மனோர்மனம் நெகிழ்ந்துருகி மென்பதப்பட்டு மலர்போல் தூய்மையும் சிறப்பும் அடைந்த வழியே, இறைவன் அதன்கண் எழுந்தருளி விளங்கியருள்வான் என்றும், ஆசிரியர் குறிப்பிட்டருளினர் ஆயிற்று.

(2) தன்னை அன்பால் நினைவாரது உள்ளத் தாமரையின்கண், அவர் நினைந்த வடிவோடு சென்று அருள்புரியும் இயல்பினன் இறைவன், என்பதனைக் குறிப்பிட ஆசிரியர் விரும்புகின்றார். அக்குறிப்பை 'ஏகினன்' என்னும் சொல்லால் அழகுற உணர்த்துகின்றார்.

(3) இறப்பு நிகழ்வு எதிர்வு என்னும் முக்காலத்திலும் ஒப்ப நிகழும் எந்தச் செயலையும் நிகழ்காலச் சொல்லாலேயே கூறுதல் வேண்டும். ''முக்காலத்திலும் ஒத்தியல் பொருளைச் செப்புவர்நிகழும் காலத்தானே'' என்பது இலக்கணம். ஆயினும் முக்காலத்திலும் அருள் புரியும் இறைவனை ''ஏகினன்'' என்ற இறந்த காலச் சொல்லாலேயே திருவள்ளுவர் குறிப்பிட்டருளியுள்ளார். 'கால வழு' என்னும் இலக்கணக் குற்றம் ஆகக் கருதத்தக்கது இது.

(4) எனினும், ஒரு சிறந்த பொருத்தமான காரணம் ஏதேனும் பற்றி, இங்ஙனம் காலத்தை மாற்றியமைத்துக் கூறுவதற்குக் கவிஞர்களுக்கு உரிமையுண்டு. அப்போது அது 'கால வழுவமைதி' என ஏற்றுக் கொள்ளப்படும்.

(5) இறைவன் அன்பர்களின் உள்ளத்திற்கு எழுந்தருளிச் சென்று தங்கி அருள்புரிவது அவர்கள் தன்னை நினைந்து வழிபட்டு நெடுங்காலம் கழிந்த பின்னர் அன்றி, அன்பர்கள் தன்னை நினைந்த அப்பொழுதே யாகும் என வற்புறுத்த விழைகின்றார் ஆசிரியர். தன்னை நினைந்த மாத்திரத்திலேயே, இறைவன் மிக விரைந்து போந்து அன்பர்க்கு அருள்புரிகின்றான் என்பதனை வலியுறுத்துதற் பொருட்டே,

''வாராக் காலத்தும் நிகழும் காலத்தும்
ஓராங்கு வரூஉம் வினைச்சொற் கிளவி
இறந்த காலத்துக் குறிப்பொடு கிளத்தல்
விரைந்த பொருள என்மனார் புலவர்''

என்னும் தொல்காப்பிய நூற்பாவினைத் தழுவி 'ஏகினன்' எனத் திருவள்ளுவர் இறந்த காலத்தாற் குறிப்பிட்டருளினர்.

(6) இனி வேறொன்றும் இங்குக் கருதற்பாலது உள்ளது. அன்பர்களின் உள்ளத்தில் இறைவன் எழுந்தருள்வது, அவர்கள் தன்னை நினைத்த பிறகேயன்று. அன்பர்கள் தன்னை நினைப்பதற்கு முன்பே, இறைவன் அன்பர்களின் உள்ளத்தில் எழுந்தருளி விளங்குகின்றான்.

''நினைப்பித்தா நித்தா நிமலா எனநீ
நினைப்பித்தால் ஏழை நினைப்பேன்—நினைப்பின்
மறப்பித்தால் யானும் மறப்பேன்; எவையும்
பிறப்பித்தாய் என்னால் என்?பேசு

என இராமலிங்கர் பாடுமாறு போல, அன்பர்கள் தன்னை நினைந்தவழி அருள் செய்வதேயன்றி, அவர்கள் அன்பினால் தன்னை நினைக்கும்படி செய்து நினைப்பித்து நிற்பவனும் இறைவனேயாவன். இப்பொருட் சிறப்பும் 'ஏகினன்' என்னும் சொற்குறிப்பினாற் புலப்படுத்தப் பெறுகின்றது.

எனைத்துணையர் ஆயினும் என்னும் ? :

எவ்வளவுதான் பெருமையும் வலிமையும் செல்வமும் உடையவர்களாக இருப்பினும், ஒரு சிறிதாவது விளைவுகளையும் பழிபாவங்களையும் எண்ணிப்பாராமல், பிறன் ஒருவனுக்குரிய மனைவியை விரும்புவார் என்றால், அவர் எவராய் இருந்தால்தான் நமக்கு என்ன? அத்தகையோர் மிக மிக இழிந்த புல்லியரே ஆவர். இக்கருத்து அமைந்த,

''எனைத்துணையர் ஆயினும் என்னும்? தினைத்
துணையும்
தேரும் பிறனில் புகல்''

என்னும் திருக்குறளால், பிறன்மனை விழையும் ஒருவன் எவ்வளவுதான் உயர்வற உயர்ந்த பெருமையும் வலிமையும் பிறவும் உடையவனாயினும், அவன் மிக மிக இகழ்ந்திழிந்து ஒதுக்கப்படத் தக்கவனே ஆவன் என்கின்றார் திருவள்ளுவர்.

(1) இக்கருத்தினைப் பெரிதும் வலியுறுத்திக் கூற விழையும் திருவள்ளுவர், 'எனைத்துணையர்' என முதற்கண் மிகவும் உயர்த்தி, அரியாசனத்தில் அமர்வித்தல் போலப் பன்மை யுணர்த்தும் பலர்பாற் சொல்லாற் சுட்டினார்.

(2) பிறனில் விழைதல் ஆகிய பெரும் பிழையினைச் செய்வாராயின், பின்னர் அத்தகையோரையும் பிடர் பிடித்துக் கீழே தள்ளி ஒறுப்பது போலத் 'தேரும்' என ஒருமையாற் சுட்டி இகழ்ந்துரைத்தார்.

(3) ஒரு சிறிதாயினும் எண்ணிப் பார்ப்பின், பிறனில் விழைதல் ஆகிய பிழையைச் செய்ய முற்படார் எனற்கு 'தினைத்துணையும் தேரும்' என்றார்.

(4) எவ்வளவுதான் உயர்ந்தவரே எனினும் இக்குற்றம் புரிவோர், பெரிதும் இழிந்தவரே எனத் தெருட்டுதற்கு ''எனைத்துணையர் ஆயினும் என்னும்?'' என்றார்.

(5) 'எனைத்துணையர்' எனப் பன்மையில் தொடங்கி, 'தேரும்' என ஒருமையில் சுட்டி, 'பன்மை ஒருமை மயக்கம்' என்னும் இலக்கணக் குற்றமும், ஓர் இலக்கிய நயம் பயக்க அமையும் படி அழகுபெறக் கையாண்டுள்ள திருவள்ளுவரின் திறம் பெரிதும் போற்றற்பாலது.

ஏவவும் செய்கலான் :

பிறர் அறிவுரை கூறினாலும், அதனைக் கேட்டுக் கொண்டு எதனையும் செவ்விதிற் செய்யமாட்டான்; தானும் எதனையும் சிந்தித்துத் தெளியமாட்டான் ; அத்தகைய மனிதன் உடலை விட்டு நீங்கி இறக்கும் அளவும், உலகத்திற்குப் பொறுத்தற்கு அரியதொரு கொடிய நோய் ஆவான்.

''ஏவவும் செய்கலான் தான்தேரும்; அவ்வுயிர்
போஒம் அளவும்ஓர் நோய்''

என்பது, 'புல்லறிவாண்மை' என்னும் தலைப்பில் வரும் ஒரு திருக்குறள். புல்லறிவாண்மை யாவது தான் சிற்றறிவினனாக இருந்தே தன்னைப் பேரறிவினனாக மதித்து உயர்ந்தோர் கூறும் உறுதிச் சொல்லை ஏற்றுக் கொள்ளாமை.

(1) பிறர் சொல்லியும் கேளாமல், தாமும் சிந்தித்து உணராமல், தம் மனம் சென்றவாறு நடக்கும் புல்லறிவாளர்களின் புன்மையையும், அவர்கள்பால் தமக்குள்ள வெறுப்புமிக்க அளவிறந்த சீற்றத்தினையும், ஆசிரியர் திருவள்ளுவர் 'ஏவவும் செய்கலான் தான்தேரும்' என முதற்கண் உயர்திணை ஆண்பால் குறிக்கும் னகர ஒற்றீற்றுச் சொல்லாற் குறிப்பிட்டு, அதற்கேற்பப் பின்னரும் 'அம்மனிதன்' என்றே 'அவன்' என்றே உயர்திணை ஆண்பாற் சொல்லாற் குறிப்பிடாமல், 'அவ்வுயிர்' என அஃறிணைப் படர்க்கை ஒருமைச் சொல்லாற் சுட்டுதலாற் புலப்படுத்தி அருளினார்.

(2) தானே சிந்தித்துத் தெளிதலிலும் பெரியோர் சொல்லக் கேட்டுச் செய்தல் எளியதாதலின், 'ஏவவும் செய்கலான்' என்பதனை முன்னும், 'தான் தேரும்' என்பதனை அதற்குப் பின்னும், ஆசிரியர் முறையே வைத்தார்.

(3) உண்மைப் பெரியோர் எது கூறினும், அதுவே கட்டளையாகக் கொண்டு செயல்புரிதல் நல்லோர் கடமையாதலின், அதனை யுணர்த்துதற் பொருட்டுக் 'கூறவும் தேரும்' என்னாது 'ஏவவும் செய்கலான்' என்றார்.

(4) பெரியோர் பக்கலில் தானே முன் சென்று, நீவிர் பணிப்பது யாது? எனப் பணிந்து நின்று, அவர் கூறுவனவற்றைக் கேட்டு நடத்தல் கடமையாகவும், அஃதொழிந்து அவர் தாமே முற்போந்து அருளாற் கூறித் திருத்த முனையினும், அவர் சொற்கேட்டு நடவான் என்பது, 'ஏவவும் செய்கலான்' என்புழிவரும் உம்மையால் உணர்த்தப் பெற்றது.

(5) இத்தன்மைதான் அவனது இயலாமை பற்றிய காரணத்தால் அன்று; அவனுக்கு உரிய புல்லறிவாண்மையாகிய இயல்பினாலேயேயாம் எனத் தெருட்டுதற்குச் 'செய்கிலான்' என்னாமல், 'செய்கலான்' என்றார். 'கில்' ஆற்றல் உணர்த்துவதோர் இடைச் சொல்லாதல் காண்க.

(6) தானும் தெளியாமல், பிறர் சொல்லியும் கேளாமல் இருப்பான் ஒருவன், மனித வடிவில் இருப்பினும் மனிதன் எனற்குத் தகுதியற்றவன் ஆதலின், 'அம்மனிதன்' என்னாது 'அவ்வுயிர்' என அஃறிணையாகக் குறிப்பிட்டு, அவன்பால் தமக்குள்ள அருவருப்பைப் புலப்படுத்தினார் ஆசிரியர்.

(7) அத்தகைய ஒருவனால், குடும்பம், சமுதாயம், நாடு, உலகம் என்பனவற்றிற்கு எத்தகைய ஒரு சிறு நலனும் ஏற்படாமையே

யன்றித் தீங்குகள் பலவும் உண்டாதலின் அவனை 'நோய்' என உருவகம் செய்து இழித்துரைத் தார். பிற நோய்களின் வேறுபட்டதும் கொடி யதும் ஆதலின் 'ஓர் நோய்' என்றார்.

(8) தான் பிறந்த குடும்பத்திற்கோ, சமு தாயம், நாடு, உலகம் என்பவற்றிற்கோ, கொடிய நோய் போலத் துன்பமும் தீங்குமே விளைவித்து நிற்கும் புல்லறிவாளர்கள், இருத் தலிலும் இறத்தலே நலமாதலின், 'வாழும் அளவும்' அல்லது 'இருக்கும் அளவும்' என்னாது, தமது அருவருப்புத் தோன்ற 'ஒழிந்துபோகும் வரையில்' என்னும் கருத்தில் 'போம் அளவும்' என்றார்.

(9) நல்லவர்கள் எல்லோரும் மிக விரை வில் சிற்றிளம் பருவத்திலேயே மறைந்து விடுத லும், இத்தகைய பயனில் புல்லறிவாளர்கள் மிக நீண்ட நெடுங்காலம் இறந்தொழியாமல் மூத்து முதிர்ந்து உழன்று கொண்டிருத்தலும் ஆகிய கொடுமையினை, இவ்வுலகத்துக் காண்கின்றோம். ஆதலின் அக்கொடுமையின் நீடிப்பும், அதனால் தமது நெடிய ஆற்றுமையும் விளங்கப் 'போம் அளவும்' எனற்பாலதனையே 'போஒம் அளவும்' என நீட்டிய அளபெடைக் குறிப்பாற் புலப் படுத்தினர்.

முடிவுரை :

இதுகாறும் கூறியவாற்றால், திருக்குற ளின் சொற்பொருட் சுவை நலங்களின் சிறப்பும் திட்ப நுட்பமும் இனையவென்று யாவ ராலும் ஓரளவேனும் உணரப் பெறும். இத் தகைய சிறப்புடைய திருக்குறளைப் பெற்றிருப் பது தமிழ் மக்களாகிய நம்முடைய பெறலரும் தவப்பேறேயாகும். ஆதலின் நாம் அனைவரும் அப்புனிதப் பெருநூலை நனிமிக ஓதியுணர்ந்து, நலம் பலவும் எய்த முயலுவோமாக.

—ஆசிரியர்



திருக்கோயில்களின்

செயல்அலுவலர்களுக்கு வேண்டுகோள்

நமது அறநிலையத் துறையின் சார்பில், கடந்த 18 ஆண்டுகளுக்கு மேலாக, 1958 அக்டோபர் முதல், மிகவும் சிறந்த முறையில் வெளியிடப்பெற்று வரும் ''திருக்கோயில்'' திங்கள் இதழினை, மேலும் மேலும் தெய்வீக மணம் கமழவும், புனிதநிலை பொலிந்து விளங்கவும் செய்வதற்காக, அதன் முகப்பு அட்டைகளிலும், உட்பக்கங்களிலும், கோயில்களின் அழகிய தோற்றங்கள், சுவாமி அம்பாள் திருவுருவங்கள் ஆகியவற்றின் நிழற்படங்களைச் சிறப்புற வெளியிடத் தீர்மானிக்கப் பெற்றுள்ளது.

ஆதலின் நமது அறநிலையத் துறையின் ஆட்சியிலுள்ள திருக்கோயில்களில் பணியாற்றும் செயல் அலுவலர்கள் *(Executive Officers)*, ஸ்ரீ வைஷ்ணவத் திவ்விய தேசங்கள், மற்றும் பாடல் பெற்ற சைவத் திருத்தலங்கள் ஆகிய கோயில்களின், கோபுரம் முதலிய அழகிய தோற்றங்கள், சிற்ப வேலைப் பாடுள்ள இனங்கள், சுவாமி அம்பாள் உற்சவத் திருவுருவங்கள் ஆகியவற்றின் நிழற்படங்கள், **முன்பே தத்தம் கோயில் அலுவலகங்களில் எடுத்து வைக்கப்பெற்றிருந்தால்,** அவற்றுள் மிகவும் சிறப்பாக உள்ள ஒன்று அல்லது இரண்டு படங்களைத் *(Cabinet or Card size Transparency or Black and White Photos)* தேர்ந்தெடுத்து, நமது ஆணையர் அலுவலகத்திலுள்ள ''திருக்கோயில்'' இதழ்ப் பகுதிக்கு அனுப்பி வைக்குமாறு, கேட்டுக் கொள்ளப் பெறுகின்றனர்.

—ஆசிரியர்.

சிந்தனையும் தத்துவமும்

டாக்டர். திரு. T.M.P. மகாதேவன், அவர்கள், M.A., Phd.

முன்னுரை :

இந்திய வரலாற்றில் மிகப் பழங் காலத் திலேயே பல திற அரசியல் வேறுபாடுகளுக்கு இடையிலும்கூட, ஒரு குறிப்பிடத் தக்க பண் பாட்டு ஒருமையுணர்ச்சி ஏற்பட்டிருந்தது. நெடுங்காலம் வரையில் நாட்டில் அனைத்தையும் இணைக்கும் ஒரு தனிப் பெரும் அரசாட்சி எதுவும் அமையவில்லை. பல சிற்றரசுகள் ஒன்றை யொன்று அடக்கியாளத் தம்முள் இகலிக் கலாம் விளைவித்துக் கொண்டிருந்தன. அதன் விளை வாக நிகழ்ந்த அரசியற் பிணக்குகளே, அயல் நாட்டுப் படையெடுப்பாளர்கள் ஒவ்வொரு முறையும் எளிதில் வெற்றி பெறவும், ஒரு சில காலம் நாட்டை அடக்கியாளவும், துணைசெய்வ தற்கு முதற் பெருங் காரணமாக அமைந்தன. உள்நாட்டுப் பூசல்களிலும் அடிக்கடி நிகழ்ந்த வெளிநாட்டார் படையெடுப்புகளிலும் கூட, இந்தியாவானது இத்துணைக் காலமாக வழி வழியே தனது சமய தத்துவப் பண்பாட்டைப் போற்றிக் காத்து வந்துள்ளதென்றால், அதற்குக் காரணம் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும், எல்லாக் காலங்களிலும் தோன்றியருளிய அறி வுடைப் பெருமக்கள், நாட்டின் முழுமை யுணர்ச்சியை இடைவிடாமல் மக்கள் மனத்தில் புகட்டிக் கொண்டிருந்த உண்மையேயாகும். நாட்டின் ஒருமை நிலையை அறிவுறுத்தி வந்த அப்பெருமக்கள், ஒரொரு காலத்தில் இடை யிடையே தோன்றி நிலவும் குறுகிய எல்லை யுணர்ச்சிகளைக் கடந்து, தம்முடைய சொல் லாலும் செயலாலும் 'இந்தியா என்பது வடக்கே இமயமலைக்கும் தெற்கே கடல்களுக் கும் இடைப்பட்ட வெறும் நிலப்பகுதி யன்று; பிளவும் சிதைவும் விளைக்கும் அழிப்பாற்றல் களை எதிர்த்து நிற்கும் ஓர் ஆன்மிகக் கருத்துப் பொருளும், தெய்வீக வாழ்க்கையுமே இந்தியா வாகும்' என மக்களுக்குப் போதித்தனர்.

கவிஞர்களும்—அறிஞர்களும்—ஞானி களும்—அடியார்களும், இந்திய வரலாறு அறிந்த நெடுங்கால முதல், உலகம் முழுமை யுமே நலம் பெறுதற் பொருட்டு, மக்களை ஆன்மீக ஒருமை உணர்ச்சியைக் கைக்கொள்ளு மாறு வற்புறுத்தி வந்துள்ளனர். மனித குலத்தைப் பண்பாடு சிந்தனைகளின் மூலமாக மீட்பதே, இச் சான்றோர்களால் வரையறுக்க வும் வழங்கவும் பெற்ற தத்துவக் கொள்கை, சமய மரபுகள் என்பவற்றின் நோக்கமாகத் திகழ்ந்தது. ஒரு குறிப்பிட்ட தத்துவக் கருத்து அல்லது சமயப் பழக்கம், நாட்டின் எந்தப் பகுதியில் முதன் முதலில் தோன்றியதென்று சொல்வது, பெரும்பாலும் இயலாத தொன் றாகவே உள்ளது. என்றாலும், இந்தியாவின் பொதுவான வழிவழிக் கலைச் செல்வத்தை அமைத்தலில், ஒவ்வொரு நிலப்பகுதியும் குறிப் பிடத்தக்க வகையில் தனது பங்கைச் செலுத்தி யுள்ளது என்பது மறுக்க முடியாத உண்மை யாகும். இந்தியத் தத்துவம்—சமயம்—என்ப னவற்றின் ஆக்கத்திற்காகத் தான் வழங்கி யிருக்கும் நன்கொடைப் பங்கானது, ஆழ்ந்தும் அகன்று நிறைந்தும் விளங்குந் திறம் குறித்து, தென்னகம் மிகவும் பெருமிதம் கொள்ளலாம்.

வைதிக அவைதிக நெறிகள் :

இந்தியத் தத்துவமானது நமக்குப் பல திற அறிவு விருந்தை நல்குகின்றது. வைதிக நெறிகளுக்கும் அவைதிக நெறிகளுக்கும் இடையே, மிகப் பெரிய வேறு பாட்டறிகுறி ஒன்று வகுக்கப்பட்டுள்ளது. 'வைதிகம்' என்பது வேதத்தைப் பிரமாணமாக உடன்படுதலைக் குறிக்கும். 'அவைதிகம்' என்பது வேதத்தைப் பிரமாணமாக உடன்படாமையாகும். வைதிக சமயங்கள் சில, வேதத்தைப் பிரமாணமாக வெறும் பெயரளவிலேயே உடன்படுகின்றன. அவைதிக சமயங்கள் ஒரு சில வகைகளில் வேதக் கருத்துக்களோடு ஒத்துச் செல்வதும் உண்டு. வைதிக சமயங்களுள்—'வைதிகம்' என்னும் சொல்லின் நேரிய பொருளுக்கு ஏற்ப, வேதத் தை அடிப்படையாகக் கொண்டவை மீமாஞ்ச மும் வேதாந்தமுமே யாகும். மீமாஞ்சமானது வேதத்தின் கிரியைப் பகுதியினின்று தனது தத்துவத்தை அமைக்க முயல்கின்றது. வேதாந் தமோ வேதத்தின் முடிவுப் பகுதிகளாகிய உப நிடதங்களினின்று உணர்வெழுச்சி பெறுகின் றது. மீமாஞ்சத்தில் முதன்மையாக இரண்டு பிரிவுகளும், வேதாந்தத்தில் பல பிரிவுகளும் உள்ளன. வைதிக சமயங்களில் ஒரு சில வேதத்தைப் பிரமாணமாக உடன்பட்டபோதி லும், தமது கொள்கைகளுக்கு அடிப்படையாக, ஆகமங்கள் என்னும் அருளியல் நூல்களையே பெரிதும் சார்ந்து நிற்கின்றன. அவைதிக சமயங்களில் முதன்மையான இரு சமயங்கள் சைனமும் பௌத்தமும் ஆகும். இந்தியத் தத்துவ வகைகளைச் சார்ந்த இச்சமயங்களெல் லாம் தென்னகத்திற் செழித்து வளர்ந்துள்ளன.

இவைகளில் ஒரு சிலவற்றிற்குத் தென்னகம் பிறப்பிடம் அன்றெனினும், இவ்வெல்லா வகை மரபுகளின் விரிவுக்கும் வளர்ச்சிக்கும் தென்னகம் பெருந்துணை புரிந்துள்ளது.

மீமாஞ்சம் :

மீமாஞ்ச தத்துவ வளர்ச்சிக்குத் தென்னாடு பெரும் பணியாற்றி யிருக்கின்றது. 'பூர்வ மீமாஞ்சம்' என முழுப் பெயர் கொண்ட மீமாஞ்சமானது, 'கரும காண்டம்' என வழங்கப்பெறும் வேதத்தின் கிரியைப் பகுதிகளை முறையாக ஆராயும் குறிக்கோளையுடையது. இக்கொள்கையின் அடிப்படைச் சூத்திரங்களை அருளிச் செய்த ஆசிரியராக ஜைமினி என்பவர், 'வேதத்தின் குறிக்கோள் சமயக் கடமைகளை விதிப்பதேயாகும்' என விளக்குகின்றார். விதிகளும் விலக்குகளுமே வேத மூலத்தின் முதன்மையான பகுதிகளாக அமைகின்றன. வேதத்தின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதன் மூலமே, ஒரு மனிதன் நலம்பெற முடியும். சபரர் என்பவர் ஜைமினி சூத்திரங்களுக்கு ஓர் உரை வகுத்தார். அவ்வுரையானது, தென்னிந்தியர்களென்று பொதுவாக நம்பப்படுகின்ற புகழோங்கிய இரு பெருங் கல்வியாளர்களால், இரு வேறு வகைகளில் விரித்துரைத்து விளக்கப் பெறுகின்றது. அவர்களில் ஒருவர் குமாரில பட்டர். அவர் சங்கரரின் காலத்தில் வாழ்ந்தவர்; அவரினும் மூத்தவராகத் திகழ்ந்தவர். அவர் பிறப்பால் ஆந்திரர் எனக் கருதப் படுகின்றார். மற்றொருவர், குமாரில பட்டர்க்கு எதிர்மாறான கொள்கையைத் தோற்றிய பிரபாகரர். வழி வழிச் செய்தியின்படி, அவர் வட திருவிதாங்கூரில் தோன்றியவரும், குமாரில பட்டரின் மாணாக்கரும் ஆவர். ஓரோவழி ஆசிரியரை விட மாணாக்கர்கள் சிறந்துயர்ந்து திகழ்ந்தனர் என்னும் செய்தி, புதுமையான தொன்றன்று. சிறப்பாகத் தென்னாட்டில் இத்தகைய வழக்காறுகள் பலவுண்டு.

மீமாஞ்ச தத்துவம் பற்றிக் குமாரில பட்டரும் பிரபாகரரும் கூறிய விளக்கங்களில் முதன்மையான சில வேறுபாடுகள் இருக்கின்றன. அவைகளில் வேதங்களின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதற்குரிய நோக்கம் குறித்ததும் ஒன்றாகும். குமாரிலபட்டரின் கருத்துப்படி, 'அங்ஙனம் கீழ்ப் படிந்தொழுகுதல், தனது விருப்பங்கள் நிறைவேறுவதற்கு—துன்ப நீக்கமும் இன்ப ஆக்கமும் எய்துவதற்கு ஒரு கருவியாகும் என்னும் ஞானமே' நோக்கமாகும். பிரபாகரரின் கருத்துப்படி, வேதமானது ஆற்றலற்ற தொன்றன்று. அது புறப்பொருளின் துணையை நாடி நிற்பதில்லை. ஆதலின் வேதத்திற்குக் கீழ்ப் படிதற்குக் காரணமான நோக்கம், அவ்வாணைக் கேயுரிய மதிப்பியல் வணக்கமே ஆகும். ஒருவனைச் செயலாற்றத் தூண்டுவது கடமையுணர்ச்சி (கார்யதா ஞானம்) ஆகுமேயன்றி, விருப்பத்தை நிறைவேற்றும் கருவியைப் பற்றிய அறிவு (இஷ்ட சாதன ஞானம்) அன்று'. இவ்விரு திறக் கொள்கையையும் பற்றி, ஏராளமான நூல்கள் தென்னிந்தியாவில் எழுதப்பெற்றுள்ளன. வேதாந்த தேசிகர் போன்ற வேதாந்த ஆசிரியர்களின் வாயிலாக, நாத்திகச் சார்புடைய மீமாஞ்சமானது ஆத்திகச் சார்புடைய மீமாஞ்சமாக மாற்றுருவம் பெற்றுள்ளது. சாயனர் வேதத்திற்கு வகுத்த உரை நன்கு அறியப்பட்ட தொன்று. அவர்தம் உடன் பிறந்தவராகிய மாதவர் மீமாஞ்ச சூத்திரங்களுக்கு விளக்கம் எழுதினர். இவ்விருவரும் விஜய நகர அரசைத் தோற்றுவித்தவர்களால் ஆதரிக்கப் பெற்ற பெருங் கல்வியாளர்கள் ஆவர். தென்னிந்தியக் கோயில்களிலும் வீடுகளிலும் நடத்தப் பெறும் வழிபாடுகளில், வேத மந்திரங்களை ஓதுதலும், வேதச் சடங்குகளை நிகழ்த்துதலும், சிறந்த பகுதியாகத் திகழ்கின்றன. வேத மந்திரங்களைத் திருத்தமாக ஒலிக்கும் முறையைத் தென்னகம் மிகச் சிறந்த முறையில் போற்றிப் பொதிந்து காத்து வந்துள்ளதென்னும் உண்மை, அனைவரும் உடன்படுவ தொன்று.

வேதாந்தம் :

மீமாஞ்ச தத்துவ வளர்ச்சிக்கும், வேத மந்திரங்களை ஓதுதலுக்கும், வேதச் சடங்குகளை நிகழ்த்தும் பயிற்சிக்கும், தென்னகம் செலுத்திய நன்கொடைப் பங்கு, எத்துணைப் பெரிய தொன்முக இருந்து வந்திருக்கின்றதோ, அதனை விடப் பெரிய அளவில் தென்னகத்தின் தனிச் பெரும் சிறப்பு, வேதாந்தத் துறையில் மிகவும் விளங்கித் திகழ்கின்றது. ''வேதாந்தம்'' என்னும் சொல்லைக் குறித்த அளவிலேயே, கேரள நாட்டில் காலடி என்னும் இடத்தில், பேரறிஞர்கள் பலர் கருதுகின்றபடி, கி.பி. 788—820இல் தோன்றி வாழ்ந்தருளிய சங்கரரை, ஒருவன் நினைவு கூர்வான். சங்கரரால் அறிவுறுத்தப் பெற்ற, குறித்ததொரு வடிவமுடைய வேதாந்தமானது 'அத்வைதம்' என வழங்கப்பெறும். உபநிடதங்கள் எத்துணைப் பழமையுடையனவோ அத்துணைப் பழமையை அஃதுடையதாகும். சங்கரர் தமது 'இரண்டில்லாத' ஏகான்ம வாதத்தினை முதன்மையான உபநிடதங்களுக்கும், வாதராயணரின் பிரம்ம சூத்திரத்திற்கும், பகவத் கீதைக்கும் தாம் இயற்றிய உரைகளில் மட்டுமேயன்றி, உபதேச சஹஸ்ரீ, விவேக சூடாமணி போன்ற வேறு பிற நூல்களிலும் விளக்குகின்றார். 'உபநிடதங்களில் முடிந்த பொருளாகக் குறிப்பிடப்பெறும் பிரம்மம் அல்லது ஆத்மா என்ற ஒன்றே உள்ளது. அதுவே முழுமையானது. உலகம் பல வகையாகத் தோன்றினாலும், அது வெறும் மாயை அல்லது பொய்த் தோற்றமே. தனி உயிர் என்று சொல்லப்படுவது பரப்பிரம்மமேயன்றி வேறன்று' என்பதே, சங்கரர் கூறும் கொள்கையின் சாரமாகும். சங்கரர்க்கு முன்பே வேதாந்திகளும், அத்வைதிகளும் கூட இருந்தனர். அவர்களில் ஒருவர், தாம் தென்னாட்டிற் பிறந்தவராதலைக் குறிக்கும் வகையில், 'திரமிடா' அல்லது 'திராவிடாசார்யா' என்னும் பெயரைப் பெற்றிருந்தனர். சங்கரரும், சங்கரர்க்குப் பின்னே தோன்றி, 'விசிட்டாத்வைதம்' என்னும் வேதாந்தக் கொள்கையைத் திருத்தமுற வகுத்த இராமானுஜரும் ஆகிய இருவராலும், அவர் மிக்க பெருமதிப்புடன் குறிப்பிடப் பெறுகின்றார். சங்கரர்க்கு முன்னே விளங்கிய மற்றோர் அத்வைதி, சங்கரரின்

ஆசிரியர்க்கு ஆசிரியர் என்று பழைய வழிவழிச் செய்தி கூறுகின்ற கௌடபாதர் ஆவர். ஆயினும் அத்வைதக் கொள்கையை முதன் முதலில் விரிவும் தெளிவும் மிக்க முறையில் விளக்கியவர் சங்கரரே. வேதாந்தத்தின் அடிப் படை நூல்களாகிய உபநிடதங்கள்—பிரம்ம சூத்திரம் - பகவத்கீதை ஆகிய மூன்றிற்கும் சங்கரர் வகுத்த உரைகள், அவற்றின் கருத்துத் தெளிவும் ஆழமும் குறித்துப் பொருந்திய முறையிற் புகழ்ந்து போற்றப்படுகின்றன. அவர் காலத்திற்கு முன்னரே உரை நூல்கள் பல இயற்றப் பெற்றிருந்தும், அவற்றுள் ஒன்று தானும் நின்று நிலவவில்லை. மேலும், சங்கரர்க்குப் பின்னே போந்த வேதாந்திகள் அனைவரும் அறிந்தோ அறியாமலோ, அவர் அமைத்த மாதிரியினையே பின்பற்றுவாராயினர். சங்கரரின் நேர்முக மாணவர்களுள் ஒருவராகிய சுரேசுவரர் ஒத்த கருத்தை அமைந்த மேற் கோள்களைக் கௌடபாதர் சங்கரர் ஆகிய இருவர் நூல்களிலும் இருந்து எடுத்துக் காட்டித் தம்முடைய ஆசிரியரை இயற் பெயராலன்றித் 'தென்னாட்டில் தோன்றியவர்' என்னும் பொருளில் 'திராவிடா' என வழங்கியிருப்பது குறிப்பிடத் தகும் சிறப்புடைய செய்தியாகும்.

சங்கரர் ஒரு சிறந்த தத்துவ ஆசிரியராகவும் பேரறிஞராகவும் முனிவராகவும் திகழ்ந்தார். அதனோடு மட்டுமேயன்றி இந்து சமுதாயத்தின் ஆற்றல் மிக்க அமைப்பாளராகவும், அஞ்சாமை வாய்ந்த சீர்திருத்தக்காரராகவும் விளங்கினர். அவர் இந்நிலவுலகில் வாழ்ந்த ஆண்டுகள் சிலவே எனினும், அவற்றை அவர் இந்தியாவின் இடையருத் தொண்டிற்கே உரிமையாக்கினர். நாட்டின் ஒரு முனையில் இருந்து மறுமுனை வரையில் அவர் பலமுறை நடந்து சென்று, தூய உயரிய வாழ்க்கைக்குத் திரும்பு மாறு மக்களுக்குப் போதனை செய்தார். இந்து மதத்தின்கண் நுழைந்திருந்த மாசுகளையெல்லாம் அகற்றினர். சமயக் கொள்கைகளைத் தூய்மையுற நிலைநாட்டினர். திருக்கோயில்களோடு இணைத்தெண்ணும் வகையில் ஏற்பட்டிருந்த இழுக்குகளையெல்லாம் போக்கித் துப்புரவாக்கி, அத் திருக்கோயில்கள் எந்த நோக்கங்கள் குறித்து அமைக்கப்பட்டனவோ, அவைகள் நிறைவேறுமாறு செய்தார். நாட்டின் முக்கிய பகுதிகளில் சமுதாயத்தின் ஆன்மீக நலங்களைப் போற்றிப் பாதுகாக்கும் திருமடங்களை நிறுவினர். அவைகளில் ஐந்து திருமடங்கள் மிகவும் முதன்மையானவை. இமயமலைச் சாரலில் உள்ள பதரி ஒன்றைத் தவிர ஏனைய நான்கும் இந்திய தீபகற்பப் பகுதியில் பூரி, துவாரகை, சிருங்கேரி, காஞ்சி என்னும் இடங்களில் அமைந்துள்ளன. காஷ்மீரத்தில் இருந்து கன்னியாகுமரி வரையில், சங்கரர் செய்தருளிய புரட்சியின் நலஞ் சிறந்த விளைவுகளை இந்தியாவிற் பயணஞ் செய்கின்ற எவரும் இன்று கூடக் காணலாம்.

விசிஷ்டாத்வைதம் :

அத்வைதத்தின் வேறுக, நன்கறியப்பட்ட வேதாந்தத்தின் வேறு இரு திறக் கொள்கைகள், விசிஷ்டாத்வைதமும் துவைதமும் ஆகும். அவைகள் முறையே இராமானுஜரோடும் மத்வரோடும் தொடர்புறுத்தப்படுகின்றன. அவர்களும் கூடத் தென்னிந்தியரே யாவர். இராமானுஜர் தோன்றியருளிய ஸ்ரீபெரும்பூதூர் சென்னைக்கு அண்மையிலேயே உள்ளது. சங்கரர்க்குப் பின்னர் இரண்டு நூற்றாண்டுகள் கழித்துத் தோன்றிய இராமானுஜர், பிரம்மம் நிர்க்குணம், 'பிரபஞ்சம் மித்தை' என்னும் அத்வைதக் கொள்கையை ஏற்றுக் கொள்ள மறுத்தார். இராமானுஜர் கொள்கையின்படி, உயிர் உடலோடு தொடர்பு கொண்டிருப்பது போல, பிரம்மமானது உயிர்ப் பொருள்களோடும் உயிரில் பொருள்களோடும் கலந்துள்ளது. உணர்வுடைப் பொருள்களாகிய ஜீவன்களும், உணர்வில் பொருள்களாகிய அசத்துக்களும் பிரம்மத்திற்கு விசேடணமாக விளங்குகின்றன. பிரமம் இவற்றின் விசிட்டப் பொருளாக விளங்குகின்றது. அது பற்றியே இராமானுஜரின் வேதாந்தம் 'விசிட்டாத்வைதம்' என வழங்கப் பெறுகின்றது. பாஞ்சராத்திர ஆகமங்களையும், தென்னாட்டு வைணவ சமயச் சான்றோர்களாகிய ஆழ்வார்கள், தமக்கு முற்பட வாழ்ந்திருந்த நாதமுனிகள் ஆளவந்தார் ஆகியவர்களின் உபதேசங்களையும் பின்பற்றி, இராமானுஜர் பிரம்மத்தினை விஷ்ணு, நாராயணன் என வழங்கினர். பக்தி நெறிக்கு அவர் நுண்ணிய அறிவு அடிப்படையை உதவினர். அவர் தம் உபதேசங்களிலிருந்து வட நாட்டில் பல பக்தி இயக்கங்கள் உணர்வெழுச்சி பெற்றன. அவர் தம் வாழ்க்கையில், மனத்தை மிகவும் உருக்கத் தக்க நிகழ்ச்சிகளில் ஒன்று, ஸ்ரீநாராயண மந்திரத்தைத் தம் ஆசிரியரின் கட்டளைக்கும் கூட மாறுக, மக்களெல்லாருக்கும் வெளிப்படையாக வழங்கிய செய்தியாகும். மிகப் பெரிய அருட்கொடை என்று தாம் கருதியதனை, மக்களெல்லாருக்கும் வழங்கியதன் இன்றியமையா விளைவாகத் தாம் நரகத்திற்குச் செல்ல நேருமெனினும், அவர் அதற்காகத் தயங்காமற் சமைவாகவே இருந்தார்.

துவைதம் :

கி.பி. 12-ஆம் நூற்றாண்டின் இறுதியில் உடுப்பிக்கு அருகில் தோன்றிய மத்வர், இராமானுஜரைவிடச் சங்கரரோடு பெரிதும் மாறுபட்டார். அவர் வேதாந்தத்தை முழுவதும் பன்மை (அத்யந்தா பேதவாதம்) ஆக விளக்கினர். 'துவைதம்' என வழங்கும் மத்வர் கொள்கையின்படி, கடவுள் உலகம் உயிர்கள் என்பன ஒன்றோடொன்று முற்றிலும் வேறுபட்டவையாகும். ஓர் உயிரானது தான் அடைவதற்கு மிகப் பெரிய தொன்றாக எதிர்பார்க்கக் கூடிய நன்மை, கடவுளுக்கு அடிமையாகும் நிலையேயாகும். இராமானுஜரைப் போலவே, மத்வரும் விஷ்ணுவை முழு முதற் கடவுளாகக் கொள்கின்றார். தென்னிந்தியாவில் எங்கோ ஓரிடத்தில் இயற்றப் பெற்றதாக நம்பப்படும் பாகவத புராணத்தால் மிகப் பெரிதும் கவரப் பெற்ற மத்வர், கிருஷ்ண வழிபாட்டு நெறியைப் பரப்பினர். வங்காளத்தில் எழுந்த சைதன்யரின் இயக்கமானது, தனது பிற்பகுதியில் மத்வரின் பன்மைக் கொள்கையையே பின்பற்றத் தேர்ந்து கொண்டது.

துவைதாத்வைதம் :

வைணவ சமயத்தின் பிற தத்துவக் கொள்கைகளுள், தென்னிந்தியரால் தோற்றுவிக்கப் பெற்ற இரண்டை ஈண்டுக் குறிப்பிடலாம். பதினொன்றும் நூற்றாண்டில் தோன்றியவரும், தெலுங்கரும், வடக்கேயுள்ள பிருந்தாவனத்தைத் தமது வாழ்க்கையிடமாகக் கொண்டவரும் ஆகிய நிம்பார்க்கர் 'துவைதாத்வைதம்' என்னும் வேதாந்தக் கொள்கையைத் தோற்றுவித்தார். அவர் பிரம்ம சூத்திரத்திற்கு உரை இயற்றினர். அதன்கண் உயிர்களும் உலகமும் ஆகிய இரண்டும் பிரம்மத்திலேடு வேறுபட்டும் வேறுபடாமலும் இருக்கின்றன என்றும், பிரம்மம் என்பது இராதையோடு கூடிய கோபால கிருஷ்ணனே என்றும் விளக்கினர்.

சுத்தாத்வைதம் :

வைணவ சமயத்தின் மற்றொரு பிரிவு 'சுத்தாத்வைதம்' ஆகும். அது பதினைந்து பதினாறும் நூற்றாண்டினரும், தெலுங்கராய்ப் பிறந்து காசியில் வாழ்ந்தவரும் ஆகிய வல்லபாசாரியருடன் தொடர்புடையது. நிம்பார்க்கரைப் போல அவர் வேறொரு கிருஷ்ண வழிபாட்டு நெறியைத் தொடங்கினர். வல்லபாசாரியர் கொள்கையின்படி, பிரம்மத்திற்கும் உலகத்திற்கும் உள்ள தொடர்பு, நிம்பார்க்கர் கூறுவதுபோல வேறுபாடும் வேறுபாடின்மையும் உடையதன்றி, வேறுபாடின்மையொன்று மட்டுமே கொண்டதாகும். வல்லபர் தம்முடைய அத்வைதத்தை, உலகத்தை வெறும் மாயை எனக் கூறுதலினுற் களங்கமுற்றதாகத் தாம் கருதும் சங்கரரின் அத்வைதத்தினின்றும் வேறுபடுத்திக் காட்டத் தூய (சுத்த) அத்வைதம் என அழைக்கின்றார்.

சைவ சித்தாந்தம் :

வைணவ சமயத் தத்துவக் கொள்கை வகைகளைப் போலவே, அவற்றிற்கு நிகரான ஆற்றல் மிக்க சைவக் கொள்கைகள் தென்னிந்தியாவில் இருக்கின்றன. இவைகளில் மிகவும் முதன்மை வாய்ந்தவை சைவ சித்தாந்தம், வீர சைவம், சிவாத்வைதம் என்பனவாகும். வைணவத்திற்கு வைணவ ஆகமங்கள் இருப்பது போலவே, சைவத்திற்கும் சைவ ஆகமங்கள் இருக்கின்றன. சைவத்தின் தமிழ் வகையைச் சார்ந்த சைவ சித்தாந்தமானது, சைவ ஆகமங்களை மட்டுமேயன்றி, 'நாயன்மார்கள்' எனப்படும் தென்னகச் சைவச் சான்றோர்களின் உபதேசங்களையும் தனது கொள்கைகளுக்கு அடிப்படையாகக் கொண்டுள்ளது. இதன் அடிப்படைப் பிரமாண நூல் பதின்மூன்றும் நூற்றாண்டினராகிய மெய்கண்டார் இயற்றிய சிவஞான போதம் ஆகும். அருணந்தி சிவாசாரியரின் சிவஞான சித்தியார், உமாபதி சிவாசாரியரின் சிவப்பிரகாசம் திருவருட் பயன் என்பன, இக் கொள்கையைச் சார்ந்த வேறு பிற முக்கியமான நூல்களாகும். கடவுள் (பதி) உயிர்(பசு) ஆணவம் மாயை கன்மம் (பாசம்) உள்பொருள்கள் என்பது, சைவ சித்தாந்தத்தின் முதன்மையான கொள்கையாகும். 'கடவுள் சிவம், அவரே பரம்பொருள், உயிர்கள் சிவத்தின் இயல்புகளுடையவை. ஆனால் சிவத்திற்குச் சமமானவை அல்ல. 'அத்வைதம்' என்பது கடவுளோடு வேறுபாடின்மையன்று. கடவுளினின்று பிரியாமையே. இதுதான் உண்மையான அத்வைதம் ஆகும் என்று, சைவ சித்தாந்தம் சாற்றுகின்றது.

வீர சைவம் :

இரண்டாவதாக நாம் கருதத் தக்க சைவக் கொள்கையானது, வீர சைவம் ஆகும். மிகத் தொன்னெடுங் காலத்திலேயே தோன்றிய தொன்முக அது தன்னைச் சுட்டிக் கொள்கிறது. கல்யாணியில் விளங்கிய கலாசூரி பிஜ்ஜல அரசரின் முதலமைச்சராகத் திகழ்ந்த பசவர் என்பவரால் கன்னட நாட்டில் 12-ஆம் நூற்றாண்டில் அதுமக்களிடையே பெரிதும் பரப்பப் பெற்றது. வீர சைவம் என்னும் சொல் ''உறுதிப் பாடுடையவர்களின் சைவம்'' அல்லது ''செயலாண்மைத் திறச் சைவம்'' என்னும் பொருளுடையது. அதனைப் பின்பற்றுபவர்கள் தம் உடம்பில் இலிங்கத்தை அணிந்து கொள்ளுதலால், அஃது 'இலிங்காயதம்' எனவும் வழங்கப் பெறுகின்றது. வேத ஆகம புராணங்களை மட்டுமேயன்றி, 'புராதனர்கள்' எனத் தாம் போற்றும் தமிழ்ச் சைவ அடியார்களையும், 'வசனங்கள்' எனப்படும் கன்னட சமயப் பெரியோர்களின் உபதேசங்களையும், வீர சைவர்கள் பிரமாணமாகக் கொள்கின்றனர். கலைக் குறியீட்டின்படி, வீரசைவத் தத்துவக் கொள்கையானது சக்தி 'விசிட்டாத்வைதம்' எனவழங்கப்பெறும். 'கடவுளின் இரண்டல்லாத் தன்மையானது தனது ஆற்றல் அல்லது சக்தியினால் விசேடிக்கப் படுதல்' என்பது அதன் பொருளாகும். இத் தத்துவ முறையின்படி, தன்னின் வேறல்லாத ஆற்றல் அல்லது சக்தியினால், கடவுளும் உயிர்களும் தனித்தனியே பிரிக்க வியலாத நிலையில் ஒன்றியுள்ளன. இங்ஙனம் ஒன்றியுள்ள நிலையை உணர்ந்துய்வதே வாழ்க்கையின் குறிக்கோள். இதனை லிங்கமும் (சிவமும்) அங்கமும் (உயிரும்) ஒருமைப்படுதல் என்னும் கருத்தில் 'லிங்காங்க சமரஸ்யம்' எனக் கூறுகின்றனர்.

சிவாத்வைதம் :

சிவாத்வைதக் கொள்கையானது, இராமானுஜரோடு ஒரு காலத்தவராக வாழ்ந்திருக்கக் கூடிய ஸ்ரீகண்டரால் வகுக்கப் பெற்றது. சங்கரரின் அத்வைதக் கொள்கையோடு, இது பெரிதும் நெருங்கிய நிலையில் வருகின்றது. பதினொன்றும் நூற்றாண்டில் வாழ்ந்த அப்பைய தீட்சிதர், தம்முடைய பல நூல்களில் சைவமும் அத்வைதமும் ஆகிய இரு கொள்கைகளையும் ஒருமைப்படுத்த முயன்றுள்ளார். 'பிரம்ம சூத்திரத்திற்கு ஸ்ரீகண்டர் வகுத்த உரையில் ஒரோவழி மந்த மதியினராகிய மக்களின் நலங்கருதி விசிட்டாத்வைதத்தை உபதேசிப்பதாகத் தோன்றிய போதிலும், அவருடைய தத்துவக் கொள்கையின் சாரம் அத்வைதமேயாகும்' என அப்பைய தீட்சிதர் கூறுகின்றார். ஸ்ரீகண்டர் பிரம்மப் பொருளைச் சிவம் நீலகண்டம் உமாசகாயம் திரிநேத்திரம் என ஒற்றித்துக் காண்

கின்றார். சிவம் மங்களத் தன்மை வாய்ந்தது. நீலகண்டம் உயிர்கள்பாற் கொண்டுள்ள பேரருளுக்கு அறிகுறியாக நிற்பது. உமாசகாயம் ஞானமும் ஆனந்தமும் ஆகிய ஒப்புயர்வற்ற ஒளியாகத் திகழ்வது. திரிநேத்திரம் உலகங்களையெல்லாம் முத்தொழிற்படுத்தும் பேராற்றலை உணர்த்துவது. சுவேதாசுவதர உபநிடத சுலோகம் ஒன்றை மேற்கோளாக எடுத்துக் காட்டி 'ஒருவன் சிவபரம்பொருளை உணராமல் வீடுபேறு அடைவதென்பது வானத்தை ஒரு தோல்போலச் சுருட்ட முயல்வதைப் போன்று முடியாததொரு செயல்' என ஸ்ரீகண்டர் கட்டுரைக்கின்றார்.

''பரசிவன் உணர்ச்சி இன்றிப்
பல்லுயிர்த் தொகையும் என்றும்
விரவிய துயர்க்கீ றெய்தி
வீடுபேறு அடைதும் என்றல்,
உருவமில் விசும்பின் தோலை
உரித்துடுப் பதற்கொப் பென்றே
பெருமறை இயம்பிற் றென்னில்
பின்னுமோர் சான்றும் உண்டோ?''
—கந்த புராணம்

ஜைன பௌத்தம் :

இனி, இவ்வைதிக நெறிகளுக்குப் புறம்பான கொள்கைகளை நோக்குவோமாயின், ஒரு சிலகாலம் தென்னகத்தில் ஜைனமும் பௌத்தமும் பெரும்பாலான மக்களாற் பின்பற்றப் பெற்றமையையும், இந்து மதத்தில் தோன்றிய சீர்திருத்த இயக்கத்தாலும், சைவ வைணவ ஆசிரியர்களின் அருளுரைகளாலும் அவைகள் அடுத்து விரைவில் அழிவுநிலை எய்தியமையையும், அறியலாம். ஜைன பௌத்த ஆசிரியர்கள் தாம் இயற்றிய நூல்களின் மூலம், தென்னிந்திய மொழிகளின் இலக்கியங்களைச் செழிப்புறச் செய்துள்ளனர். மிக விரிவான நீதிக் கோட்பாடுகளையுடையதும், உலகப் பெரு நூலாக இருப்பதுமான திருக்குறளை இயற்றிய ஆசிரியர் திருவள்ளுவர், ஜைனர் பௌத்தர் சைவர் வைணவர் ஆகிய எல்லாராலும் ஒருசேரத் தத்தமக்குரியவராகக் கொண்டாடப்படுகின்றார். சாத்தனர் இயற்றிய மணிமேகலை என்னும் பௌத்தத் தமிழ் நூலில் அதன் கதைத் தலைவியாகிய மணிமேகலை, வேதம் சைவம் வைணவம் ஆசீவகம் ஜைனம் சாங்கியம் வைசேடிகம் லோகாயதம் முதலிய சமயவாதங்களைக் கேட்டறிந்து உணர்ந்து கொள்ளுமாறு பணிக்கப்படுகின்றாள். புகழ்பெற்ற திக்நாகர் என்னும் பௌத்த தருக்க நூல் ஆசிரியரைத் தோற்றுவித்தும், தருமபாலர் என்பவரைக் கி.பி. ஆறாம் நூற்றாண்டில் நலாந்தா பல்கலைக் கழகத்திற்குத் தலைவராக அனுப்பி வைத்தும், ''கல்வியிற் கரையிலாத காஞ்சி மாநகர்'' இணையற்ற தனிப் பெருஞ் சிறப்பை எய்தியுள்ளது. ஜைனர்கள் கருநாடகத்தில் மிக்க செல்வாக்குப் பெற்றிருந்தனர். கன்னட மொழியில் ஜைனர்கள் இயற்றிய நூல்கள் பலப்பல இருக்கின்றன. அவைகளிற் பல, தீர்த்தங்கரர்கள்—ஜைன சமயப் பெரியார்களின் வாழ்க்கை வரலாறுகளை விளக்குவனவாகும். ஒரு சில காலம் மதுரை மாநகரம் ஜைனர்களின் கோட்டையாக விளங்கியது. அந்நகரிற் கி.பி. 470-இல் வச்சிரநந்தி என்பவனால் ஒரு சங்கம் அமைக்கப்பட்டதென நாம் கேள்விப்படுகிறோம்.

தென்னாட்டுச் சமயச் சான்றோர்கள் :

இந்தியாவில் தத்துவமானது சமயத்தோடு பெரிதும் தொடர்புடையதாகவுள்ளது. தத்துவ ஆசிரியர்களே சமயத் தலைவர்களாகவும் கருதப் பெறுகின்றனர். இது வரையிற் குறிப்பிடப் பெற்ற தத்துவ ஆசிரியர்கள் ஒவ்வொருவரும், மாட்சிமை மிக்க சமயத் தலைவர்களாகவும் விளங்கினர்.. தென்னிந்தியச் சைவ வைணவ சமய ஆசிரியர்களைப் பற்றி முன்னரே குறிப்பிட்டுள்ளோம். தென்னகச் சைவ சமயச் சான்றோர்கள் எனப் போற்றப்படுவோர், அறுபத்து மூவர் ஆவர். 'தலைவர்கள்' என்னும் பொருளில் அவர்கள் 'நாயன்மார்கள்' என அழைக்கப்படுகின்றனர். அவர்களில் மிகவும் முதன்மை வாய்ந்தவர்கள் ஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்னும் நால்வர்கள் ஆவர். இவர்கள் நால்வரும் அருளுணர்வு பெற்ற சிறந்த கவிஞர்களாக விளங்கி, நாட்டிற் பக்தி வெள்ளம் பெருக்கெடுத்தோடச் செய்து, மக்கள் மனத்தில் ஆன்மீக வாழ்க்கைக்குரிய பண்பாட்டை உண்டாக்கினர். வைணவ சமயப் பெரியார்கள் பன்னிருவர்கள் ஆவர். தெய்வ அருளில் 'ஆழ்ந்து திளைப்பவர்கள்' என்னும் பொருளில், அவர்கள் ஆழ்வார்கள் எனச் சிறப்பித்து ஓதப்படுவர். அவர்களில் தலைசிறந்தவர் ஆகிய நம்மாழ்வார் பிறவியிலேயே ஒரு யோகியாவர். அவர் அருளிச் செய்த கவிதை நூல் ஆகிய திருவாய்மொழி, வேதாந்த தேசிகரால் 'திராவிட உபநிடதம்' எனப் போற்றப்பட்டுள்ளது.

கருநாடகத்திற் பரவிய வீர சைவமானது, பல அருளாளர்களைத் தோற்றுவித்துள்ளது. அவர்கள் அக்கொள்கையை மக்கள் அனைவரும் தழுவும் வகையிலும் கவர்ச்சி மிக்க முறையிலும் விளக்கிப் பரப்பினர். அத்தகையவர் இருநூற்றுக்கும் மேற்பட்டவர்களாவர். அவர்களில், அவர்களுக்குத் தலைமை நிலையில் விளங்கிய அக்கமாதேவி என்னும் பெண்பாலாரும் ஒருவர். வீர சைவப் பெரியோர்கள் இயற்றிய நூல்கள் 'வசன சாத்திரங்கள்' என்னும் தொகுதிப் பெயரால் வழங்கப்படுகின்றன. கன்னட நாட்டில் மிக மிக எளிய சிறு வீடுகளிலும்கூட, இந்நூல்கள் பெரிதும் போற்றிப் படிக்கப்பட்டு வருகின்றன. இந்த வசன நூலாசிரியர்களின் பொருள் பொதிந்த சிறு சிறு தொடர்கள், மக்களின் பேச்சு வழக்கில் இயல்பாக அடிக்கடி வழங்கப்படும் நிலையில் பெரிதும் பிரிவறக் கலந்து விட்டிருக்கின்றன. இந்நூல்களில் அடுத்தடுத்து வற்புறுத்திக் கூறப்படும் ஒரே பொருள், ''மனிதர்காள்! பாவ வழியினின்று திரும்புங்கள், சிவபிரானைச் சரண் அடையுங்கள்!'' என்பதேயாகும்.

அரிதாசர்கள் :

கன்னட நாட்டில் வைணவ சமயமானது அரிதாசர்களின் இயக்கத்தை எழுச்சியுறச்

செய்தது. அரிதாசர்களில் மிகவும் தலைசிறந்தவர் புரந்தர தாசர். அவர் ஒரு சிறந்த கவிஞரும் பக்தரும் ஆவார். கன்னட மொழியில் அவர் இயற்றிய எளிய இனிய பதங்கள், கடவுள் அன்பையும் கடவுட் காதலையும் அளவின்றி ஏராளமாகப் பொழிவனவாகும். இத்தகைய ஓர் இயக்கம் மகாராட்டிரத்திலும் கால்கொண்டது. ஞான தேவர், நாமதேவர், ஏகநாதர், துக்காராம், இராமதாசர் முதலானோர் அவ்வியக்கத்தோடு தொடர்புடையவர்கள்.

சித்தர்கள் :

'சித்த மார்க்கம்' எனப்படும் தனிச் சிறப்புடைய அருளியற் கொள்கை ஒன்று தென்னகத்தில் நிலவிக் கொண்டு வருகின்றது. தென்றமிழ்ச் சைவ சமயத்தின் மிகச் சிறந்த தெய்விக நூலாகத் திகழ்ந்துவரும் திருமந்திரம் என்னும் நூலை அருளிச் செய்த திருமூலர், ஒரு பெருஞ் சித்தர் ஆவர். வழிவழிச் செய்தியின்படி, கயிலையில் இருந்து தெற்கு நோக்கி வந்த ஒரு சிவயோகியாகிய அவர், இறந்து போன மூலன் என்னும் இடையன் ஒருவனின் உடலைக் கண்டார். பசுக்களின் துயரை நீக்கும் பெருங் கருணையினால் அவ்வுடலிற் புகுந்தார். மூவாயிரம் யாண்டுகள் யோகம் இருந்து திருமந்திரத்தின் மூவாயிரம் பாடல்களையும் இயற்றினார். மனித உடலை அழியாமற் (காயகற்பம்) செய்து கொள்ள இயலும் என்பது, சித்தர் நெறியின் தனிச் சிறப்பான கொள்கையாகும். தனது பிறிதொரு பகுதியாக, இந்நெறி வடநாட்டு ''அடயோக நெறியை''ப் பெற்றுள்ளது.

முடிவுரை :

அண்மையிற் சில நூற்றாண்டுகளிலும், நாம் வாழும் இந்நாளிலும் கூட, புகழ்மிக்க ஞானிகளையும் முனிவர்களையும் தென்னகம் தோற்றுவித்துள்ளது. அவர்களில் தாயுமானவர், சதாசிவப் பிரம்மம், தியாகராஜர், இராமலிங்க அடிகள், நாராயண குரு, ரமண மகரிஷி முதலானோர் ஒரு சிலர் ஆவர். ''அன்றைய இந்தியாவையும், என்றுமுள்ள இந்தியாவையும் மறுபடியும் ஒருவன் அவர்களிற் சந்திக்கின்றான்'' என அண்மைக் காலத்தின் மேலைநாட்டு எழுத்தாளர் ஒருவர், கடைசியாகக் குறிப்பிடப் பெற்ற ரமண முனிவர் அவர்களைக் குறித்துக் கூறியிருப்பது, ஏனையருக்கும் கூடப் பொருந்துவது ஆகும்.

—தமிழாக்கம், **ந. ரா. முருகவேள்**

தலபுராணங்கள்

நமது தமிழகத்திலுள்ள சைவத்திருத்தலங்களுக்கும், ஸ்ரீவைணவத் திவ்விய தேசங்களுக்கும், பெருமையும் புகழும் அமைந்தமைக்குரிய காரணங்கள் பற்பலவற்றுள், அவ்வக்காலத்தில் இருந்த அருளாளர்களும், சிறந்த பெருங் கவிஞர்களும் பாடியருளிச் செய்துள்ள தலபுராணங்களும், தனிப்பெரும் சிறப்பிடம் பெறுகின்றன.

திருவாவடுதுறை ஆதீன **மகாவித்வான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை** அவர்களும், அவ்ஆதீனத்தைச் சேர்ந்த **மாதவச் சிவஞான சுவாமிகள், கச்சியப்பமுனிவர்** முதலிய பெருங் கவிஞர்களும், ஞானிகளும் ஆகிய பற்பலர், எத்தனையோ பல அருமையான தலபுராணங்களை இயற்றியுள்ளனர். சொற்சுவை பொருட்சுவைகளிலும், கற்பனை நயங்களிலும் சிறந்து விளங்கி, நம் தமிழ் மொழியின் இலக்கிய வளர்ச்சிக்கும் செழிப்புக்கும், அத்தகைய தலபுராணங்கள் செய்துள்ள அரும்பெரும் பணிகள், அனைவரும் வியந்து போற்றுதற்குரியன.

தமிழிலக்கியச் செல்வங்களுள் ஒன்றாகத் திகழும் தலபுராண நூல்களை, அழியவிடாமல் போற்றிப் பாதுகாத்துப் பேணிப் பரப்ப வேண்டுவது, தமிழுணர்வும், சமய உணர்வும், கடவுட் பக்தி நெறிப் பண்பாடும் உடைய தக்கவர்கள் அனைவருக்கும், உரிய தலைசிறந்த கடமையாகும்.

இப்பொறுப்பினை உணர்ந்து, நமது ''திருக்கோயில்'' திங்கள் இதழில், சிறந்துயர்ந்த செவ்விய கவிதை நடையில், நமது முன்னோர்கள் இயற்றி அளித்துச் சென்ற அருமை பெருமைமிக்க தலபுராணங்களை, தொடர்ந்து பகுதி பகுதியாக வெளியிட்டு வருதல், நலம் பயக்கும் எனக் கருதி, முதன்முதலாகத் ''**திருமயிலைப் புராணம்**'' என்னும் தலபுராணத்தின் மூலமும், சென்ற நூற்றாண்டில் அதற்குக் காஞ்சிபுரம் **மகாவித்வான் சபாபதி முதலியார்** அவர்கள் எழுதியிருக்கும் பழைய உரையும், இவ்விதழிலிருந்து வெளியிடப்பெறுகின்றது.

—ஆசிரியர்

திருவல்லிக்கேணி

அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி

ஈக்காடுதாங்கல்

உத்ஸவப் பத்திரிகை

நள ஹ மாசி மீ 2 உ (13—2—77) ஞாயிற்றுக்கிழமை

நூற்றெட்டுத் திவ்விய தேசங்களுள் ஒன்றாகிய திருவல்லிக்கேணியில் எழுந்தருளியிருக்கும் அருள்மிகு பார்த்தசாரதி சுவாமியின் ஈக்காடுதாங்கல் உற்சவம், நாளது நள ஆண்டு மாசி மாதம் 2-ஆம் தேதி (13-2-77) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். அன்று அதிகாலை 1 மணிக்கு அருள்மிகு பார்த்தசாரதிசுவாமி சந்நிதியிலிருந்து புறப்பட்டு, மைலாப்பூர் பேயாழ்வாரை மங்களாசாஸனம் செய்து, ராஜா அண்ணாமலைபுரம், தேனாம்பேட்டை, தியாகராய நகர், மேட்டுப்பாளையம் வழியாக எழுந்தருளி, பகல் 12 மணியளவில் ஈக்காடுதாங்கலில் தேவஸ்தானத்துக்குச் சொந்தமான ஸ்தலத்தில் அமைக்கப் பெற்றுள்ள பந்தலில் இறங்கிப் பகல் 2 மணியளவில் திருமஞ்சனம் கண்டருளுவார். மாலை 5 மணிக்குச் சைதாப்பேட்டையில் வீதிப் புறப்பாடு ஆகும். இரவு 8 மணிக்குமேல் சைதாப்பேட்டை சந்நிதியிலிருந்து புறப்பட்டு, தியாகராயநகர், தேனாம்பேட்டை வழியாகத் திரும்பவும் சந்நிதிக்கு எழுந்தருளுவார்.

பெருமாள் பிராசீனமாக எழுந்தருளும் வழியிலுள்ள உபயங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும். உபயம் செய்ய விருப்பமுள்ளவர்கள் உபய கட்டணத்தை 5-2-77-க்குள் தேவஸ்தான அலுவலகத்தில் செலுத்தி உபய ஏற்பாடு செய்து கொள்ளும்படி வேண்டுகிறோம்.

இங்ஙனம்

இ. பொன்னப்பபிள்ளை, B.Com., B.L.,

நிர்வாக அலுவலர்

குறிப்பு: மயிலாப்பூர் பேயாழ்வார் மங்களாசாஸனம் சித்திரகுளத்தின் தென் மேற்குக் கரையில் நடைபெறும்.

பெருமாள் இறங்கும் ஈக்காட்டுப்பந்தல் பழைய ஈக்காட்டு மண்டபத்திற்கு அருகாமையில் உள்ளது.

வாலி வழக்கு

"முது பெரும் புலவர்"
திரு புரிசை சு. முருகேச முதலியார்

(முற்றொடர்ச்சி)

இராம இலக்குமர் கானகத்தில் தங்கி நின்ற காலத்தில் தத்தம் உடைவாளொடு வைகினர் என்பதனுக்குச் சான்றுகள் உள. சூர்ப்பனகையை இளவல் ஒறுத்தது அந்த வாளி னல்தான். கவந்தன் இருதோள்களையும் தனித் தனியாக இராம இலக்குவரிருவரும் தத்தமது இரு வாள்களைக் கொண்டு துணித்தனர் என்பத னால் இராமபிரானிடத்து ஒரு வாளிருந்தது என்பது தெரிகின்றது. இந்த வாள் இரா வணனைப் பொருத காலத்திலும் இராமபிரா னிடத்திலேயே இருந்த தென்பது, இராவணன் மேல் செல்ல இராமன் போர்க்கோலங் கொண்டபொழுது குறிக்கப்படுகின்றது. கடை நாட் போருக்குப் பெரும் ஆற்றலோடு தேரேறி வருகின்றான் இராவணன் எனத் தேவரும் வான ரரும் பயந்தார்கள். அவர்கள் பயந் தீர்க்க இராமன் புறப்படுகின்றனன். அப்புறப் பாட் டிற்காகச் செய்த போர்க் கோலத்தில், உடை வாள் விசிக்கின்றனன் இராமன். இராமபிரான் திருக்கரங்கள் யானையின் துதிக்கை யனையவாம். அவன் இடையில் கட்டும் வாட் படையின் பற்கள் எமனுடைய பற்களையனையனவாம். சானகியார் துன்பத்திற்கும் தேவர்களை அலைக் கும் அசுரர் அழிம்பிற்கும் முடிவு கட்டுவது போலிருந்தது இராமன் வாட் படையை இடையில் கட்டியது.

" கடக்களிறு எனத்தகைய
கைய ஒரு காலன்
விடக்கு எயிறு எனப்பிறழும்
வாள் வலன் விசித்தான்
மடக் கொடி துயர்க்கும்
நெடு வானில்உயர் வோர்தம்
இடர்க் கடலினுக்கும் முடிவு
இன்றென விசித் தான் "
—யுத்த காண்டம், தேரேறு. 36.

இப்படி இராம பிரானிடத்து வாள் நீங்காமல் இராமபிரானிடத்திலேயே உள்ளதென்றால், அண்ணல் அங்கதனுக்கு அளித்த வாள் எந்த வாள்? புட்டிலில் பற்பல கணைகள் இருப்பது போல, இடுப்பிலும் பற்பல வாட்படைகளை வைத்திருக்கின்றனர் மன்னர்கள். அதில் ஒன்றை அன்றளித்தனன் எனக் கொள்ளுவதா?

வழக்காடும் இடம் மன்றம். மன்றம் என்பது பழைய காலத்தில் படர்ந்து விரிந்த மரத்தடி என்பது பொருள். "வாய்மை வெளி வாசம் பொதுவும் மன்றம்" என்பது பிங்கல நிகண்டு. "மன்றம் வெளியும் பொதுவும் வாய்மையும்" என்பது பொதிகை நிகண்டு. இப்பொருள்களால் வெட்ட வெளியான இடம் மன்றம் என்பது விளங்கும். அவ்வெளியிடத்தில் ஒரு சமயத்தவர், ஒரு சாதியினர், ஒரு நாட்ட வர், ஒரு வீட்டவர் மாத்திரம் இருந்து பேசி அக்குறிப்பிட்ட கூட்டம் ஒத்துக் கொண்டால் போதாது. உலகமனைத்தினும் உள்ள மக்களில் அறிவுடையவர் அனைவரும் ஒப்ப முடியும் முடிவு களே மன்றங்களால் ஒப்புக் கொள்ளமுடியும். அதனால் ஒருவரை மகிழ்விக்க முடிவு காணுதல் என்றென்றும் நீங்கா வழக்காகவே நிகழும். இவற்றை யெல்லாம் உட்கொண்டு நிகழ்ந்தன வற்றைத் திரும்பிப் பார்ப்போம்.

பாரத நாட்டில் பாற்கடல் கடைந்த கதை மிகவும் தொன்மையானது. அக்கதையோடு தொடர்பு படுத்தும் வாலியும் மிகப் பழைமை யானவன் என்பது தெளிவு. இராவணன் தவஞ் செய்து வரம் பெற்றுத் திக்கு விஜயம் செய்த பொழுது வாலியின் வாலாற் சிக்குண்டனன் என்பதனால், இராவணன் வாழ்க்கைத் தொடக் கத்திலேயே சிறப்புற்றிருந்தவன் வாலி என்ப தும் தெரிகின்றது. அவ்வளவு அளப்பரும் ஆண்டுகள் வாழ்ந்த அவன், தனக்கு நெடுங் காலம் இளமையினனாகிய இராமபிரானிடத்தில் அளப்பரும் பற்றுடையவனாக இருத்தல், அவனது வாழ்நாட்களில் இராமனையனைய பண்புடைய வர் இல்லை என்பதனால்தான் என்பதனையும் அறி கின்றோம். இராமசரிதத்தைக் கேட்டு அவ் வளவு பற்றுடையனாயினன் வாலி. அவனால் மதிக்கப் பெறும் இராமபிரான் நேராக வாலியி னுடைய பெருங் குணங்களை மிகச் சிறு நேரத் தில் எதிருக்கெதிராக நின்று கண்கூடாகக் கண்டுணர்ந்தனன். பல்லாயிரம் யோசனை தூரத்தில் வாழும் ஒருவனை, அவனை நன்கறிந்த மற்றொருவன் ஒரு நேரத்தில் தீயவன் என்று எண்ணுவானாயின் அதே நேரத்தில் இவனை அவனுந் தீயவனென்று மதிப்பன். அப்படியே இவன் அவனை மிக நல்லவன் என்று மதிப்ப னென்றால் அவனும் இவனை அப்படியே நல்லவ னாக மதிப்பான். இது மனத்திற்குள்ளவன்மை எனப் பெரியவர்கள் உரைப்பர். இக்கருத்து திருக்குறளாலும் வலியுறுத்தப்படுகின்றது. "புணர்ச்சி பழகுதல்வேண்டா வுணர்ச்சி தான்

நட்பாங் கிழமைதரும்''. இந்த உலகில் உண்மைகள் இராமபிரானுக்கு மாத்திரம் புறம்பானதா? என எண்ணிப் பார்க்க வேண்டும்.

வாலிமேல் கணை தொடுக்கச் செய்தான் அவன் தம்பி. அந்தத் தம்பியே அண்ணன் அடிபட்டு வீழ்ந்தவுடன் மனந்தாளாமல்தானும் வீழ்ந்து அழுகின்றான். அந்த வாலி இராமனைச் சுடச்சுடக் கேட்கும்பொழுதெல்லாம்சுக்கிரீபன் உணர்வோடு இருந்தனனு அல்லது பழைய அண்ணன் மடிவதற்காக மயங்கிப் புதிய அண்ணன்படும் துன்பம் ஒன்றும் தோன்றாது நின்றனனு என்பதும் தெரியவில்லை. இராவணன் வதைக்கு இப்பொழுது தோதில்லை, வாலி வதைதான் முன்னதாக ஆக வேண்டுமென வடித்தெடுத்துக் காரணங் காட்டிய அனுமன்தான் என்ன செய்கின்றான் என்பதும் தெரியவில்லை. தன்னைக் கொல்லச் செய்த தம்பியை என்ன பிழை செய்தாலும் கொல்லாதிருக்க வேண்டுமென்று வரங் கேட்கின்றனன் மரணவாயில் தவிக்கின்ற வாலி. இது நாம் இராமாயண காதையில் படிக்கின்றோம். இத்தகைய ஒரு பெருந்தகையை நமது வாழ்நாளிலேயே உலகத்தோடு சேர்ந்து கண்டிருக்கின்றோம். அவர் யாரென்று யாரும் கேட்க மாட்டீர்கள். அண்மையில் பிறந்து வளர்ந்த இளஞ்செல்வங்கள் கேட்டால் அவர்களுக்காகத் தெரிவிக்கின்றேன். பாரத நாட்டில் பண்டைய பெரியவர்கள் இயல்பைப் புதுப்பிக்க வந்த மாஞானி காந்தியடிகளார் தான். தன்னைச் சுட்டுக் கொன்றவனையும் கொல்ல நினைக்காத குணப்பெருங்குன்றம். நாம் இப்படியின்று கண்ணாரக் கண்ட இப்பெருந் தகையனையவன் வாலியென அறிகின்றோம். தன்னை வதைக்கச் செய்தவனை வாழ்விக்க வேண்டிய வாலியை அவன் தம்பிக்குத் துணை செய்யத் தனி வில்லேந்திய தயாபரன் நேரிற் கண்டும் நெஞ்சுருகாது நின்றிருக்க எப்படி முடியும்? அன்பர்கள் பாவனை செய்து வழிபட வைத்திருக்கும் ஒரு கற் சிலையில் முன்னை ஒரு இராமபிரான் உருவத்தைத் தீட்டிய ஓவியத்தின் முன்னே வாலி நின்று இப்படிப் பேசியுருகுவனுயின், அந்தப் படத்திலுள்ள இராமன் கல்லிலுள்ள இராமன் வடிவமும் வாலியோடு ஒக்கக் கண்ணீர் விட்டு அழுமென்றால், வள்ளல் இராமபிரான் உயிரோடு அவன் முன்னே நின்று அவன் வேதனையை விளைவு செய்தான். அவன் வேதனைக்கு வித்திட்ட அவன் தம்பியும் தன்னை விட்டு அவன் அண்ணனெடு கூடியழும்பொழுதும் எப்படித்தான் அழாமலிருந்திருப்பன்?

இவற்றை யெல்லாம் ஒரு சிறிதும் எண்ணுமல், தங்கள் மனங்களையும் கரையாக் கருங் கற்களாக்கிக் கொண்டு, இராமபிரான் உள்ளத்தை அரத்திற்குந் தேயா ஒரு வைரக் குன்றமாக்கி விட்டு, வாலி மகனை அடைக்கலம் என்று தள்ளினன். அவன் சென்று அண்ணலைப் பணிந்தான். அந்த இராமபிரான் வாலி சொல்லிக் கொண்ட பற்பல வேண்டுகோள்களில் ஒன்றிற்கும் ஒரு சலுகைச் சொல்லுஞ் சொல்லாமல், வாலியின் கடைசி விஞவிற்கு மூடிக் கொண்ட தமது வாயை இப்பொழுது திறந்தார். யாரோடு பேச? உயிர்விடப் போகின்ற வாலியொடு ஒரு வார்த்தை சொல்ல அல்ல, அவன் மகனெடு பேச வாயைத் திறந்து தன் வாளை நீட்டி நீ இதனைப் பொறுத்துக் கொள் என்று கூறி அவனை அடிமை கொள்ள ஒத்துக் கொண்ட தமது பெருமிதத்தை வெளிப் படுத்தி அருளினர். இவர் அருள்முகத்தைக் கண்டு களித்து மகிழ்ந்து விண்ணுலகம் நண்ணினன் வாலி என எப்படித்தான் இயம்பி முடிக்கின்றனரோ தெரியவில்லை.

இம் முடிவு காணும் கடைசிப் பாடலில் ''என்றலும் உலகமெல்லாம் ஏத்தின'' என வருகின்றது. ''ஈதலும்'' அல்ல, என்றலும். இந்த என்றலென்ற சொல் ஈதலென்று எவ்விதமாக மாறுமோ தெரியவில்லை. அப்படி மாறுபட ஒரு புதிய இலக்கணங் கண்டார்களேனும் இந்தச் செயலுக்கு உலகமெல்லாம் ஏத்தத் தக்க சிறப்பென்ன இருக்கின்றது? அப்பனைக் காணுமல் கேட்காமல் கொன்று குவித்துவிட்டு, அவன் மகனை ஆளடிமையாகத் தர அந்த அடிமைத்தனத்தை ஏற்றுக் கொண்ட வள்ளன்மைக்காக இராமபிரானை மகிழ்ந்து உலகமெல்லாம் கொண்டாடினவா? அல்லது தன்னைக் கொன்று குவித்த இராமனுக்குத் தனது அடிமையாகக் கொடுத்த வாலியின் வள்ளன்மையைப் புகழ்ந்து உலகமெல்லாம் போற்றினவா?

தனது கடைசி விஞவிற்கு ஒரு விடையுங் கூறுதிருக்கவும், இளவல் இசைத்த விடையும் ஒரு பகுதிக்காகி ஒரு பகுதி விடையின்றி நிற்கவும், எதிலரவர் குற்றம் இருந்து போகட்டும் என்று தனது குற்றத்தைப் பொறுத்துக்கொள்ள வேண்டுமென்று வேண்டிய வாலி ஒரு முறை தலை வணங்கினன். முன்னமே இராமனிடத்தில் தானை அடைக்கலம் புகுந்து விட்டு, இராமனெடு ஏகபோகமாக உறவாடிக்கொண்டிருக்கும் தனது தம்பி சுக்கிரீவனைப் பின்னுமொரு தரம் தான் அடைக்கலமாகத் தருபவனுகி ''உன் கையில் பிள்ளை உனக்கே அடைக்கலம்'' என்பது போல அடைக்கலங் கோரிய பொழுது ஒரு முறை தலை வணங்கினன் வாலி. இந்த இரு முறை வேண்டுகோள்களும் வாலியின் பெருமிதமான வேண்டுகோள்களே. வாலிக்கு உலகமக்களும் ஒத்துக் கொள்ளத்தக்கதொரு வேண்டுகோள் தனது மகனுகிய அங்கதனை இராமனுக்கு அடைக்கலமாக்குவதேயாகும். அதற்கெல்லாம் அடிவணங்கிக் கேட்டுக் கொண்ட வாலி, இந்த இன்றியமையா வேண்டுகோளுக்கு அடி வணங்காமலிருப்பானு? அன்றியும் இராமபிரானை மும்மூர்த்திகளும் ஒன்றுன ஒருவன் எனத் தம்பிக்கும் தனது மகனுக்கும் அறிமுகம் செய்யும் வாலி, அம் மூர்த்தி எதிரே வந்து நிற்கின்றபொழுது, தனது உயிரை நீத்து உம்பர் உலகம் புகும் ஒருவன் வணக்கம் செய்யாமல் போவானு? அங்கதன் வணங்கினன். அவன் பின்னே மரம் போலே நின்ற வண்ணம் இருந்தான் வாலியெனப் பொருள் கண்டு விட்டு இராமபிரானது பெருந் தன்மையான முத்திவை தங்கள் பேதைமைத் தனத்தில் மூழ்கடித்து விடுவதா?

இத்தனை ஐயப்பாடுகளையும் உள்ளத்தில் கொண்டு உசாவுகின்றபொழுது, இங்கு இராமபிரான் செய்த செயல் ஏதோ ஒரு பெருஞ்

செயலாக இருக்க வேண்டும். அச்செயல் உலக மெல்லாம் மதிக்குஞ் செயல் எனத் தோன்று கின்றதல்லவா? அச்செயல் யாதெனக் காண் போம்.

வாலியின் வதையைக் குறித்து இராம பிரான், நிகழ்ச்சிக்குப் பின்னர் பெரிதும் கவலை யுற்றிருந்தனன். அச்செம்மல் வாலியின் குணங் களை என்றும் மறந்துவிடவில்லை. வாலியின் மகனுக்கு மிகுதியான உரிமையை வழங்கி வந் தனன். அங்கதனும், அவன் தாயும் இராம பிரானைத் தங்கள் குடிக்குத் தீங்கு செய்ததாக எண்ணியதே கிடையாது. மற்றவர்களின் தூண்டுதலால் பெருந்தகை தேவியைப் பறி கொடுத்திருந்த துன்பச் சூழலால், விதி வசத் தால் தங்கள் தலைவனிடத்து ஐயப்படவிருந்த ஒரே ஒரு குற்றச் சாட்டினால், வாலிக்குப் பெருந் துன்பம் வந்தது என நினைத்தனரே யன்றி, இராமன் செய்தனனென அவர்கள் நினைத்ததே இல்லை. இவற்றிற்குள்ள வரலாற்றிடங்களையும் அவற்றில் கல்லுருகக் கம்பர் வழங்கியிருக்கும் உருக்கமிக்க பாக்களையும் பார்த்து விட்டு, ''தன்னடி தாழ்தலோடும்'' என்ற இடத்திற்கு வருவோம்.

வாலியின் வடிவத்தைக் கட்டிக்கொண்டு கதறும் தாரை ''ஐயாது உன்மேல் ஒளித்து நின்று வாளி எய்தனனே! உன்னால் இனியவன் எனப் போற்றப்பட்ட இராமன், அந்த ஐயன் வாளியால் சொல்லிய சொல்லை அவன் வாயால் சொல்லியிருந்தால் உனது வாழ்வையெல்லாம் வழங்கியிருப்பாயல்லவோ, எளிய தேவர்களுக்கு எல்லாம் உயர்ந்த அமுதத்தை வழங்கிய நீ'' எனச் சொல்லி அழுதனள்.

''ஐயாவாளி ஒளித்துநின்றுஎய்வான்
ஏயா அந்த விராமன் என்றுளான்
வாயால் ஏவினன் என்னில் வாழ்வெலாம்
ஈயாயோ அமுதேயும் ஈகுவாய்''
—அரசியற்ப, 12.

இராமன் மதங்காச்சிரமத்தில் தனித்து நின்று வருந்தியதற்கும், தனது மைத்துனன் குறித்த காலத்திற் படை கொண்டு செல்லாமைக்கும் வருந்தினள் தாரை.

''தேவிநீங்க அத்தேவரில் சீரியோன்
ஆவிநீங்கினன் போல் அயர்வானது
பாவியாது பருகுதிர் போலும்நும்
காவிநாள்மலர்க் கண்ணியர் காதல்நீர்''
—கிட்கிந்தை, 31.

இராமன் சுக்கிரீபனுக்குப் புத்திமதி புகட்டும் பொழுது மாந்தருக்குப் பெண்களாலே தான் மரணமும் பழியும் வருவது. பெண்பொருட் டால் மரணம் வந்ததுஎன்பதனை உனது அண்ண னாகிய வாலிக்கு வந்த துன்பத்தால் அறிவா யாக. பழி வரும் என்பதனையும் அவர்களால் அல்லல் வரும் என்பதனையும் எங்களுக்கு வந்த அல்லலாலும் பழியாலும் தெரிந்து கொள்ளுக'' எனக் கூறினன். தமக்கு வந்த அல்லல், தேவியைத் தேடுவது பழி அத்தேடலுக்கு இடையிலே வாலியைக் கொன்றதனால் நேர்ந் தது.

''மங்கையர் பொருட்டால் எய்தும்
மாந்தர்க்கு மரணம் என்றல்
சங்கையின் றுணர்தி வாலி
செய்கையாற் சாலுமின்னும்
அங்கவர் திறத்தி னலே
அல்லலும் பழியு மாதல்
எங்களிற் காண்டி யன்றே
யிதற்கு வேறே தியாதோ''
—அரசியல், 33.

அங்கதன் இராமபிரான் அடிகளில் விழுந்து வணங்குகின்றான், எப்போது? சுக்கிரீபன் பட்டந் தரித்து இராமனை வணங்கியவுடன். அப்பொ ழுது இராமபிரான் அவனை வாழ்த்தி நீ மிகவும் சீலமுடையவன், மேலும் உன் பண்புகள்உயரும், உனது தந்தை வாலி சொல்லியபடி, இச்சிறிய தந்தையை உனது தந்தை எனக் கொண்டு வாழுதி என வாழ்த்தினன்.

''வாலி காதலனும் ஆண்டு
மலரடி வணங் கினனே
நீலமா மேகமன்ன
நெடியவன் அருளினன்நோக்கி
சீலம் நீயுடை யையாதல்
இவன் சிறுதாதை யென்னு
மூலமே தந்த நுந்தை
யாமென முறையில் நிற்றி
—அரசியல், 36.

அனுமன் தேவியை நாடி வருவதற்காக அனுப் பப்பட்ட தூதனனன். அனுமனுக்குத் தேவிக்குச் சொல்ல வேண்டிய சொற்களையும் அடையாளங் களையுமேஅண்ணல் சொல்லியனுப்பினன். இராவ ணனைக்கண்டதும் பேசியதும் அனுமனைச் செய்த செயல்கள். இராமபிரான் தூதுவன் என்று அனுப்பும் பெருமையை அங்கதனுக்கே அளித் தனன். அனுமன் எவ்வளவு வல்லவனையினும் நல்லவனையினும், வானர அரசியலில் சுக்கிரீபன் பேரரசன், அங்கதன் இளவரசன், அனுமன் அமைச்சன் என்ற வரிசையிலேயே அங்கதனுக்கு உரிமையளித்து வைகினன் வள்ளல். ''பொது நோக்கான் மன்னன் வரிசையால் நோக்கின் அதுநோக்கி வாழ்வார் பலர்'' என்ற அரச வொழுக்கும் அங்கதனுக்கு அளிக்கப்பட்டிருந் தது.

அங்கதன் தூது காலத்தில் இத்தூது வேண்டுமா வேண்டாமா என ஒரு விவாதம் நடந்தது. இளவல் பல காரணங்களைக் கூறி வேண்டவே வேண்டாம் எனக் கூறினன். அப் பொழுது அண்ணல் புன்முறுவல் செய்து இரா வணன் செய்தவை பல தீங்குகளானாலும் அரச நீதியில் நாம் தவறலாமா?

''அயிர்த் திலன் முடிவமஃ தேயாயினும் அறிஞர்
ஆய்ந்த
நயத்துறை நூலின் நீதி நாம் துறந்து அமைதல்
நன்றே''

என முறை சொல்லி இலக்குவன் தடையை நீக்கி, அங்கதனைத் தூது செல்லப் பணிக்கின் றனன் அண்ணல். கட்டளை கேட்டுப் பணிந்த னன் அங்கதன். இராமன் நீ இராவணனை அணுகி அவன் வஞ்சித்த தேவியை விட்டு உயிர் பெற்று வாழுகின்றனனை, அல்லது போரில்

கலந்து தலை பத்தும் சிதறப் போகின்றனஞ் எனக் கேட்டு வருக என்றனன்.

''என்னவற் குரைப்ப தென்ன
ஏந்திழை யாஞை விட்டுத்
தன்னுயிர் பெறுதல் நன்றே
அன்றெனில் தலைகள் பத்தும்
சின்ன பின்னங் களாகச்
செருக் களஞ் சேர்தல்நன்றே
சொன்னவை யிரண்டி னென்றே
துணிகெனச் சொல்லி டென்றான்''

—அங்கதன் தூது, 11.

இராவணனிடத்தில் இவ்வளவு இரக்ககங் காட்டி, அரச நெறியெனத் தம்பி கருத்தையும் மறுத்துரைக்கும் ஏந்தல் யார்? ஒரு சாரார் வழக்கைக் கேட்டு மறுதலையானை யழைத்து நீ என்ன சொல்லுகின்றனை என்று கேளாமலே அவனை அழித்த ஆண்மையன். தூது போகின்றவன் யார்? அண்ணல் இந்த இரக்கத் தைக் காட்டாமையினுல் தந்தையை இழந்த தனையனுகிய அங்கதன்.

இங்கே அன்று அப்படிச் செய்தார் இன்று இப்படிச் செய்கின்றனரே என அங்கதனுள்ளத் திலும் அருவருப்பு இல்லை. இவன் தந்தைக்கு இரக்கங் காட்டாத யான் இவனையே ஏவி மற்றொருவருக்கு மன்னிப்பு அளிக்க வேண்டுமா எனக் கேள் என்கின்றானே, இவன் ஒரு இளங் குழந்தையல்ல பேதையுமல்லன். அப்படியிருக்க இவன் நம்மை என்னதான் எண்ணுவன் என இராம பிரானுக்கும் உள்ளம் சுடவில்லை. ''தன்னெஞ்சறிவது பொய்யற்க பொய்த்தபின் தன்னெஞ்சே தன்னைச்சுடும்''. காரணம் என்ன? வாலிக்கு முன்னே இரக்கங் காட்ட முடியாத சூழ்நிலை வந்ததென்பது அனைவரும் அறிந்த செய்தி. ஆனுல் வள்ளல் பின்னர் அந்தக் குறை தீரத் தக்க ஒன்றைச் செய்து முடித்திருக்க வேண்டும். அத்தகுதியுள்ள செய லினுல் குறை தீர்ந்து தங்களுக்குள் மனக் குறை நீங்கி மன மகிழ்ச்சியுண்டாகியிருத்தல் வேண் டும் என்பது எளிதாக விளங்குகின்றதல்லவா? அதனைத் தேடுவோம்.

தனது உள்ளத்தில் ஒரு களங்கமும் இன்றி வள்ளல்தான் அங்கதனைத் தூது விட்டனனே. அந்த அங்கதன்தான் எப்படிப் பேசுகின்றனன். மன்னவர் பெருமானைப் பற்றி அவன் பேசுவது ஒரு மாசற்ற பேச்சல்லவா? அங்கதன் அச்சம் இன்றி இராவணனை அணுகினன். அவன் நீ யாரென்றனன்.

''பூத நாயகன் நீர்சூழ்ந்த
புவிக்கு நாயகன் அப்பூமேல்
சீதை நாயகன் மேல்நின்ற
தெய்வ நாயகன் நீசெப்பும்
வேத நாயகன் மேல்நின்ற
விதிக்கு நாயகன் தான்விட்ட
தூதன் யான்பணித்த மாற்றம்
சொல்லிய வந்தேன் என்றான்''

—அங்கதன் தூது, 21.

இராமபிரான் அங்கதனை நீ என்னைத் தலையெடுக்கச் செய்தனையெனப் பாராட்டினன் :

இலக்குவன் நெடும்போர் செய்து இந்திர ஜித்தினை வென்றனன். இளவல் வாளியால் அவன் தலை வெட்டுண்டு விழுந்தது. அப் பொழுது இளவலைத் தோளின்மேல் தாங்கி நின்ற அங்கதன் ஜித்தின் சிரத்தைக்கையில் ஏந்தி வந்து இராமபிரான் அடிகளின்பால் வைத்தனன். அச்செயலை மெச்சி அங்கதனை அரசர் கோமான் ஈசன் நீ என அழைத்தனன். யாருக்கு ஈசன்? வானரங்களுக்கு. வானரங் களுக்கு—ஈசன், வான—ரேசன். அண்ணல் அப்படி யழைத்து அப்பா நீ அரக்கன் தலையை எடுத்த நன்னிமித்தத்தினுல் இனி நான் தலை யெடுத்து விட்டேன், ஆளுகைக்குள்ள குடையும் எடுப்பேன் எனக் கூறிக் கூதூகலித்தனன்.

''தென்றலை யாழிசூழ்ந்த
திண்மதில் இலங்கை காக்கும்
புன்தலைக் கள்வன் பெற்ற
புதல்வனை யிளவல் வீழ்த்த
வன்தலை யெடுத்து நீமுன்
வருதலால் வான ரேசா
என்தலை யெடுக்க லானேன்
இனிக் குடையெடுப்பன் என்றான்''

—இந். வதை., 62.

இராமன் வாலியை வதைத்ததற்கு அழுதனன் :

மேகநாதன் பிரமாத்திரத்தால் குரங்கினத் தலைவர்களையும், குரங்கினம் முற்றும் இளவல் தன்னையும் ஈடழித்து விட்டனன். இராம பிரான் பாசறையிலிருந்து படுகளம் புகுந்து அக்கொடுமையைக் கண்ணுற்றுக் கலங்கினன். ஆற்றாது அழுகின்றனன். ''நான் ஒரு குடியின் முன்னவனைக் கொன்றேன். பின்னவனை அரசனுக் கினேன். அப்பெருங் குறையால் அவர்கள் இனத்தையே இன்று அழித்துவிட்டேன். எனது கையால் வில்லும் பிடித்துக் கொண்டு உதவிக்கு வந்த ஒருவருமின்றி அனைவரையும் பிணமாகக் காண்கின்றேன். நான் எனது பயனற்ற உட லைச் சுமந்து கிடக்கின்றேன் என வருந்தினன்.

''தமையனைக் கொன்று
தம்பிக்கு வானரத் தலைமை
அமைய நல்கினேன் அனைத்தையும்
கொல்வ தற்கமைந் தேன்
சுமை பிடித்துளேன் உங்களை
யித்துணை கட்டேன்,
சுமை உடற் பொறை
சுமக்க வந்தேன்எனச் சொன்னான்''

—பிரமாத், 196.

அண்ணல் வாலி, தன்பால் கொண்ட நம்பகத்தை நினைத்து அழுதனன் :

இராமபிரான் எதிரியின் பிரமாத்திரத்தால் அழிந்த பிணக் குவியல்களுக்கு இடையில் சென்று அங்கதன் உடலத்தைக் கண்டனன். அவனது கண்கள் உயிரின்றியும் தீப்பறக்கும் வீர நிலையிலிருந்தன. அந்நிலை கண்டு அண்ணல் ஆற்றொணாத் துயரம் அடைந்தனன். நான் ஒரு சுமையாளாயினேன். வில்லை நான் தக்க முறையில் பயன்படுத்தவில்லை. அன்பர்களை

அழிக்கவும், வன்பார்கள் எதிரில் வாளாவிருக்க வும் பயன்படுத்துகின்றேன். ஆதலால் நான் வில் சுமக்கும் சுமையாளாகத் திரிகின்றேன். படையற்ற வாலியைப் படைகொண்டு ஒழித் தழித்துப் பழியும் சுமக்கின்றேன். வழி முறை விட்டுப் பழிச்சுமை சுமக்கும் என்னைப் பார்த் திருந்தும், ஆதியில் என்பால் கொண்ட அன்பு மாறுதவனையினன் வாலி. அவன் தனது மகனை யிந்த வீர திலகனை எனக்குக்கையடையாக்கி னன். நான் கையடைப் பொருளை இவ்வளவு அழகாகக் காத்து விட்டேன் என விம்மி அழுத னன் வீரன்.

''விடைக் குலங்களின் நடுவணேர்
விடை கிடைத் தென்னக்
கடைக்கண் தீயுக அங்கதக்
களிற் றினைக் கண்டான்
படைக் கலங்களைச் சுமக்கின்ற
பதகனேன் பழி பார்த்து
அடைக் கலப்பொருள் காத்தவா
அழகி தென்று அழுதான்''

—பிர. 197.

இராமபிரான் எனது இல்லறமும் கெட்டது வில்லறமும் கெட்டது, இத் தீமைகள் தீரத் தவம்புரிவேன் என்றனன் :

வாலி செயல் முடிந்து சுக்கிரீபனுக்கு இளவலால் பட்டங் கட்டுவித்து, அவன் வந்து அடியில் விழ ஆசி கூறிய பின்னர், அவன் தனது நகரத்திற்கு வர வேண்டுமென இராமபிரானை வேண்டினன். அதற்கு வள்ளல் நான் பதினான்கு வருடங்களில் எந்த நகரத்திலும் இருத்தல் முறையல்ல, அன்றியும் நான் இருவித குறை பாடுகளை உடையவனையினேன். மனைவியைப் பிரிந்தேன். துயருறச் செய்தேன். என்னால் எனது வீர வில்லும் நாசமடைந்துவிட்டது. இந்த இரண்டு குறைகளையும் போக்கிக்கொள்ள வேண்டியவனாக இருக்கின்றேன்.

அதற்கு உகந்த இடம் இந்த மதங்காச்சிரமமே. கார் காலங் கழித்து நீ படைகளோடும் வருக. அது வரை நான் இங்கு வைகுகின்றேன் எனச் சுக்கிரீபனுக்குச் சொல்லியனுப்பினன்.

''இல்லறந் துறந்தி லாதோர்
இயற்கையை யிழந்து போரில்
வில்லறம் துறந்து வாழ்வேற்கு
இன்னன மேன்மை யில்லாச்
சில்லறம் புரிந்து நின்ற
தீமைகள் தீருமாறு
நல்லறம் புரிந்து நோன்பில்
நவையற நோற்பல் என்றான்''

—அரசியல், 43.

வாலி வள்ளலொடு ஒரு மனப்பட்டவன். அவன் அம்படி உண்டவுடன் இராமபிரான்பால் இரக்கங் கொண்டு எண்ணிய எண்ணம் இது. அது அப்படியே அல்லல் ஒருவாறு நீங்கி அமைந்திருந்த நேரத்தில், இராமபிரான் உள் ளத்திலும் உதித்தது எனக் கொள்ளக் கிடக் கின்றது.

''இல்லறந் துறந்த நம்பி
யெம்மனேர் பொருட்டால் தங்கள்
வில்ல றந்துறந்த வீரன்
தோன்ற லால்வேத நன்னூல்
நல்லறந் துறந்தது என்ன
நகைவர நாண் உட்கொண்டேன்''

—வா. வ., 73.

வாலி வழக்கின் மாட்சிமிக்க முடிவு :

இராமபிரானுக்கு வாலியை வதைத்த பிறகு தோன்றிய எண்ணங்களையும், அண்ணல் வெளியிட்ட கருத்துக்களையும், அண்ணல்பால் வாலியின் மனைவி தாரையும், மகன் அங்கதனும் கொண்டு வைகிய அளவற்ற பற்றுதலையும் கண்டோம். ஒருவருக்கொருவர் இவ்வளவு சிறந்த அன்புடையவர்கள், இடையில் வாலி யின் பெரும் பிரிவு நேரத்தில் எப்படி நடந்து கொண்டிருக்க முடியும் என்பதனை உன்னிப் பார்க்க வேண்டுமல்லவா?

இது வரையில் நாம் ஆராய்ந்து வந்த வற்றுல், இவ்வழக்கில் மறைந்திருந்து வேலை செய்த பெருந்தலைவன் அனுமன் என்பது தெளிவு. வாலியை அனுமனுக்குப் பிடிக்காமல் போனதற்குக் காரணம் உண்டு. அனுமன் வாழ்நாள் முழுதும் மாணவ நோன்புள்ளவன். விளக்க மென்ன? பிரமசரிய விரதன். இதற்கு நேர் மாறுனவன் வாலி எனத் தெரிகின்றது. ஒரு இனத்தில் எத்தனையோ குறைபாடுள்ளவர் கள் இருப்பார்கள். ஒரு நல்லவன் கருத்திற்கு அவையெல்லாம் வரலாமா எனக் கேட்கலாம். வரக் கூடாது. அனுமனுக்கும் வராது. ஆனால் வாலி ஒரு மூலை முடுக்கில் உள்ளவனல்ல. குல முதல்வன், பேராற்றலன், பெருமையில் ஒப் புயர்வு இல்லாதவன். அவனை ''எனைத் துணைய ராயினும் என்னும் தினைத்துணையும் தேரான் பிறனில்புகல்'' என எண்ணி விட்டனன் அனுமன். அனுமன் எண்ணம் வாலி தங்கள் இனத்திற்குத் தேவையற்றவன் என்றமுடிவிற்கு வந்துவிட்டது. வந்து என்ன செய்வது? தங்கள் இனத்தவர் பலமும் தனது முழு பலமும் கொண்டு அடர்ந்தாலும் அனுமனால் வாலியை அழிக்க முடியாது. அதற்காகக் ''காலங் கருதி யிருப்பர் கலங்காது ஞாலங் கருதுபவர்'' எனப் பொறுத்திருந்தனன் அனுமன். அவன் காற்று உள்ள பொழுது தூற்றிக் கொள்வதில்முனைந்து விட்டனன்.

இராமபிரானுக்குத் தேவி நீங்கிய பிறகு சிந்தனை மெலிந்துவிட்டது. அத்தேவியை அடைய யாரார் என்னென்ன வழிகளைச் சொல் லினர்களோ அவையெல்லாம் பிடித்தமுள்ள வழிகளாகவே தெரிந்து வந்தன. அவற்றை ஆய்வதில் கருத்துச் செல்லவில்லை. இடைவழி யில் இராமபிரானை மறத்தினால் அணுகிய கவந் தனும் அறத்தினால் அணுகிய சபரியும் சுக்கிரீ பனைத் துணை கொள்ளுவது தேவியை அடைவ தற்கு மிக்க உதவியாக இருக்குமென வழிகாட்டி விட்டார்கள். அவர்கள் காட்டிய வழியில் இராமபிரான் முழு மனதும் வைத்து நடக்க முற்பட்டு விட்டனன். அவ்விருவரும் வகுத்த அடிப்படையே சுக்கிரீபனுக்கு இராமபிரான் அளித்த வேண்டாத வாக்குறுதி.

சுக்கிரீபனை அணுகியபொழுதே அண்ணல் தான் அவனை ஆட்கொள்ளும் திறத்தில் பேச வில்லை. அவனைத் தனக்கு ஈடாகவும் இன்னும் கொஞ்சம் தன்னை விட அதிகனுகவுங்கூட எண் ணினன், பேசினன், ஏந்தலெனத் திடம்படக் கூறலாம். முதலில் இராமபிரான் ஈடற்ற சுக்கி ரீபனை ஐயா! என அழைத்தனன். அப்படி அழைத்துக் 'குற்றமற்ற சபரி உன் இருப்பினை எங்களுக்கு உரைத்தனள். நாங்கள் ஒரு பொருளைக் கைநழுவ விட்டுளோம். அதனால் பெருந் துன்பம் நேர்ந்துள்ளது. அத்துயரத்தை உனது உதவியினால் நீக்கிக் கொள்ள நம்பி வந் துள்ளோம். துணை வர வேண்டும்' என வேண் டிக்கொண்டனன்.

''மையறு தவத்தின் வந்த
சபரி யிம்மலையில் நீவந்து
எய்தினை யிருந்த மாற்றம்
இயம்பினள் யாங்கள் உற்ற
கையறு துயரம் நின்னால்
கடப்பது கருதி வந்தோம்
ஐய! நிற்றீரும் என்ன
அரிகுலத் தரசன் சொல்வான்''

—மராமரப், 63.

இங்கு இராமபிரான் வெள்ளை மனமாகச் சுக்கி ரீபனிடத்தில் ஒழுகினான். அவன் கள்ள மனத் தனுக இராமபிரானிடத்தில் ஒழுகினான். எங்கள் துயரம் உன்னால் தீரும் என்கின்றனன் இராமன். அவன் வாலி வதை இவ்வண்ணலால் ஆகுமா? எனக் கருதி மராமரத்தைத் துளைக்க வைத்துப் பார்க்கின்றனன். இங்கு ஏந்தல் தனது மரியா தையையும் வல்லமையையும் அவனுக்கு வாரிக் கொடுத்து விட்டனன். வள்ளலின் உளப் பாங்கு, தான் அவனுக்குச் செய்யப் போகின்றது சிறியதாகவும், அவன் தனக்குச் செய்யப் போகின்றது பெரியதாகவும் எண்ண நின்றது. அதனால்தான் உனக்கு உற்றவர் எல்லாம் எனக்கு உற்றவர், உனக்குப் பகைவர் எல்லாம் எனக்குப் பகைவர் என வாக்களிக்க நேர்ந்தது. இந்தத் தாராள வாக்குறுதி வாலியை நின்று நிதானித்துப் பார்க்க இடங் கொடுக்காமல் புறக்கணித்துவிட்டது.

இராமபிரான் சுக்கிரீபனைத் தனக்கு உதவி யாளனாகக் கருதுகின்றனன். அவனும் ஒருவருக் கொருவர் கைம்மாற்று செய்து கொள்ளக் கூடிய ஈடானவர்களாகக் கருதினன். வாலியோ தனது கேள்வியால் இராமபிரானுக்கு எத்தனை யோபடி தான் கீழ்மையானவன் எனத் தன்னை மதிக்கின்றனன். அவ்வாலியின் ஆற்றலை இவ னுக்கு வாக்களித்த பின் அறிந்தனன் வள்ளல். அவன் அன்பின் வெள்ளத்தை, அவனது உயிரை ஒய்வித்தபின் அறிந்தனன் பெருந்தகை. என்ன தான் செய்வது ஏந்தல்? ''நிலத்திற்கிடந்தமை கால்காட்டும், காட்டும் குலத்திற் பிறந்தார் வாய்ச்சொல்'' என்றபடி வாலியினது வாய்ச் சொற்கள் வளர வளர, ஓ! நான் இவ்வளவு அன்பனையா அடர்த்தேன் எனத் தளரத் தலைப் பட்டனன் தலைவன். வாலி இராமபிரானை முதல் தடவை வினவிய வினுக்களின் சுருக்கம், நான் எவ்வகையிலும் பகைவனல்லனே என்னை ஏன் அடர்த்தனை என்பதே. இராமபிரான் நீ எனக்குப் பகைவன் அல்ல. உனது தம்பி எனக்கு நண்பன். அவனுக்கு நீ தீங்கிழைத்தனை. அதனால் உன்னைத் தண்டித்தனன் என்றனன். அடுத்த தடவை தம்பிக்கு யான் செய்த தவறு எங்கள் குலதர்மப்படி குற்றமாகாது என்றனன் வாலி. வள்ளல் நீ பெரிய சிவபக்தன், கற்ற வன், அறமெலாம் விளங்கினவன், பெரியவன் செய்த பிழை பெரிய தண்டனைக்கு இடமா யிற்று என்றனன். ஓ என்னை உயர்ந்தவனுக மதித்தனையாதலால் ஒரு உயர்ந்த குற்றவாளி ஆக்கினை. நல்லது, இப்படி தண்டித்தது சரி, அதற்கு மறைந்து நின்றதேன்? வெறுங்கையன் மேல் வில்லெடுத்ததேன்? எனக் கேட்டுவிட்ட னன் வாலி. அந்த வாலியின் சொல், ''பிறி தோர் சொல் தன்சொல்லை வெல்லுஞ்சொல் இல்ல'' தாயிற்று. மாண்பிற் சிறந்த மன்னவன் ''தீயவழுக்கியும்'' சொல்ல இசையாததாயிற்று. ஒரு பெருந்தலைவன் இடருறும் நேரத்தில் தனக்கு இசைந்த ஒன்றைச் செய்ய வேண்டிய இளவல் ஒரு கட்டுரையைக் கூறினன். அது கட்டுரை எனத் தெரிந்தும், தனது குற்றம் குற்றமே அதற்குத் தீர்வு தனது மனம் மதித்த தொரு தலைமகனால் நேர்ந்ததும் ஒரு நற்செயலே என்ற மனப்பாங்குடன் தனக்கு விடையை நாடாமல் விடுதலையில் விருப்பமாகி உள்ளம் ஒருப்பட்டு உயர்ந்தனன் வாலி.

இராமபிரான் மீது தான் சுமத்திய குற்றங் களை அடியோடு விட்டுவிட்டுத் தனது தம்பிபால் தான் செய்ய நேர்ந்த இராமனால் வெறுக்கப்படு கின்ற குற்றங்களுக்கு மன்னிப்பும் கேட்டுக் கொண்டனன் வாலி. இச்செயல் சான்றாண்மை யின் பாற்பட்டது. இராமபிரானிடத்தில் தோல்வியைக் கொள்ளுவதில் அவன் முந்திக் கொண்டவனுகி விட்டனன் ''சால்பிற்குக் கட்டளை யாதெனில் தோல்வி துலையல்லார் கண்ணுங் கொளல்''. பிறகு வாலி பேசிய அனைத்தும் மனிதத் தன்மையுள்ள எவரையும் உணர்ச்சி வசப்படுத்துவனவாகும். பாரதக் கதையில் ஒரு இடம் உண்டு. துரியோதனன், தருமனைச் சீரழிக்க எத்தனையோ வழிகளைக் கண் டனன். அவற்றுள் கடைசியாகக் கண்டது ஒன்று. அது ஒரு நல்லவனையே கொண்டு அந்த நல்லவனைத் தொலைப்பது. அதற்கு அவன் தேடிப் பிடித்தது துர்வாச முனிவனை. அம் முனிவனுக்குப் பெரும் பூசனை செய்து விருந் திட்டனன் ஒரு நாள். முனிவன் மகிழ்ந்து உனக்கு வேண்டிய வரத்தைக் கேள் என்றனன். துரியன் நாளை இப்பகல் நேரத்தில் வனத்தில் வைகும் தருமனிடத்தில் சென்று உங்கள் திருக் கூட்டத்துடன் உணவு கொள்ள வேண்டும். இது தான் எனது வேண்டுகோள் என்றனன். அப்ப டியே முனிவன் சென்றனன். வரவேற்ற தருமன் குளித்து வருக என்றனன். முனிவன் வருவதற்குள் கண்ணனை வேண்ட அவ்வண்ணல் வந்து ஒரு பருக்கையைத்தான் உண்டு, மாதவர் பசியை ஆற்றினன். நாடறிந்த கதை இது. இதில் தருமன் செயலுக்கு மகிழ்ந்த மாதவன் நேற்று துரியனுக்கு வரம் கொடுத்தேன். உனக்கு வேண்டுவதுளதேல் கேள் என்றனன். தருமன், முனிவர் பெரும! அத்துரியன் அயலா னல்லன். அவன் எனது தம்பி. உங்கள்பெருமை நினையாது பிழை செய்து விட்டனன். அவன் என்னைப் பகைத்தாலும் நான் அவனைப் பகைத்

தல் எப்படி? அவன் சிறியவன். நான் அவனுக்கு மூத்தவன். ஆதலால் அவன் உங்களைக் கேட்டுக் கொண்ட கெட்ட கருத்துள்ளவரத்தை எண்ணி அவன்மேல் பெரு வல்லமையுள்ள உங்கள் கோபம் வராதிருக்க வேண்டும். எனக்காக அவனுக்குச் சாபம் ஒன்றும் இடாதிருக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டானும். ''பகைத்தோர் மாற்றங்கள் கருதி ஒன்றும் செய்யாதி யென்றுன் வளையாச்செங்கோலான்''. அற நுணுக்கத்தில் ஆழங்காற்பட்ட இடங்கள் இவைகளெல்லாம். அதுபோல வாலியும் தனது குற்றத்தை மன்னிக்க வேண்டுகின்றவன் தன்னைப் பற்றி ஒழுங்காகத் தெரிவித்து, அண்ணல், பேச்சில் தீர்த்துவிடக் கூடிய ஒன்றிற்குப் பெரும் படையெடுக்கச் செய்துவிட்ட சுக்கிரீபன் குற்றத்திற்கும் தான் மன்னிப்பு வேண்டினுன் இராமபிரானிடத்தில் என்றஇடம் எவ்வளவு வாலியின் அதி நுட்பமான அற நெறியைக் காட்டுகின்றது என்பது மகிழத்தக்க தல்லவா? ''நாயெனநின்ற எம்பால் (என் பாலல்ல) தீயனபொறுத்தியென்றுன்''

158619

பின்னும் வாலி தம்பியை அணைத்து அழுது அண்ணலுக்கு அறிமுகஞ் செய்து வைக்கின்றனன். எப்படி? தன்னைக் கொல்லக் கூடி வந்தவனுக்கு கொன்று முன்னிற்கும் பெருந்தகையைக் கொல்லுண்டு துடிப்பவன் அறிமுகஞ் செய்து வைக்கின்றனன். எந்தக் காவியத்தில் இப்படிக் காண முடியும்? பிறகு தன் மகனைத் தருகின்றனன். அடைக்கலப் பொருளாக. இது வாலியின் மூன்றுவது முறை விளக்கங்கள். இவற்றுள் இரண்டாவது முறையோடு இராம பிரான் பேச்சு நின்றது. மூன்றுவதான வாலி பொறுமை கோரல், தன்னுல் உதவ முடியாமைக்கு வருந்துதல், கையடைகள் தருதல், அனுமனை வேறை அறிமுகஞ் செய்வித்தல், அத்தனைக்கும் இராமபிரான் என்ன செய்திருப்பன் ''மூளாத்தீப் போல் உள்ளே கனன்று''தான் வருந்தியிருப்பன், அல்லவா?

வாலி மகன் அங்கதனைக் காட்டி இவன் உனது அடைக்கலம் என்று சொல்லி இராமன் அடிகளில் வணங்கினன். இது வாலியின் மூன்றுவது வணக்கம். முதல் வணக்கம் மன்னிப்புக் கேட்டபொழுது. இரண்டாவது வணக்கம் தம்பி சுக்கிரீபனை வள்ளலுக்குச் சுற்றத்தோடும் அடைக்கலம் தந்த அப்பொழுது, மூன்றுவது, மகனை அடைக்கலம் தரும் இப்பொழுது.

அண்ணலுக்குள்ள பொறுப்புகள் இங்குப் பல. வாலி வேண்டுகோளைத் தான் ஒத்துக் கொண்டனனு இல்லையா என்பதனை வெளியிட வேண்டும். வாலி மேல் வந்த தனது கோபம் மாறிற்றுர இன்னும் இல்லையா என்பதும் தெளிவாக வேண்டும். அவன் தனது செயலுக்கு வருந்தி மன்னிக்க வேண்டினன். வள்ளல், தான் செய்தது முற்றிலும் சரிதானென்று சாதிக்கின்றனனு, இது தவறுக முடிந்தது எனத் தனது செயலில் நின்று போதிக்கின்றனனு என்பதும் வெளியாக வேண்டும். மேலும் இத்தனை வேண்டுகோளும் விடுத்த வாலிக்குப்பொறுத்துச் சொல்லுவோமென எண்ண இடமேயில்லாத நேரம் இது. வாலிக்கு நிற்க நேரமில்லை. உடலில் உயிர் ஒட்டிக் கொண்டிருக்கின்றது. பிரிந்து பறக்க வள்ளலின் வாய்ச் சொல்லை எதிர் பார்க்கின்றது. ''தன்னடி தாழ்தலோடும் தாமரைச் செங்கணனும் பொன்னுடை வாளை நீட்டி நீ யிது பொறுத்தி என்றுன்''. இராம பிரான் தாள்களில் வீழ்ந்து வணங்குகின்றனன் ஒப்புரவில் உலகத்திற்கே ஒருவன் எனச் சொல்லத்தக்க வாலி. எதிர் நிற்பவன் யார்? தாமரைச் செங்கணன். (''கண்ணிற்கணிகலம் கண்ணேட்டம் அஃதின்றேல் புண்ணென்றுப்படும்'') கருணைக் கண்ணனுன அண்ணலுக்கு இங்கு இரு வித வேலைகள். வணங்குபவனைக் கைகொடுத்து எடுக்க வேண்டும். எடுத்த பின் அவனை வாயார வாழ்த்த வேண்டும். சமத்துவமுள்ள அல்லது ஒருவரை ஒருவர் உற்றறியாத இருவர் கூடுகின்றபொழுது ஒருவன் வணங்கியவுடனே எதிர் வந்தவரும் ஈட்டிற்கீடாக வணங்குவதுதான் உலக இயல்பு. ஆனுல் எல்லா இடத்திலும் இது முறையாகாது. ஒரு ஆச்சாரியன் எதிர் வரும் சற்சீடன் வணங்குகின்றபொழுது அவனை ஆச்சாரியனும் சமமாகக் கருதி வணங்கி விடவாகாது. ஒருக்கால் அப்படி ஆச்சாரியன் வணங்கினுல் அதற்காகச் சீடன் மகிழமாட்டான். அச் சீடன் குருவிற்கு வேண்டா வெறுப்பன் என்றுதான் பொருள்படும். இங்கே இராமபிரானை உலக உத்தமனுக, தேவ தேவனுக மதிக்கும் வாலி வணங்குகின்றுன். இராமனும் அப்படியே வணங்கினுல் அவ்வணக்கங் கண்டுவாலிமகிழ்ந்து விடமாட்டான். அவன் மேலும் துடிதுடிப்பான். இராமபிரான், அரசர்களுக்கு அவர்களது சிரத்திலும் சிறந்ததாகக் கருதப்பெறும் உடைவாளை வாலிக்கு எதிராக நீட்டினன். வாலியை வெட்டு முகத்தாலல்ல, வாலியின் தோள்களைத் தொட்டுத் தூக்கிவிடும் பாவனையாக.

வாலியை அவன் விளைகளை வேண்டுகோள்களை ஏற்றுக் கொண்டாயிற்று என்று விளங்கிற்று. இனி வாழ்த்த வேண்டும். வாலி இராம பிரான் வாழ்த்துக்களை எதிர் பார்க்கின்றனன். ஆனுல் உள்ளத்திற்குள் ஒரு குறைபாடு வந்து விட்டால் அதனைத் தீர்த்துக் கொள்ளும் வரை உயர்ந்த உள்ளங்களுக்கு அமைதியுண்டாகாது. பரம பக்தன் நெஞ்சில் தனது கணை பாய்ந்ததே என்ற வருத்தத்தில் நிற்கும் வள்ளல் வாழ்த்துவது எங்கே? அவ்வருத்தத்தை மாற்றிக் கொண்டால் வாழ்த்தியதுபோலத்தான். உள்ளத்துள்ள குறைபாடுகள் எப்படி மாறும்? வாய் வழியாகத் தான் மாறும். வாளாவிருந்த வள்ளல் வாய் திறந்தனன். அவன் வாய் திறந்து பேசியது என்ன? அண்ணலை வாலி முன்பு பேசியதையே தான் இப்பொழுது பேசினன். வாலியென்ன பேசினன்? ''தீயனபொறுத்தி'' என்றுன். வள்ளல் வாளை நீட்டி வாயைத் திறந்து என்ன பேசினன்? ''நீ யிது பொறுத்தி என்றுன்''.

''தாயென வுயிர்க்கு நல்கித்
தருமமும் தகவும் சால்பும்
நீயென நின்ற நம்பீ
நெறியினில் நோக்கும் நேர்மை
நாய் என நின்றஎம்பால்
நவையற வுணர லாமே
தீயன பொறுத்தி யென்றுன்
சிறியன சிந்தி யாதான்''

—வாலி வதை, 119.

''தன்னடி தாழ்தலோடும் தாமரைச் செங்கணனும் பொன்னுடை வாளோநீட்டி நீயிது பொறுத்தியென்றான்'', ''செங்கணனும்'' என்ற உம்மை எண்ணும்மை. அது முன்னே வாலியும் இராமனைப் பொறுக்கும்படி வேண்டிக்கொண்டனன். இப்போது வள்ளலும் வாலியை நடந்துவிட்டதை 'இது' என்ற குறிப்புச் சொல்லினால் விளக்கி, பொறுத்தி என்றான். வாலி முன்னமே பொறுத்துக் கொள்ளென்று கேட்டுக் கொள்ள இராமபிரான் இவ்வளவு காலங்கழித்து அப்படி வேண்டியதேன்? இராமபிரான் நிலைகளை அவன் முன்னமே கேட்டறிந்திருந்தவன் ஆதலால் இராமன் பண்புகள் ஊறிக்கிடந்த வாலியின் உள்ளம் விரைவாக முடிவிற்கு வந்துவிட்டது. உண்மையைச் சொல்லுவாரின்றி வாலியின் பண்புகளை நேரில் அவனது செயலைக் கண்டும் சொற்களைக் கேட்டுமே இராமபிரான் உணர்ந்து கொண்டே வரவேண்டியிருந்ததனால், காலங் கழித்து ஒரு முடிவில் ஊன்ற வேண்டிவந்தது இராமபிரானுக்கு. வாலியின் செயல்களில் இவ்வளவுங் கண்டு தனது மகனை அடைக்கலந் தரும் நிலைமிக உயர்ந்த இடத்தைப் பெற்றுவிட்டது.

''கற்பிளவோடொப்பர் கயவர் கடுஞ்சினத்தில்
பொற்பிளவோ டொப்பாரும் போல்வரேவிற்
நீர்கிழிய எய்த வடுப்போல மாறுமே [பிடித்து
சீர்ஒழுகும் சான்றோர் சினம்''

என்றபடி, ஒன்றுபட்ட இரு பெரு மக்களில் ஒரு அருமகன் உள்ளக் கிடக்கையை உயர்ந்து நின்றது முன்னமே உலகம். வாலி ''தீயன பொறுத்தி'' யென்றனனே அப்பொழுதே அவனது உள்ளக் கிடக்கையை உலகம் அறிந்து கொண்டது. இராமன் பண்பு வாலிக்கு உயர்ந்ததா தாழ்ந்ததா எனப் பட்டிமண்டபமா அமைக்க வேண்டும்? அவ்வாலியேதான் ஆயிர முகத்தால் உயர்ந்தது உயர்ந்தது என ஓயாது உரைத்து வருகின்றனனே. உரைத்து வருகின்றான். அவனுரைத்ததைக் கொண்டு ஒத்துக் கொள்ளுவது எப்படி? அவன் உரையினளவு அண்ணலின் உள்ளமும் வெளிப்படத் தோன்றுதபொழுது உலகம் எப்படி ஒத்துக்கொள்ளும்? இமை கொட்டும் நேரம் இமை கொட்டும் நேரமாகவும், அண்ணலின் சொல்லை எதிர்பார்த்துக் கொண்டிருந்தன ஏழுலகங்களும். அவன் ''நீயிது பொறுத்தி'' என்றனன், என்னலும் உலகமேழும் ஏத்தின.

இராமபிரான் உலகத்தை ஆண்டனன். பெருமையுற வாழ்ந்தனன். என்னென்ன சிறப்புகளோ பெற்றனன். ஆனால் இராமபிரானை உலகலொம் ஏத்தியது இரண்டு முறைதான். இராவண யுத்தம் முடிந்துவிட்டது. தேவி மீண்டும் வந்தாயிற்று. வானவர் பூமாரி பொழிந்து அங்குற்றனர். அண்ணலைப் பெற்ற பெருமகனும் அகமகிழ்ந்து அங்குற்றனன். பெருந்தகை தசரதன் அடிகளில் தாழ்ந்தனன் தலைமகன். அவனை வாரியணைத்தனன் தசரதன். அணைத்து உனக்கு வேண்டிய வரங்களைக் கேள் என்றனன் பேரரசன். இராமபிரான், தந்தையே என் பொருட்டாக நீங்கள் இருவரை முன்னே கொடியவர் எனக் கொண்டு விலக்கி விட்டீர்கள். அவரிருவரும் எனக்குரியார், எனது முதல் தெய்வம் (கைகேயி) ஒன்று, எனது தம்பி மற்றவன். இருவரையும் முறையே எனக்குத் தாயாகவும் தம்பியாகவும் தருதல் வேண்டும். இப்பெரு வரத்தினும் யான் பெறத் தகுந்த பேறு ஒன்றுமில்லை என வேண்டிக்கொண்டனன். அரசன் அவர்களைச் சேர்த்துக் கொள்ளாவிடின் தனக்குத் தாயாகவும் தம்பியாகவும் ஆதல் உலகம் ஒப்பும் முடிவாகாதாதலால் வள்ளல் இப்படிக் கேட்டனன். இராமபிரான் உள்ளத்தின் பேராழத்தில் கைகேயிக்கும் இடமிருந்தது என அறிந்த பெருமகிழ்ச்சி உலகத்தையே உருக்கிவிட்டது. அப்பொழுது உலகெலாம் இராமபிரானை வாழ்த்தி அவன் திறத்தில் ஆழ்ந்துவிட்டன. அது போலவே ;

வாலியின் அன்பின் பெருக்கை ஒத்துக் கொண்டு, பரமனுகிய இராமபிரான் பக்தனிடத்தில் படும் தனது தோல்வியை வரவேற்று அவன் ''பொன்னுடைவாளை நீட்டி நீயிது பொறுத்தியென்றான் என்னலும் உலகம் ஏழும் ஏத்தின ;

தசரதன்பால் அண்ணல் கேட்ட வரம் :

''ஆயினும் உனக் கமைந்ததொன் றுரையென அழகன்
தீயள் என்றுநீ துறந்தனன் தெய்வமும் மகனும்
தாயும் தம்பியும் ஆம்வரம்தருகெனத் தாழ்ந்தான்
வாய்திறந்தெழுந் தார்த்தன வுலகெலாம் வழுத்தி''
—மீட்சிப் படலம், 126.

பொறுத்துக்கொள்கவென வாலியை வேண்டியதற்கு இராமபிரானை உலகம் ஏந்தியது :

''தன்னடி தாழ்தலோடும் தாமரைச் செங்கணனும் பொன்னுடை வாளைநீட்டி நீயிது பொறுத்தியென்றான்
என்னலும் உலகம் ஏழும்ஏத்தின இறந்துவாலி அந்நிலை துறந்துவானின் அப்புறத் துலகன் ஆனன்''
—வாலி வதை, 152.

இங்கு இராமபிரான் உள்ளத்தால் பொய்யாது ஒழுகினன். அதனால் உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உளனாகினன் அல்லவா?

''உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உளன்''



ஆளுநர் அவர்களின் ஆலோசகர் திரு. R. V. சுப்பிரமணியம் I.A.S., அவர்கள், தமது குடும்பத்தினருடன் திருத்தணிகை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு, 7.1.77 அன்று வருகை தந்து வழிபடுதல்.

சென்னையில், 2.1.77 முதல் நடைபெற்றுவரும் அகில இந்தியச் சுற்றுலா வர்த்தகப் பொருட் காட்சியில் அறநிலையத்துறையின் காட்சிப் பகுதியினை, நமது அறநிலைய ஆணையர் திரு. எம். கே. பாலசுப்பிரமணியம், I.A.S., அவர்கள், திறந்து தொடங்கி வைத்தலும், பார்வையிடுதலும்.

வெளியிடுபவர்; ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, சென்னை-600034.
ஆசிரியர் : ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.
அச்சிடுவோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.